# விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

பொதுப் பதிப்பாசிரியர்

**கு. தாமோதரன்**

இயக்குநர்

தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 600 113.

பதிப்பாசிரியர்

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**

காப்பாட்சியர்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

சென்னை 600 005.

©

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

1999

[விலை ரு. 60]

# விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

அ. கீ. சு. நூலக வெளியீடு எண் : 438
தமிழ் நூல் வெளியீடு எண் : 122

# விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

பொதுப் பதிப்பாசிரியர்
கு. தாமோதரன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

பதிப்பாசிரியர்
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

©
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
1999

முதற் பதிப்பு 1999
பிரதிகள் 500

விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

© தமிழ்நாடு அரசு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

பொதுப் பதிப்பாசிரியர் :
திரு. கு. தாமோதரன்
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

பதிப்பாசிரியர் :
முனைவர் க. சௌந்தரபாண்டியன்
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

வெளியீடு :
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5

விலை : ரு.

அச்சிட்டோர் :
தொல்பொருள் ஆய்வுத்துறை
தரமணி
சென்னை-113

G.O.M.L. Publication No. 438
Tamil Publication No. 122

# VISWAMITRA SWAMY VAKKIAM

*General Editor*

**K. DAMODARAN**
Director
Department of Archaeology

*Editor*

**Dr. S. SOUNDARAPANDIAN**
Curator
Government Oriental Manuscripts Library

©

Government Oriental Manuscripts Library
1999

First Edition 1999
No. of Copies : 500

VISWAMITRA SWAMY VAKKIAM

© Government Oriental Manuscripts Library

General Editor :
THIRU. K. DAMODARAN
Director
Department of Archaeology

Editor :
DR. S. SOUNDARAPANDIAN
Curator
Government Oriental Manuscripts Library

Price : Rs.

Published by :
Government Oriental Manuscripts Library
Chennai - 5

Printed at :
Department of Archaeology
Tharamani, Chennai - 113

# அணிந்துரை

விசுவாமித்திர சுவாமி வாக்கியம் என்னும் நூலின் பெயரைப் பார்க்கும் போது இது ஏதோ சுவாமி அருளிய வாக்கியம் என்று தான் எண்ணத் தோன்றும். ஆனால் இதுவரை அச்சில் வெளி வராத இந்நூல் சித்த மருத்துவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இந்நூல் மருத்துவ நூலாக மட்டுமல்லாமல் தமிழரின் ஒரு அறிவியல் நூலாகவும் கொள்ளலாம். சித்தர்கள் மருத்துவ நூல் களைப் பாடலாக எழுதியுள்ளனர். ஆனால் இந்நூல் உரை நடையில் அமைந்துள்ளது சிறப்பாகும்.

என்னென்ன இரசாயனப் பொருள்களைக் கொண்டு மருந்து தயாரிக்கப்படுகிறது என்ற குறிப்பு பயன் உள்ளதாக உள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் மருத்துவர்கள் அயராது உழைத்து தோன்றி வரும் புதுப்புது நோய்களுக்கு மருந்து தயாரிப்பதில் தொய்வின்றி ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு இந்நூல் மூலச்சான்றாக விளங்குகிறது. இந்நூல் கி.பி. 17-18ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகும். இந்நூலில் கையாளப்பெற்றுள்ள சொல்லாட்சி ஆய்வுக்குரியது. இருமலுக்கு பாடல் என்ற தலைப்பில்,

நெல்லி திப்பிலி நெல் பொறி சர்க்கரை
நல்ல தேனில் நறு நெய்யில் தின்றிட
இல்லையில்லை இருமலும் ஈளையும்
தில்லையம்பலநாதர் தன் ஆணையே
நீடு மாதுளை நெல் பொறி சர்க்கரை
தேடும் திப்பிலி தேனில் குழைத்திடில்
பீடை ஈளையும் பெருவிக்கல் சத்தியும்
ஓடிஓடி ஒளிந்திடும் உண்மையே

என்று நூலாசிரியர் குறிக்கின்றார்.

விசுவாமித்திர சுவாமி வாக்கியம் என்ற இந்நூலை பதிப் பிப்பதற்கு பல்வேறு வகையில் முயற்சி எடுத்துக் கொண்ட காப் பாட்சியர் முனைவர் சு. சௌந்திரபாண்டியன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறை அச்சுப்பிரிவினர் இப்புத்தகத்ினை மிக விரைவில் அச்சிட எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என்னுடைய பாராட்டுக்கள். உதவிப்பணி மேலாளர் திரு. செங்கல்வராயன் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். குறித்த காலத்தில் புத்தகம் வெளிவர வேண்டுமென்று சொன்னவுடனேயே மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டு பணியினை முடிப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்கு அச்சுப் பிரிவினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவர்கள் ஆற்றும் பணி துறைக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது.

இப்படிக்கு,
**கு. தாமோதரன்**

# விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

## பதிப்புரை

இம் மருத்துவ நூல் இதுவரை அச்சில் வெளிவராதது ஆகும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில், டி. 1975, ஆர். 1048 ஆகிய இரு எண்களில் உள்ள இரு சுவடிகளிலிருந்து இந்நூல் இப்போது பதிப்பிக்கப்படுகிறது.

இந்நூலின் தனிச்சிறப்பு யாதெனில், இதிலுள்ள இரசாயனப் பொருட்களே!

தமிழரின் அறிவியல் அறிவுக்கு இந்நூல் தனிப்பெரும் சான்று; இதற்காகவே இங்கு இது பதிப்பிக்கப்படுகிறது.

இதில் நுவலப்படும் மருந்துப் பொருட்களால் பயன் உண்டா இல்லையா என்பதைக் காலமே சொல்ல வேண்டும்! ஆனால், இதிற் கூறப்படும் இரசாயனப் பொருட்களின் தயாரிப்பு முறைகள் (Preparing methods), வியப்பூட்டும் தன்மையின!

பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழரிடம் இத்தகு அறிவியல் உண்மைகள் இருந்தும், உலகு இதுபற்றி இன்னும் கூட அறிய வில்லையே!

தமிழகத்தில் தொன்று தொட்டு, பல குடிகள் தமிழ் மருத்துவத்தில் உழைத்து வருகின்றன!

சென்னை, மதுரை, திருச்சி, நாகர்கோயில் பகுதிகளில் பல குடிகள் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மருத்துவத்தில் ஈடுபட்டு வந்தன; இன்றும் கூட இப்பரம்பரையினர் வாழ்ந்து வருகிறார்கள்!

மருத்துவம் செய்யத் தொடங்கி, பிறகு இரசவாதம் (Alchemy) கற்று, அதில் தோல்வியுற்றுப் போனவர்கள் எத்தனையோ!

இரசவாதம் செய்யப்போய், மருத்துவம் கற்று, மருத்துவராக ஆனவர்கள் எத்தனையோ!

"வாதி கெட்டு வைத்தியன் ஆனான்" என்றே மருத்துவ உலகில் ஒரு பழமொழி உளது! வாதி-இரசவாதம் செய்பவன்.

**இரசவாதம் என்பது தமிழர்கண்ட அறிவியல் ஆகும்!**

1000 ஆண்டுகளுக்கு முன்பே இது தமிழகத்தில் நன்கு வேரூன்றியிருந்தது என்று கூறலாம்.

சிவனே, ஒரு தாசிக்காக இரசவாதம் செய்து, பாத்திரங்களைத் தங்கமாக ஆக்கித்தந்தான் என்று கதைகள் உள்ளன!

இரசவாதத்தின் தொன்மைக்கு இது ஒரு சான்று!

இன்றும்கூடப் பலர் இரசவாதம் செய்து தங்கத்தை உருவாக்க முயற்சி செய்கிறார்கள்! அரசு கீழ்த்திசை சுவடி நூலக ஓலைச் சுவடிகளைக் குடைந்து குடைந்து ஆய்கிறார்கள்! ஆனால், வெற்றி பெற்றால், நமக்குச் சொல்லுவதில்லை!

சிலர் இரசவாதம் செய்கிறேன் என்று ஒத்துக் கொள்ள மாட்டார்கள்! "சும்மா இப்படியே சில மருந்துகளைப் பார்க்கிறேன்" என்று கூறி வருவார்கள்; அவர்களின் கண் எல்லாம் தங்கம் செய்யும் முறையிலேயே இருக்கும்.

"இரசவாதம் செய்து சிலர் பணக்காரர்களாக ஆகிவிட்டார்கள்" என்று கூறுவோர் இன்றும் உள்ளனர்.

"வடலூர் வள்ளலார், இரசவாதம் செய்து, இரும்பைப் பொன்னாக்கும் கலையில் வெற்றிபெற்றார்" என்று கூறுவோர் உளர்.

தமிழ் மருத்துவத்திலும், தமிழ் மருத்துவ நூற்களிலும் சிலர் ஒப்பற்ற திறமை பெற்று விளங்குகின்றனர்! அவர்கள் பெயர் களைத் தமிழகம் அறியாமல் இருக்கிறது! யாரோ ஓரிருவர், தங்களின் வேறு திறமைகளால், மேலே வந்து விடுகிறார்கள்!

உலகுக்குத் தெரியவராமல் இருக்கும் அப்படிப்பட்ட மருத்துவ அறிஞர்களில் குறிப்பிடத் தக்கவர் மதுரை **ஏ. என். அனுமந்தன் ஆச்சாரி** அவர்கள் ஆவார்.

**ஏ. என். அனுமந்தன்** அவர்கள், தற்போது சென்னையை அடுத்த திருநின்ற ஊரில் வசிக்கிறார்கள். இவரே சில மருந்து களையும் முடித்து, ஆங்கில மருத்துவர்களுக்கே வழங்கியும் வருகிறார்!

விசுவாமித்திர சுவாமி வாக்கியம் எனும் இந்த நூல் வெளியிடத் தக்கது என்று இதன் அருமையைப் பலவாறாகப் புகழ்ந்தவர் **ஏ. என். அனுமந்தன்** ஆவார்.

அரசு கீழ்த்திசை சுவடி நூலகம் தற்போது தமிழாய்வில் முழு மூச்சாக இருப்பதை அறிந்து பல அரிய பழந்தமிழ் மருத்துவ நூற்களை **ஏ. என். அனுமந்தன் ஆச்சாரி** அவர்கள் அரசு கீழ்த் திசை சுவடி நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கி உள்ளார்கள்.

இந்த நூலில் எத்தனையோ தொழில் நுட்பச் சொற்கள் (Technical terms) பயின்றுள!

இப்படிப்பட்ட சொற்களெல்லாம் தமிழர்களால் உருவாக்கப் பட்டன என்பதை அறிய, மனம் களிப்படைகிறது!

பாதரசம் ஒரு நீர்ப்பொருள் (liquid) அல்லவா?

ஆனால் இதையே, வேறு பொருட்களுடன் சேர்த்து; ஒரு கட்டிப் பொருளாக ஆக்கிவிடுகின்றனர்! இதற்குக் கட்டுதல் என்று பெயர். கட்டிய இந்தப் பாதரசத்தை ஒரு கூழாங்கல் போல வைத்துக் கொண்டு, அதை உறைத்து மருந்துப் பொருளாகத் தருகின்றனர்! வியப்பான வியப்பு! இந்த மாயத்தைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு செய்து காட்டியவர்கள் தமிழர்கள்!

ஆனால் ஆங்கில மொழி வெள்ளத்தில் இவையெல்லாம் மூழ்கடிக்கப்பட்டன!

மேலே சொன்ன கட்டும் முறையில் பல பொருட்களைக் கட்டினர் நம் முன்னோர்! வெங்காரம், நவச்சாரம் முதலியவற்றை அருமையாகக் கட்டி, மருந்துக்குப் பயன்படுத்தினர் தமிழர்!

சீலைமண் என்பது மற்றொரு தொழில்நுட்பம் ஆகும்!

செலவே இல்லாமல், காற்றுப்புகாமல் அடைக்கும் முறைதான் சீலைமண்!

வேறு ஒன்றுமல்ல, சுமார் 2 அங்குல அகலமும், 1½ அடி நீளமும் கொண்ட ஒரு துணியில், சுத்தமான, ஈரமான களிமண்ணைப் பூசி அதை பாண்டத்தின் மூடியின் பொருத்து வாயைச்சுற்றி, இடைவெளி வெளியே தெரியாதவாறு சுற்றிக் கட்ட வேண்டும்; ஈரத்தோடு கட்டினால், ஈரம் உலர்ந்ததும் காற்றுகூட அந்தப் பாண்டத்தின் உள்ளே புகாது! அதே நேரத்தில், உள்ளே இருக்கும் மருந்துக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது!

மிக எளியதாக இம்முறை இருப்பதால், இதை நாம் ஏளனமாகப் பார்க்கக் கூடாது! இதையே ஆங்கிலேயன் சொன்னால், ஆகா ஓகோ என்று கூப்பாடு போடுவோம்!

அரிய பெரிய தொழில் நுணுக்கங்களைத் தெரிவிக்கும் இந்நூல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பின்புதான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஆயினும், இந்நூல் தெரிவிக்கும் தமிழர் அறிவுகள் அதற்கும் முந்தையவை எனக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, நம் நாட்டில், ஒரு கருத்தை அதிலும் செய்தொழில் பற்றிய கருத்தை மற்றவர்களுக்கு எளிதில் கூறிவிடமாட்டார்கள்!

தொன்றுதொட்டு இன்றுவரை இப்பழக்கம் இருந்து வருகிறது!

இப்பழக்கத்திற்கு மருத்துவர்களும் விதிவிலக்கல்ல!

மருத்துவர்கள், தங்களின் மருந்து முறைகளைக் கூறும்போது, பிறர் அறியக்கூடாது என்பதற்காகவே, அதில் சில பொருட்களின் பெயர்களைப் பரிபாடையில் கூறிவிடுவர்! "யானைச் செடியைப் பிடுங்கியரை" என்று எழுதிவிடுவார்கள்! யானை - அத்தி; ஆகவே அத்திச்செடியை நாம் நோக்கவேண்டும்! இதுதான் 'பரிபாஷை' என்பது!

பழங்காலத்தில்தான் இப்படி என்று நினைக்கிறீர்களா?

இப்போதும், மறைத்துக்கூறும் முறை தொடர்கிறது!

நிறுவனங்கள் தயாரித்து விற்கும் இந்திய முறை மருந்துப் புட்டிகளில் எழுதப்பட்டிருக்கும் சரக்குகளைப் பார்த்தால், இது விளங்கும்! ஒழுங்காகச் சில பொருட்களைத் தெரிவித்து வரும்போது, இடையில் வேண்டுமென்றே வேப்பிலைக்குப்பதில் அரசம் இலை என்று அச்சிட்டு வைப்பார்கள்! எவரும் தனது இரகசியத்தை அறியக்கூடாது என்பதற்காக இது!

இங்கே பதிப்பிக்கப்படும் நமது இந்த நாளிலும்கூட, மறைப்பாகச் சில பொருட்கள் கூறப்பட்டிருக்கலாம்; ஒவ்வொரு பொருளையும் செய்துபார்த்தால்தான் உண்மை புலனாகும்.

தமிழ் மருத்துவத்தில் பேசத்தக்க ஒரு பொருள் சிறுநீர் மற்றும் விலங்குகளின் இறைச்சி ஆகும்!

மாடு, குதிரை, ஆடு முதலிய விலங்குகளின் சிறுநீர் மற்றும் இவற்றின் இறைச்சிகளைப் பல்வேறு பொருட்களிடையே கலக்குமாறு மருத்துவச்சுவடிகள் கூறுகின்றன.

இவற்றில் மருத்துவ உண்மைகள் இல்லாமல், இவை கூறப்பட்டிரா!

மறைந்த பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் சிறுநீரில் மருத்துவப்பண்புகள் உள்ளன என்று உலகறியக் கூறியதோடு, அவரே பருகியும் வந்தார்! இது நாடறிந்த உண்மை!

ஆகவே, தமிழ் நூற்கள் கூறும் இறைச்சி, சிறுநீர் பற்றி மேலாய்வுகள் தேவை.

இந்த நூலில் சிறுநீர் கலப்பது பற்றி நிறையக் குறிப்புகள் உள்ளன.

இந்நூலில் உள்ள வணிகக்குறிப்புகள் அறியத்தக்கன.

"இன்னமருந்தை, வராகன் எடை ஒன்றை இத்தனை பணத்துக்கு விற்கவும்" என்றும், "உமியில் வைத்து இன்ன பொருளை வியாபாரம் செய்யவும்" என்றும் சில குறிப்புகள் இந்நூலில் வருகின்றன.

எதையும் வணிகப்படுத்தினால்தான், மக்களிடம் எளிதில் சென்று சேரும்!

நூற்களிலேயே தங்கிவிட்டால், மக்களுக்குப் பயன் கிட்டாது!

மக்களிடம் ஒரு கருத்தானது பரவுவதற்கு எளிய வழி, அதனை வணிகமாக மாற்றுவதுதான்!

நேர்மையான இலாபத்தை வணிகர்கள் இடையில் அடைவது ஒன்றும் பாவமல்ல!

ஆகவே, தமிழ் மருத்துவம் மக்களிடம் பரவ, அதனை வணிகப் படுத்தவும் செய்யலாம்.

இந்நூலில், குறிப்பிடத்தக்க இன்னொரு நுணுக்கம், வெப்பம் (Heat) பற்றிய தமிழர் அறிவு ஆகும்!

இவ்வளவு வெப்பம் என்று கூறுவதற்கு, இன்னவகை அக்கினி, இவ்வளவு மரம், இந்த விறகால் எரித்துத் தரவேண்டும் என்று கூறியுள்ள நுட்பம் போற்றத்தக்கது!

இத்தமிழ் முறை வெப்ப அளவானது ஏற்புடையது (reliable) ஆகும்! பெரும்பாலும் துல்லியமான வெப்ப அளவைக் குறிக்கக் கூடியது!

மேனாட்டார், சிறிது தெளிவாக, இத்தனை கலோரி (calorie) என்று கூறுவதற்கு ஈடானதே, தமிழர் அளவு!

ஒவ்வொரு மரமும் எரியும் போது வெளிவிடும் வெப்பமானது, மரத்திற்கு மரம் வேறுபடும்!

இந்த நுட்பத்தையும் போகிற போக்கில் பழங்காலத்தில் சொன்னவர்கள் தமிழர்கள்! தமிழ் மருத்துவர்கள்!

ஆகவே, இன்ன மருந்தைச் செய்யும்போது, இன்ன விறகால் எரிக்கவும் என்று குறிப்பிட்டு அந்த விறகு ஆவாரம் விறகா, ஆலம் விறகா என்பதையும் கூறுகின்றனர்!

பல்வேறு பொருட்களைச் செய்யும் முறைபற்றிக் கூறும்போது, கூறும் மொழிநடை குறிப்பிடத்தகுந்ததாக உள்ளது!

"துத்தநாகம் உருகும் போது, 10 பலம் ரசத்தைக் கொடுக்க, வாங்கிக் கொள்ளும்!" -இது ஒரு நடை.

கைநீட்டி இரசத்தை வாங்கிக்கொள்வது போல அல்லவா உள்ளது நடை?

சுவைமிகு பழங்கால நடைக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

வைப்பு என்ற சொல்லை நாம் அறிந்து கொள்ளல் வேண்டும்.

கடைச்சரக்கு, வைப்புச் சரக்கு என்று சித்த மருத்துவர்கள் கூறுவர்.

கடையில் போய் கேட்டால் கிடைக்கும் சரக்கு கடைச்சரக்கு; விளைந்த பொருட்களே பெரும்பாலும் கடைச்சரக்கு ஆகச் சொல்லப்படும்.

மிளகு ஒரு கடைச் சரக்கு; அரிதாரம் ஒரு கடைச் சரக்கு; கோரோசனை ஒரு கடைச் சரக்கு.

வைப்புச் சரக்கு என்பது இதனினும் வேறானது!

அஃதாவது, ஒரு பொருளைப் போல இன்னொரு பொருளைச் செயற்கையாகச் செய்தால், அது வைப்புச் சரக்கு!

பவழம்போல இன்னொரு பொருளை, உருவாக்கினால், அது பவழவைப்பு!

மஞ்சள் பொடியைப் போல, அதே மஞ்சள் நிறத்தில் அதே குணங்களைத் தரவல்ல இன்னொரு பொருளை உருவாக்கினால், மஞ்சள்பொடி வைப்பு!

இம்முறையில் எத்தனையோ வைப்புச்சரக்குகளைச் செய்யும் முறைகளை இந்த நூல் விளக்குகிறது!

எனவே, இந்நூலை ஒரு சோதனைச் சாலைக் கையேடு (Laboratory Hand Book) என்று கூறலாம்!

எனவே, செயற்கைப் பொருட்களை உருவாக்கும் முறைக்கும், தொழில் நுட்பத்திற்கும் தமிழர்கள் முன்னோடியாக இருந்துள்ளமை இதனால் புலனாகிறது!

இப்படிப்பட்ட தமிழறிவும், தமிழர்களும் புறக்கணிக்கப் பட்டதால், இவ்வறிவு வளராமற் போயிற்று எனலாம்!

தமிழ் மருத்துவத்திற்கும், தமிழ் மருத்துவர்களுக்கும் இன்று வரை ஒரு தாழ்ந்த இடமே இருந்து வருகிறது!

அரிய பொருட்களைச் செய்யும் ஓர் 'இரகசிய' நூலாக இருக்கும் அதே சமயம், சமுதாயச் செய்திகளையும் இந்நூல் தருகிறது!

அரசர்களின் உணவு எப்படி இருக்கும்?

இந்த நூலில், அரசர்களுக்கு எப்படிச் சோறு வடிப்பது என்பதை விளக்குகிறது!

நல்ல மணப் பொருட்களான கிராம்பு, ஏலம், சந்தனம், சாதிப் பத்திரி முதலிய சில பொருட்களை நெய்யில் வறுத்து, பொடியாக ஆக்கி, அப்பொடியில் சிறிதளவு உலைநீரில் கலந்து விடுவார்களாம்! சோறு ஏன் மணக்காது?

அரசர் உணவு பற்றி இன்றும் சுவையான செய்திகளை இச் சுவடி நமக்குப் பரிமாறுகிறது!

இந்நூலிற் பயிலும் மருந்துப் பொருட்கள் வியப்பை அளிக் கின்றன!

எவ்வளவு இயற்கைப் பொருட்கள்! அப்பப்பா, இறும்பூது தருகின்றன!

சித்தரத்தை என்ற பொருளை நாம் அறிவோம்; 'சித்து' என்ற அடைமொழியுடன் வந்துளது இப்பொருள். 'சித்து' அல்லது, பெறும் அரத்தை என்றே ஒரு மருந்துப்பொருள் விளைகிறது என்பதை இந்நூலிற் காணலாகும் மருந்துப் பெயர்ப் பட்டியல்கள் மூலம் அறிகிறோம்!

கணிப்பொறிக் (computer) காலமாதலால், இந்நூலிற் காண லாகும் மருந்துப் பெயர்களைக் கணிப்பொறியில் ஏற்றிப் பல்வேறு ஆய்வுகளை நன்கு நிகழ்த்தலாம்!

இந்நூலில், ஒரே நோய்க்குப் பல இடங்களில் மருந்துகள் கூறப்பட்டுள்ளன; மருந்து செய்வோர்; இவற்றைத் தொகுத்துக் கொண்டு, செய்யலாம். மூலச் சுவடியை மாற்றாமல் பதிப்பிக்க வேண்டியுள்ளதால், உள்ளதை மாற்றாமல் அப்படியே பதிப்பிக்கப் பட்டுள.

இந்நூலில் கூறப்பட்டுள்ள முறைகளில் மருந்து செய்யும்போது மருந்தானது கூறிய முறையில் திரளவில்லையானால், அல்லது நோயைத் தீர்க்கவில்லையானால், நமது சித்தமருத்துவ அறிவைப் பயன்படுத்தி, சிற்சில மாறுதல்களைச் செய்துகொள்ள வேண்டும்!

எடுத்துக்காட்டாகப் புழுங்கலரிசியைச் சேர்த்து, குணம் கிடைக்காவிடில், பச்சரிசியைச் சேர்த்துப் பார்க்கலாம்; கூறிவரும் ஏனைய மருந்துப் பொருள்களைப் பார்த்து, நாமே வேறு சில பொருட்களையும் சேர்க்கலாம்!

மேலும், இந்நூலிற் கூறும் பொருட்களைக் கவனமாகப் படிக்க வேண்டும்.

'நல்ல சந்தனம்' என்று போட்டிருந்தால், ஏதோ ஒரு சந்தனத்தைச் சேர்க்கக் கூடாது; நல்ல, புதிய மணக்கக் கூடிய சந்தனத்தையே சேர்க்க வேண்டும்! சுவடிகளில் எழுதப்படும் ஒவ்வொரு எழுத்துக்கும் மதிப்புக் கொடுத்து, மருந்துகளைச் செய்து பார்க்க வேண்டும்!

'விசுவாமித்திர சுவாமி வாக்கியம்' என்று சுவடியில் தலைப்பு இருந்தாலும், புராணகால விசுவாமித்திரரே இதை ஓலைச்சுவடியில் அந்நாளில் எழுதியிருப்பார் எனக் கருத இயலாது.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டை ஒட்டி வாழ்ந்த தமிழ் மருத்துவர்களின் சொந்த அனுபவங்களும், அவர்கள் வசமிருந்த ஓலைச் சுவடிகளில் இருந்த பழைய கருத்துகளும் இந்தச் சுவடியில் இடம் பெற்றுள என்றே கருதலாம்.

பொதுவாக, மருத்துவ நூற்களை, 'நமக்குத் தொடர்பில்லாதது' என்று தமிழறிஞர்கள் எதுக்கும் நிலை உள்ளது! இது தீயது!

தமிழ்ச் சொற்களஞ்சியத்தை வாரி வழங்கவல்லது மருத்துவ நூல்!

அதுமட்டுமல்ல!

சங்க இலக்கியம் போன்ற பழைய நூற்களிற் பயிலும் தாவர வகைகளை நாம் காணவேண்டுமானால், மருத்துவ நூற்கள் போன்ற பழைய நூற்களில்தான் காணவேண்டும்!

எடுத்துக்காட்டாக, வென்ற அரசன், தோற்ற அரசனின் நாட்டை அறிந்து, அந்நிலத்தில் கவ்டியை விதைப்பான் என்ற புறநூற்கள் பேசுகின்றன!

நமது இந்த விசுவாமித்திர வாக்கியம் என்ற மருத்துவச் சுவடியில், கடிவ என்ற பொருளை மருந்துக்குச் சொல்லியுள்ளனர்!

இவ்வாறு பல வியப்புகளை நாம் மருத்துவச் சுவடிகளில் சந்திக்கின்றோம்!

விசுவாமித்திர வாக்கியம் என்ற இந்த நூலில் வந்துள்ள சொல்லாட்சிகள் ஆயத்தக்கன! கொள்ளத்தக்கன!

எடுத்துக்காட்டாக, 'ஒத்தடம் இடவும்' அல்லது 'ஒத்தடம் வைக்கவும்' என்று இந்நாளில் நாம் எழுதக் கூடியதை, 'ஒத்த லிடவும்' என்று இந்தச் சுவடி எழுதுகிறது! அருமையான சொல் லாட்சியே இது! இவ்வாறு பல சொற்களை நாம் இங்கு காண முடிகிறது.

இந்த மருத்துவநூலில் ஓரிரு இடங்களில் சூடு போடுவது பற்றியும் நவலப்பட்டுள்ளது! இதைக் கண்டு முகம் சுளிக்க வேண்டியதில்லை!

தமிழர்கள் கண்ட வர்மக்கலையும், சூடு போரும் முறையுமே, சீனா போன்ற நாடுகளுக்குப் பரவி, பிறகு அங்கிருந்து 'அக்குபஞ்சர்' என்று நம் நாட்டிற்கே வந்துள்ளது!

பழந்தமிழர்கள் மாடுகளுக்குச் சூடு போட்டு, மாடுகளை அடையாளம் கண்ட முறையைத்தான் இன்றைய விஞ்ஞானம் கற்ற கால் நடை மருத்துவர்களும் பின்பற்றுகின்றனர்! (ஆதாரம் : மாடு வளர்க்கும் முறை, ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-5)

விசுவாமித்திரசுவாமி வாக்கியம் எனும் இந்தச் சுவடியில் இருந்த, 'சேவல் கட்டில் வெல்ல', 'வழக்குவெல்ல' முதலிய சில பகுதிகள் இங்கு பதிப்பிக்கப்படவில்லை; எடுத்துக்காட்டாக, ஓரிடத்தில், குப்பைமேனிவேர், இளம்புளியவேர், இவற்றைத் தலையில் வைத்துக் கொண்டு மல்லுக்குப் போனால், அம் மல்லிலே வெல்லலாம் என்று கூறப்பட்டுள்ளது. இஃது உண்மையோ, பொய்யோ, மருத்துவத்திற்கு அவ்வளவாகத் தொடர்பில்லாததால், இவண் பதிக்கப்படவில்லை.

இந்த நூலில், நாம் உலகுக்கு அறிவிக்க வேண்டிய செய்தி உளது!

அஃது யாதெனில், இந்நூலிற் கூறப்பட்டுள்ள மருத்துவம் உண்மையோ, பொய்யோ, இது கூறும் வேதியியற் செய்திகள் (Chemical treatments) எவராலும் மறுக்க இயலாதவை!

பழந்தமிழர்கள், எவ்வளவு நுணுக்கமாக, பொருட்களின் பல்வேறு வேதியியல் மாற்றங்களைத் (Chemical Changes) துல்லியமாக அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு இந்த நூலே சான்று!

ஒரு பிஞ்சைக் கொண்டு என்ன செய்வது, காய்ந்த கொட்டையைக் கொண்டு என்ன உருவாக்குவது, தோலை எப்படிப் பயன் கொள்வது, அரிசி போன்ற தானியங்களை எப்படி வறுத்தெடுப்பது, எதைக் காய்ச்சுவது, எதைத் தட்டுவது, எதைப் பிழிவது போன்ற பல்வேறு வேதியியல் நுணுக்கங்கள் தமிழருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்த நூலில் மொழியப்பட்டுள!

இவற்றைத் தமிழர்கள் உலகறியச் செய்யவேண்டும்!

பொதுவாக, இந்நூலை நான்கு பிரிவுகளாகப் பகுக்கலாம்:-

1. மருந்துகள் செய்யும் முறைகள்
2. செயற்கைப் பொருள்களைச் செய்யும் முறைகள்
3. பொது மருத்துவம்
4. குழந்தை மருத்துவம்

இந்நூலில் ஆங்காங்கு நோயின் குணங்கள் (Symtoms) என்று குறிக்கப்படுபவை குறிப்பிடத்தக்கன! மிகவும் துல்லியமானவை! எவராலும் மறுத்துப்பேச இயலாதன!

நோயை இனம் கண்டு கொள்வதும் மருத்துவத் துறையில் ஒரு முன்னேற்றமே!

எல்லா நோயையும் நாம் இனம் கண்டு கொண்டோம் என்று இன்றுவரை கூற இயலவில்லை!

இந்நூலில் ஆங்காங்கு குறிக்கப்படும் சில நோய்கள் நமக்கு வியப்பை அளிக்கின்றன!

எடுத்துக்காட்டாகச் சிறுநீர் கழிக்கும்போது சிறுநீரானது திரட்சியாக விழுகிறதா, ஒழுங்காக இருக்கவேண்டிய அடர்த்தியில் விழுகிறதா என்று யாராவது பார்க்கிறோமா?

ஆனால், "சிறுநீர் திரட்சியாக விழுந்தால் அதற்கு இன்ன மருந்து"என்று அழகாக, நுட்பமாக இந்த மருத்துவ நூல் கூறுகிறது!

நோய்களை இவ்வாறு இனம் கண்டு உரைப்பதைப் போலவே, தமிழர்கள் இயற்கைப் பொருட்களின் இயல்புகளையும் மிக நுணுக்கமாக உரைத்துள்ளனர்! இவ்வாறு உரைக்கப்பட்டவை எல்லாம் மருத்துவ நூற்களிலும், மருத்துவச் சுவடிகளிலும் உள்ளன.

எடுத்துக்காட்டாக, விசுவாமித்திர சுமாமி வாக்கியம் எனும் இந்த நூலில், தாவரத்தின் வேர்களைத் தெற்கே போகின்ற வேர், வடக்கே போகின்ற வேர் என்று பிரித்து, ஒவ்வொன்றுக்கும் வேறுபாடு உள்ளமையை நமக்குக் காட்டப்பட்டுள்ளது.

ஒரே தாவரத்தின் வேர்தானே? என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது!

ஆனால், "அப்படியல்ல! வடக்கே ஓடுகிற வேர் என்றால் சில குணங்கள் இருக்கும்; தெற்கே ஓடுகின்ற வேர் என்றால் அதற்கு வேறு சில குணங்கள் இருக்கும்" என்று இந்த நூல் நமக்கு விளக்குவது போலச் சில இடங்கள் உள!

இவ் விசுவாமித்திரசுவாமி வாக்கியம் போன்ற சித்தமருத்துவ நூற்களைக் கொண்டு, சங்க இலக்கியம் துலக்கம் பெற வேண்டும்; இதுவும் ஒரு திறனாய்வு (Literary criticisim) முறையே

அஃதாவது, சேர, சோழ, பாண்டியர்கள் போர் புரிந்தனர் அல்லவா? அப்போர்களில் வெட்டுப்பட்ட புண்களை அவர்கள் எவ்வாறு ஆற்றினார்கள்?

"தும்பை இலை அரைத்து, எண்ணையில் வேகவைத்து, மெழுகுப் பதத்தில் இறக்கிப்", புண்ணில் போட்டனர்!

இதற்கு என்ன ஆதாரம்?

விசுவாமித்திர சுவாமி வாக்கியம் எனும் நமது இந்தச் சுவடி தான்!

இந்நூலில் கூறப்பட்டுள்ள சில மருந்துகள் 2000 ஆண்டு களுக்கு முன்பே இருந்திருக்க வேண்டும் எனத் துணிய இடமுண்டு! சுவடிப்பிழை காரணமாக, மருத்துவ நூற்களில் காணலாகும் குழப்பங்களை இங்கு குறிப்பிட்டே தீர வேண்டும்!

நமது இந்த நூலில், ஓரிடத்தில் மாயக்காய் என்று இருக்கிறது; இன்னோர் இடத்தில் மாசக்காய் என உள்ளது! வேறோர் இடத்தில் மாசிக்காய் என்று உள்ளது! மூன்றும் வெவ்வேறா? எது சரி?

மூன்றும் வெவ்வேறான பொருட்கள் அல்ல!

மூன்றும் ஓரே பொருளையே சுட்டுகின்றன!

சுவடி எழுதுவோர், படிப்போர் காரணமாக எழும் வெவ்வேறு வடிவங்கள் இவை!

இந்நூலின் வைப்புமுறை அவ்வளவு சிறப்பாக இல்லை!

ஓரே மருந்து பல இடங்களில் கூறப்பட்டுள்ளன! தவிரவும், மருந்து கூறிவரும் யாது, திடீரென்று 'நட்டுவாக்காலிக்கு' என்று கடிமருந்து வரும்!

இருப்பினும், சுவடியில் உள்ளதை நாம் மாற்றம் செய்து பதிப்பிக்கக் கூடாது ஆகையால், உள்ளதை உள்ளபடியே இங்கு பதிப்பித்துள்ளோம். மேலாய்வோர், தொகுத்தும் வகுத்தும் ஆய்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு, பல்வேறு வகைகளில் அரிய பெரிய கருவூலமாக இந்நூல் விளங்குகிறது!

மருத்துவத் துறையில் மட்டுமல்லாது, பொதுமக்கள் ஈடுபடத் தக்க தொழில் துறைகளிலும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை!

அன்பன்

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்.) பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.

காப்பாட்சியர்

## If Wealth is Lost,

## All is not Lost!

This medical piece, edited from a MS of G. O. M. L. is a wonderful book for not only treatments but also for manufacturing artificial stones.

So, Tamil land will be benefited in many ways if this volume is properly utilised. Hence this edition.

Apart from such utilities, Tamil words used here flebbergast us! Several archaic usages may reveal the fact that many formulae suggested here may belong to the period several centuries ago.

My thanks are due to K. Damodaran, M A. Director, Department of Archaeology for his continuous efforts.

**Dr. S. SOUNDARAPANDIAN**
M.A. (Tamil), M.A. (Eng), B.Ed. Dip. (Skt.), Ph.D.
Curator.

# விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

## சரக்கு வைப்பு

### 1. செப்புத் தொட்டிப் பாஷாண வைப்பு

சுத்தி பண்ணின செம்பரப் பொடி பலம் 15 ; துருசு பலம் 5 ; துத்தம் பலம் 3 ; வெங்காரம் பலம் 3 ; சீனாக்காரம் பலம் 4 ; நவச்சாரம் பலம் 2 ; இந்துப்பு பலம் 2; கல்லுப்பு பலம் 2 ; சுத்த ரசம் பலம் 5 ; வெடியுப்புச் சுண்ணம் பலம் 3 ; இவற்றை யெல்லாம் கலுவத்திலிட்டு, மகாவன்னித் திராவகம் விட்டு அரைத்து, நாலு சாம மரைத்து, உலர்த்திக் காசிக்குப்பிக்கு மூன்று சீலைமண் சேர்த்து, அதிலடைத்துக் குப்பிவாய் மூடி, வாலுகேந் திரத்தில் பதினாறு சாம மெரிக்க; ஆவாரை விறகு கொண்டு நாலுசாம மெரித்துச் சாங்கசீதளமானால் அதை எடுத்துக் குப்பியைத் தட்டிப் பார்த்தால், தாம்பரக்கட்டிபோல் உறைந்து இருக்கும்!

நல்ல செம்பு போல இருக்கும்! இது தொழிலுக்கு ஆகும்!

### 2. எருமைக் கொம்பப் பாஷாண வைப்பு முறை

துத்தநாகம் பலம் 10, கெட்டிச் சட்டியிலிட்டு, உலையிலுருக்கி எடுத்துச் சீலையில் வைத்து, சுத்த ரசம் பலம் 10. கொடுக்க வாங்கிக் கொள்ளும். இது மாவாம்; திருநீறுபோல ஆகும்.

இதை எடுத்து, அம்மியில் வைத்து, மகாத்திராவகம் விட்டு அரைக்க, மெழுக்காகும்.

இதற்கு மேல் சரக்கு,

| | |
|---|---|
| வெள்ளைப்பாஷாணம் | பலம் 3 |
| அரிதாரம் | பலம் 3 |
| சுத்த அரப்பொடி | பலம் 5 |
| செம்பு அரப்பொடி | பலம் 5 |
| நீலாஞ்சனம் | பலம் 2½ |
| சீனம் | பலம் 3 |
| வெண்காரம் | பலம் 2 |
| துத்தம் | பலம் 2 |
| துருசு | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |
| பூநீர் | பலம் 2 |
| நவச்சாரம் | பலம் 3 |
| வெடியுப்பு | பலம் 3 |

இவற்றை யெல்லாம் கலுவத்திலிட்டு, வன்னித் திராவகம் விட்டு அரைத்து, உலர்ந்தால் இரண்டுபடி பிடிக்கின்ற குப்பிக்கு ஐந்து சீலைமண் செய்து, அரைத்த மருந்தைக் குப்பியிலிட்டு, வாய் மூடி, சீலைமண் செய்து, உலத்தி, வாலுகாயந்திரத்தில் இரண்டு சாம மெரித்து, ஆறிக், குப்பியைத் தட்டிப் பார்க்க, எருமைக் கொல்லித் தொட்டிப் பாஷாணமாகும்.

தேவி பூஜை, வடுகநாதன் பூஜை செய்யவும்.

### 3. உருக்குத் தொட்டிப் பாஷாண வைப்பு

| | |
|---|---|
| உருக்கு அரப்பொடி சுத்தி பண்ணி | பலம் 15 |
| துருசு | பலம் 10 |
| காரீயம் | பலம் 10 |
| துத்தம் | பலம் 5 |
| அரிதாரம் | பலம் 5 |
| கந்தகம் | பலம் 8 |
| நவச்சாரம் | பலம் 4 |
| வெண்காரம் | பலம் 4 |
| சீனாக்காரம் | பலம் 8 |

ஆகக் கூட்டிக் கலுவத்திலிட்டு, மகாவன்னித் திராவகம் விட்டுக்,

கொஞ்சங்கொஞ்சம் மருந்திட்டு, நான்கு யாமமரைத்து, உலர்த்திப் பொடியானால், இரண்டிரண்டு படி பிடிக்கின்றது போன்ற மூன்று குப்பிக்கு வச்சிரச் சீலைமண் பூசி, உலர்த்தி, மருந்தைக் குப்பி யிலடைத்து, வாய்மூடி, உலர வைத்து, வாலுகாயந்திரத்தில் 16 யாமம் ஆவாரம் விறகு கொண்டு எரித்து, சாங்க சீதளமாறி எடுத்துக் குப்பியை உடைத்துப் பார்த்தால், உருக்குத் தொட்டிப் பாஷாணம் ஆகும்.

தேவி பூசை, விச்வாமித்திர பூசை கொடுக்கவும்.

## 4. பொற்றொட்டித் தொட்டிப் பாஷாண வைப்பு

| | |
|---|---|
| சுத்திபண்ணின ரசம் | பலம் 10 |
| வெள்ளீயம் | பலம் 10 |

இப்படிச் சட்டியிலுருக்கிப் பத்துப் பலம் ரசம் கொடுக்க வாங்கிக் கொள்ளும்.

திருநீறு போல நொறுங்கும்!

இதைக் கலுவத்திலிட்டு, அதற்கு மேல் மருந்து,

| | |
|---|---|
| அரிதாரம் | பலம் 5 |
| கந்தகம் | பலம் 4 |
| நவச்சாரம் | பலம் 3 |
| சீனம் | பலம் 6 |
| வெண்காரம் | பலம் 3 |
| கல்லுப்புப் | பலம் 2 |
| இந்துப்பு | பலம் 2 |
| துருசு | பலம் 3 |
| துத்தம் | பலம் 3 |
| பூ நீர் | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |

ஆக வகையெல்லாம் கலுவத்திலிட்டு, மகா வன்னித்திராவகம் விட்டு, நான்கு யாமம் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டு அரைத்துக் காய்ந்தால், நான்குபடி பிடிக்கும் குப்பிக்குச் சீலைமண் செய்து,

மருந்துக்குப்பியி லடைத்து, வாய்மூடி, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் நாலுவித மெரித்து, ஆறினபின் குப்பியைத் திறந்து பார்க்கப் பொற்றொட்டிப் பாஷாணமாகும்!

தேவி சகாயம்.

## 5. பறங்கித் தொட்டிப் பாஷாண வைப்பு

சுத்தமான துத்தநாகம் பலம் 2, உருகுகிற முகத்தில் சுத்தி பண்ணின ரசம் பலம் 10, கொடுக்க வாங்கிக் கொள்ளும் வெளுத்து திருநீறு ஆகும். இதைக் கலுவத்திலிட்டு மேல்மருந்து

| | |
|---|---|
| அரிதாரம் பலம் | பலம் 6 |
| சுத்தி பண்ணின வெடியுப்பு | பலம் 8 |
| துருசு | பலம் 4 |
| சுத்தி பண்ணின அரப்பொடி | பலம் 6 |
| நவச்சாரம் | பலம் 2 |
| துத்தம் | பலம் 3 |
| வெங்காரம் | பலம் 3 |
| அன்னபேதி | பலம் 3 |
| கல்லுப்பு | பலம் 2 |
| இந்துப்பு | பலம் 2 |
| சீனாக்காரம் | பலம் 6 |

ஆக வகை கலுவத்திலிட்டு எண்ணித்திராவகம் விட்டு நாலு யாம மரைத்து, உலர வைத்துக் கொண்டு ஐந்து குப்பி இரண்டு படி பிடிக்கிறாப் போல், மூன்று வச்சிரமண் பூசி உலர வைத்து, அரைத்த மருந்தை நிரப்பி வாய்க்கு மாக்கல்மூடி வச்சிரமண் மூன்றுஞ் செய்து, உலத்தி, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு

யாமம் நாலுவிதம் ஆவாரம் விறகு கொண்டெரித்து, சாங்கசீதள மாறினபின், குப்பியைத் தட்டிப்பார்த்தால் பறங்கிப் பாஷாண மாகும்!

தேவி சகாயம், வடுகன் துணையாகவும்.

## 6. வெங்கலத் தொட்டிப் பாஷாண வைப்பு

வெள்ளியம் பலம் 10, ஒரு சட்டியிலுருகவிட்டு, உருகும் முகத்தில் சுத்த ரசம் பலம் 10 கொடுக்க வாங்கிக் கொள்ளும்; வெளுத்துத் திருநீறு போல் ஆகும்.

இதை எடுத்துக் கலுவத்திலிட்டு, இதற்கு மேல் சரக்கு சுத்தத் தாம்பரம் அரப்பொடி பலம் 15 போடவும்

இவை சேர்த்து அரைக்கும் போது, மேல் மருந்து.

| | |
|---|---|
| நவச்சாரம் | பலம் 3 |
| அன்னபேதி | பலம் 3 |
| துருசு | பலம் 5 |
| துத்தம் | பலம் 2 |
| கல்லுப்பு | பலம் 2 |
| இந்துப்பு | பலம் 2 |
| வெடியுப்பு | பலம் 6 |
| சீனாக்காரம் | பலம் 2 |

இவை சேர்த்துக் கலுவத்திலிட்டு, மகா வன்னித் திராவகம் விட்டு நாலு யாமம் விடாமலரைத்து உலர்த்தி, இரண்டுபடி பிடிக்கும் குப்பி ஐந்துக்கும், மூன்று வச்சிர மண்பூமி மருந்தை அடைத்து மாக்கல் கொண்டு மூடி, வச்சிரமண் பூசி, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் ஆவாரம் விறகு கொண்டு எரித்துச் சீதளமாய் ஆறினபின், குப்பியை யுடைத்துப் பார்த்தால் வெங்கலத் தொட்டிப் பாஷாணமாகும்!

தேவி சகாயம், வடுகன் துணை.

## 7. காக்கை மூக்குத் தொட்டில் பாஷாண வைப்பு

காரீயம் பலம் 10, சட்டியிலிட்டு, உருகுமுகத்தில் சுத்த ரசம் பலம் 10 கொடுக்க வாங்கிக் கொள்ளும்.

வெளுத்துத் திருநீறு போலாகும் இதை எடுத்துக் கலுவத்திலிட்டு அரைக்கும் போது மேல் மருந்து

| | |
|---|---|
| நீலாஞ்சனக்கல் | பலம் 10 |
| சுத்திபண்ணின அரப்பொடி | பலம் 10 |
| அன்னபேதி | பலம் 2 |
| துருசு | பலம் 4 |
| துத்தம் | பலம் 2 |
| வெண்காரம் | பலம் 3 |
| சீனாக்காரம் | பலம் 6 |
| கல்லுப்பு | பலம் 2 |
| இந்துப்பு | பலம் 2 |
| ஊசிக்காந்தம் | பலம் 4 |
| அரிதாரம் | பலம் 3 |

இவற்றை யெல்லாம் உரலிலிட்டுக் கடப்பாரையா லிடித்து, கலுவத்திலிட்டு, மகா அக்கினித் திராவகம் விட்டு, நாலு சாம மரைத்து உலர்த்தி, இரண்டுபடி பிடிக்கிற குப்பிக்கு ஐந்து வச்சிரமண் பூசி, உலர்த்தி அரைத்த மருந்தைக் குப்பியில் நிரப்பி, வாய்மூடி, மண் செய்து, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் எரித்து, ஆறினபின் எடுத்துக் குப்பியைத் தட்டிப் பார்க்க, **காக்கை மூக்குத் தொட்டிப் பாஷாணமாகும்!**

குருவே துணை.

## 8. கரித்தொட்டிப் பாஷாண வைப்பு

காரீயம் பலம் 15 சட்டியிலிட்டு உருகும் முகத்தில் சுத்தரசம் பலம் 10 கொடுக்க வாங்கிக் கொள்ளும்; ஈயம் நொறுங்கும்.

இதை எடுத்துக் கலுவத்திலிட்டு அரைக்கும்போது, மேல்மருந்து

| | | |
|---|---|---|
| காக்கை நிமிள்ள | பலம் | 10 |
| நீலாஞ்சனம் | பலம் | 10 |
| அரிதாரம் | பலம் | 5 |
| துருசு | பலம் | 2 |
| துத்தம் | பலம் | 2 |
| நவச்சாரம் | பலம் | 3 |
| அன்னபேதி | பலம் | 3 |
| பூநீறு | பலம் | 3 |
| கல்லுப்பு | பலம் | 2 |
| இந்துப்பு | பலம் | 2 |
| இரும்பு அரப்பொடி | பலம் | 10 |

இவையெல்லாம் அம்மியிலிட்டு, மகாதிராவகம் விட்டு, நாலு யாம மரைத்து, உலர்ந்தால், ஐந்து குப்பி இரண்டுபடி பிடிக்கின்றாப் போல் எடுத்து, வச்சிரச் சீலைமண் மூன்று செய்து, மருந்தைக குப்பியிலடைத்து, வாய்க்கு மாக்கல் கொண்டு மூடி, வச்சிரச் சீலைமண் செய்து, உலரவைத்து, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமமெரித்து, சாங்கசீதளமானால் எடுத்துக் குப்பியைத் தட்டிப் பார்க்க, நல்ல கரித்தொட்டிப் பாஷாணமாகும்.

தேவி நினைப்பு வடுகன் பூசை பண்ணுவது

## 9. நாரை மூக்குத் தொட்டிப் பாஷாண வைப்பு

வெள்ளியம் பலம் 15 சட்டியில் போட்டு, உருகு முகத்தில் சுத்தரசம் பலம் 10 கொடுக்க வாங்கிக் கொள்ளும்; நொறுங்கும்.

இதைக் கலுவத்தில் இட்டு, மேல் மருந்து விவரம்.

| | |
|---|---|
| துத்தம் | பலம் 4 |
| அரிதாரம் | பலம் 6 |
| நவச்சாரம் | பலம் 2 |
| வெடியுப்பு | பலம் 4 |
| சீனிக்காரம் | பலம் 6 |
| வெண்காரம் | பலம் 2 |
| துருசு | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |
| பூநீறு | பலம் 3 |
| இந்துப்பு | பலம் 2 |
| கல்லுப்பு | பலம் 2 |

இவையெல்லாங் கலுவத்திலிட்டு, மகாதிராவகம் விட்டு, நாலுயாம மரைத்து, உலர வைத்துக் கொண்டு, ஐந்து குப்பி இரண்டு படி பிடிக்கின்றாப்போல எடுத்து, வச்சிரச் சீலைமண் மூன்று செய்து, உலர வைத்து, அரைத்து மருந்தைக் குப்பியிலிட்டு, குப்பிவாய் மாக்கல் கொண்டு மூடி, வச்சிரமண் பூசி, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் எரித்து, சாங்க சீதளமனால் எடுத்துக் குப்பியைத் தட்டிப் பார்த்தால், நாரை மூக்குத்தொட்டிப் பாஷாணம் ஆகும்!

வடுகன் பூசை பண்ணவும், விசுவாமித்திர பூசை பண்ணுவது

## 10. இரசகர்ப்பூர வைப்பு விவரம்

சுத்தரசம் பலம் 10 கலுவத்திலிட்டு, மேல் சரக்கு விவரம்.

துருசு பலம் 10 வறுத்தெடுத்து, ரசத்துடனே கலுவத்திலிட்டு மகா திராவகம் விட்டு, எட்டு யாம மரைக்கப், பொரிந்து நீறு போல ஆகும்.

இதற்கு மேல் சரக்கு,

| | |
|---|---|
| துத்தம் | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |

| | |
|---|---|
| பூநீறு | பலம் 2 |
| நவச்சாரம் | பலம் 2 |
| வெண்காரம் | பலம் 2 |
| சீனிக்காரம் | பலம் 3 |
| கல்லுப்பு | பலம் 2 |
| இந்துப்பு | பலம் 2 |
| சூடன் | பலம் 2 |
| வெடியுப்பு | பலம் 2 |

இவை கூட்டிக் கலுவத்திலிட்டு, வன்னித்திராவகம் விட்டு, ஏழு யாமமரைத்து, உலர்த்தி, இரண்டுபடி பிடிக்கும் குப்பியில் மருந்து போட்டு, வாய்மூடி, வச்சிரமண் பூசி உலர்த்தி, வாலுகா யந்திரத்தில் பதினாறு யாமம் ஆவாரம் விறகு கொண்டெரித்து, சாங்கசீதளமானால், குப்பியைத் தட்டிப் பார்க்க வீரமாகும்.

இப்படி இதற்கு அரைவாசி முந்தின மருந்து சேர்த்து, மூன்போல எரித்து இறக்கவும்.

இப்படி மூன்றுதரம் எரித்து எடுக்கவும்.

| | |
|---|---|
| சுத்த ரசம் | பலம் 10 |
| துருசு | பலம் 10 |
| இந்துப்பு | பலம் 2 |
| கல்லுப்பு | பலம் 2 |
| பூநீறு | பலம் 2 |
| சீனிக்காரம் | பலம் 4 |
| வெண்காரம் | பலம் 2 |

இந்த மருந்தெல்லாம் கலுவத்தில் இட்டு, சிறு செருப்படிச் சாறு விட்டு, நான்கு யாமமரைத்து, உலர வைத்துக் கொண்டு, இரண்டு படி பிடிக்கிற குப்பியெடுத்து, அந்தக் குப்பிக்கு மூன்று வச்சிர மண் பூசி, உலர வைத்து, குப்பியில் அரைத்த மருந்தை அடைத்து,

குப்பிவாய் மூடி, சீலைமண் செய்து, உலரவைத்து, வாலுகா யந்திரத்தில் எட்டுச் சாமம் நான்கு விதம் ஆவாரம் விறகு கொண்டு எரித்து இறக்கவும்.

ஆறினபின், தட்டிப் பார்த்தால், நல்ல தேங்காய்ச் சிற்றுப் போலிருக்கும் இரசக்கர்ப்பூரம்.

## 11. செந்தூரம் வைக்கும்படி

| | |
|---|---|
| சுத்த ரசம் | பலம் 10 |
| சுத்தக் கந்தகம் | பலம் 12 |
| தூருசு | பலம் 2 |
| வெடியுப்பு | பலம் 3 |
| சீனம் | பலம் 3 |
| வெண்காரம் | பலம் $1\frac{1}{2}$ |
| நவச்சாரம் | பலம் 1 |
| பூநீறு | பலம் 1 |
| கல்லுப்பு | பலம் 1 |

இவை சேர்த்துக் கலுவத்திலிட்டு,

சிறு செருப்படிச்சாறு நாளொன்று,
கத்தாழை வேர்ச்சாறு நாளொன்று
அத்திப்பட்டைச்சாறு நாளொன்று
அரசம்பட்டைச்சாறு நாளொன்று

ஆக நாலுநாள் அரைத்து, இரண்டுபடி, மூன்றுபடி பிடிக்கின்றாப் போல் குப்பிக்கு, மூன்று சீலை செய்து, மண்பூசி, உலர்ந்த மருந்தைக் குப்பியிலடைத்து, குப்பிவாய் மூடி, சீலைமண் செய்து, உலர்ந்தால் வாலுகாயந்திரத்தில் ஆவாரம் விறகு கொண்டு எட்டு யாமமெரித்து ஆறி பிறக்கினால், குப்பியைத் தட்டிப் பார்த்தால், நல்ல சந்திரோதயம் போல் இருக்கும்.

## 12. வச்சிரச் செந்தூரம்

கட்டின ரசம் பலம் 10; இதைக் கலுவத்திலிட்டு அரைக்க விவரம்:-

வன்னித்திராவகம் விட்டு அரைக்கவும்.

சோளப்பொரி போல் பொரியும். இதற்கு நெல்லிக்காய்க் கந்தகம் பலம் 10 கட்டினது சேர்த்து அரைக்கவும்.

இதற்கு மேல் சரக்கு விவரம்:-

| | |
|---|---|
| கடுங்கார் வெடிப்புச்சுண்ணம் | பலம் 2 |
| கட்டின நவச்சாரம் | பலம் 2 |
| கட்டின வெங்காரம் | பலம் 2 |
| கட்டின சாதிலிங்கம் | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |
| மாங்கிஷ பேதி | பலம் 2 |
| கட்டின இந்துப்பு | பலம் 2 |
| கட்டின கல்லுப்பு | பலம் 2 |
| கட்டின துருசு | பலம் 2 |
| கட்டின கற்பூரம் | பலம் 2 |
| கட்டின செந்தூரம் | பலம் 2 |
| கட்டின துத்தம் | பலம் 2 |
| கட்டின அரிதாரம் | பலம் 2 |
| கட்டின மனோசிலை | பலம் 2 |
| கட்டின அரப்பொடி | பலம் 2 |

ஆக இவையெல்லாம் கூட்டி, மகாவன்னித் திராவகம் விட்டு அரைக்கவும்.

சரீரத்தில் படாமல் அரைத்து, மாண்டால் வழித்து உலர்த்திப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு விவரம்

ஐந்து காசிக்குப்பி ஒன்றரைப்பிடி பிடிக்கும் போல எடுத்து, மூன்று வச்சிரச்சிலை மண் செய்து, உலர்த்தி அரைத்த மருந்தைக் குப்பிக்கு முக்கால்வாசி இட்டுக் குப்பிவாய் மூடி, மாக்கல்லினாலே மூடி, வாய்க்கு வச்சிர மண்ணிட்டு உலரவைத்துக் கொண்டு, அதன்பிறகு, ஒரு பெருந்தாழி இருபது வள்ளம் பிடிக்கின்றாப் போல அடியிடமாய்க் கொட்டிப் பாத்திரமாய் இருக்கவேண்டும்.

அதை அடுப்பில் வைத்து, அதில் இரண்டு வள்ளங் கல்லுப்பு, இரண்டு வள்ளம் பூநீர் சேர்த்து இடித்துத் தாழியில் பரப்பி, விரல்கன மிருக்க, ஐந்து குப்பியுஞ் சிவனாகப் பாவித்துத் தூப, தீபம், நெய்வேத்தியம் பண்ணி, சோடசம் பூசித்து, தேவி, வயிரவன், விசுவாமித்திரர் இவருக்கு மகாபூசை கொடுத்து, அக்கினி பூசை பண்ணி, ஆவாரம் விறகு கொண்டு பதினாறுயாமம் வடவாக்னியாக எரித்து, சாங்க சீதளமாறினால், குப்பியெடுத்துப் பார்த்தால், பூரணச் சந்திரனைப் போல இருக்கும் இரத்தச் சவ்வீரம்!

இந்தச் சவ்வீரம் நவலோகத்தில் ஆயிரத்துக்கொன்று கொடுக்க பதினாறு வீரத்துக்குக் காணும்; இதனுடைய ஆவி பட்டால் ஆகாது.

இது மகா கால கொடிய விஷம்! நஞ்சு!

## 13. சத்துவரங்குற மருந்து

மருந்து விவரம்:-

துருசு
துத்தம்
கந்தகம்
சுரைக்காய்க் கந்தகம்
பொன்னரிதாரம்
வெண்ணரிதாரம்
தாளகம்
மனோசிலை
மஞ்சள் கௌரி
பறங்கிப் பாஷாணம்

பச்சைத் தொட்டிப் பாஷாணம்
புத்தோட்டுத் தொட்டிப் பாஷாணம்
உருக்குத் தொட்டி
கரித்தொட்டி
எருமைகொல்லித்தொட்டி
மஞ்சள் தொட்டி
வெங்கலம், பித்தளைத் தராய்
குதிரைப்பல் பாஷாணம்
எலிப் பாஷாணம்
பூரகம்
சாதிலிங்கம்
இரசச்சிந்தூரம்
இரசகற்பூரம்
வெண்காரம்
சீனிக்காரம்
வெடியுப்பு
கல்லுப்பு
வளையலுப்பு
இந்துப்பு
நவச்சாரம்
காரீயம்
வெள்ளீயம்
நாகம்

இப்படி, சத்துவகை 64க்கு வாங்கு விபரம்

எள்ளு
உளுந்து
அவரை
துவரை
பூரகம்
குன்றிப்பருப்பு

ஏறழிஞ்சில் விரை
எருமைக் கொம்பு
சுராமீன்
கருவாடு
வெள்ளாட்டுக் குளம்பு
வெள்ளாட்டுக் கொம்பு
எருமைக் குளம்பு
குதிரைக் குளம்பு
கழுதைக் குளம்பு
வெண்காரம்
சீனிக் காரம்
வெடியுப்பு
கல்லுப்பு
வளையுப்பு
நவச்சாரம்
வெச்சாரம்
முக்கொளஞ்சி
கலங்கொம்பு
ஆனைத்தந்தம்
முயலெலும்பு
பன்றி எலும்பு
தாட்டாமணக்கு விரை
எலியாமணக்கு வித்து
சித்தாமணக்கு முத்து
சிறுதேன் மெழுகு
தேன் இராட்டு
மாட்டு வாலு
தலை மயிர்
ஆட்டுத் தோல்
பழங்கருங்கம்புளி
பருத்திக் கொட்டை

பழங்கோணிப் பட்டை
பழந்துணி

ஆக வகையொன்றுக்கும் பலம் 3,

தேன்
பசுவின் நெய்
பசுவின் பால்
வெண்ணெய்
பாச்சான் பால்
சதுரக்கள்ளிப்பால்
திருகுகள்ளிப்பால்

ஆகச் சேர்த்துச் சத்து வாங்கவும்.

மயக்காளால், உலையில் இரும்புக்கட்டி ஊதுறாப்போல ஊதவும்.

குருவே துணை ஆகவும்.

## 14. துருசு வைப்புத் துறை

நல்ல செம்பு பலம் 60 கொண்டு, பொடிபண்ணி, போள் பலம் 30 ஆகப் போள் உண்டாக்கி வைத்துக்கொண்டு, போளையில் வைக்கிற மருந்துக்கு விவரம்:-

| | |
|---|---|
| வெடியுப்பு | பலம் 60 |
| கல்லுப்பு | பலம் 40 |
| செம்பு அரப்பொடி | பலம் 60 |

ஆகக் சேர்த்து, போளையில் போட்டு,

| | |
|---|---|
| எருமைத் தயிர் | படி 3 |
| எலுமிச்சம் பழச்சாறு | படி 3 |
| குதிரை மூத்திரம் | படி 3 |
| பூ நீறு | படி 1 |

ஆக கூட்டிப் போளை நிரப்பி மூடிக்கொண்டு, நன்றாய்க் கட்டி வைத்துக் கொண்டு, விவரம்:-

பழுங்கோணிப்பட்டை கொண்டு, வச்சிரமண் பிலை கோணிப் பட்டையில் பூசி, போளைக்கு நல்ல கவசம் போட்டு. வெயிலில் வைத்து, நன்றாய்க் காய்ந்தால் எடுத்துக் கொண்டு, ஆவணி மாதம், சுக்கில பக்ஷத்தில் சுக்கிரவார நாள், நல்ல பெரிய உயர்ந்த குப்பை மேட்டில், ஆறுயரங்குழி வெட்டி, குழியில் முழங்காலுயரங் குதிரைலத்தி போட்டு மிதித்து, அதன்மேல் போளையை வைத்து, மேலும் இலத்திபோட்டு நிரப்பி மிதித்து. மேலே மண்ணிட்டு . . . . மண்ணாடிப் போடவும்.

ஆறுமாதஞ் சென்று எடுத்தால், துருசு பசித்துப் புத்துப் புத்தா யிருக்கும்!

இது துருசுக்கு ஆகிற பல்னாயிருக்கும்!

எட்டு மாதஞ் சென்றால், நல்ல நிலவயிரம் போல விளைந்து, கம்பி கம்பியாய்க் கதிரோடி விளைந்திருக்கும்!

இது, சுத்தப்படி தொழிலுக்குங் குருபண்ண நல்லது.

## 15. வங்கரளப் பச்சை வைக்க விவரம்

பெரிய செப்புத் தவலை இரண்டு வள்ளம், மூன்று வள்ளம் பிடிக்கின்றதாய்ப் பார்த்து எடுத்து வந்து மருந்து வைக்க விவரம்:

| | |
|---|---|
| செம்பு அரப்பொடி மெல்லிதாக ராவிப் | பலம் 30 |
| அரிதாரம் பொடி | பலம் 10 |
| நல்ல அவுரி நீலக்கட்டி | பலம் 10 |
| வெடியுப்பு நாலாங் காச்சல் உப்பு | பலம் 1 |
| நல்ல மணியாய்க் கல்லுப்பு | பலம் 5 |
| ஆகப் பொடி பண்ணி, எருமைத் தயிர் | படி 3 |
| எலுமிச்சம் பழச்சாறு | படி 3 |
| குதிரைக்கட்டம் படி | படி 3 |
| பழங்காடி | படி 1 |

தவலையில் இதையெல்லா மூற்றிச் செம்புச் சட்டி கொண்டு மூடிவைத்து, விவரம்:

பெரிய பழங்கோணிப் பட்டைக்கு வச்சிரமன் சீலை செய்து, பூசி, தவலை தெரியாமல் கவசம் போட்டுக் காயவைத்து, எடுத்துக் கொண்டு, அதன் பிறகு பழங்குப்பை மேடு, உயர்ந்த மேடாக இருந்த இடத்தில், ஆளுயரங் குழி வெட்டி, குழியில் முழங்கால் மட்டும் குதிரை லத்தி போட்டு, அதற்கு மேல் இரண்டு குடங் குதிரை மூத்திரம் தெளித்து மிதித்து, நன்றாக இறுகினால் மேலே தவலையை வைத்து, அதன்மேல் லத்தி போட்டு, அதன் மேல் இரண்டு குடம் குதிரை மூத்திரம் செறிக்கச் செறிக்கத் தெளித்து, நன்றாக மிதித்து, இறுகி, இரண்டு குடங் குதிரை மூத்திரம் செரித்துப்போனால், மேல்மண் போட்டு மிதித்துப் போடவும்.

எட்டுமாதஞ் சென்றால் எடுக்கவும்.

எடுத்த தவலையைத் திறந்து பார்த்தால் நல்ல உயர்ந்த விலை . . . . த்தளம் போல் சத்து ஏறி, அளவிடப்படாத பச்சை யாயிருக்கும்!

ஆதிநாராயண வடிவாயிருக்கும்!

தேவி சகாயம். வடுகநாதன் துணை.

## 16. பச்சைக் கற்பூரம் வைப்புமுறை

ஈனாத பச்சைவாழைக் கிழங்கு கன்னுதலை முழமென்ன வெட்டி, நான்கு மூன்று வெட்டி வந்து; பந்தல் மேலே காயப் போட்டு, பட்டை வாட வாடப் பிட்டுப்போட்டு, குருந்துக் கிட்ட ஒருமட்டை இருக்கையில் பனிப்பதத்தில் எடுத்து விரித்துப் பார்த்தால், இலைபோல் விரித்து எடுத்து வைத்துக்கொண்டு விவரம்.

ஒரு வள்ள அரிசிப் பானையைக் கொண்டு வந்து பானையிலிடு மருந்து:-

விலாமிச்சம் வேர் 2 காசு எடை
வெட்டிவேர் 2 காசு எடை

பானையிட்டு, இதுவும் பஞ்சதாரைச் சர்க்கரை பலம் 2 கூடப் பானையில் போடவும்.

நல்ல சம்பா அரிசி இரண்டு படி பச்சரிசி நன்றாகத் தீட்டிப் புடைத்துப் போட்டு, புடைத்த அரிசியை நாலுதரம் கழுநீர் களைந்து, பிசைந்து நன்றாய்க் கழுவிப் போட்டு, ஒரு வள்ளம் பசுவின்பால் அரிசியில் விட்டு, வாய்ப்பாடு நல்ல வெள்ளைச் சீலை இழையாகக் கட்டி, நடுவில் பள்ளமாகத் தொங்கக் கட்டி வைத்துப் பானை அடுப்பேற்றி, இந்தக் கட்டின சீலையை நனைத்துக் கட்டவும்; மேலே இந்த வாழைக் குருத்து விரித்துப் பள்ளமாயிருக்கவும் வேட்டு மேலே வைக்கவும்; மருந்து விபரம்:-

ஐம்பது வராகனிடை பலகை வெண்காரம் சாணிப்பாலில் சுத்திபண்ணி, பருங்கட்டியாயிருந்தால் கடலைபோல வெட்டி, இவையெல்லாம் வேடுகட்டின சீலைப்பள்ளத்தில் போட்டு, நல்ல பச்சைக் கற்பூரம் ஐந்துகாசு எடை தூக்கி, வெண்காரத்துடனே போட்டு, மேலே சுத்தமான குவிந்திருக்கிற சட்டி கொண்டு கவிழ்த்துப் பானைக்கும் சட்டிக்கும் சீலைமண் செய்து, அடுப்பில் வைத்து, ஆவாரம் விறகு கொண்டு, தாமரைப் பூப்போல எரிக்கவும்.

பானை வைத்த இடத்தில் தேவிக்கும் வடுகனுக்கும் விசுவாமித்திரருக்கும் சோடச உபசாரத்துடனே பூசை பண்ணவும்.

ஒரு சாமம் கைவிடாமல் எரிக்கவும்.

பிறகு, ஆறவிட்டு, ஆறி எடுத்துக் கொண்டு, ஒரு தட்டு, பீங்கான் சேமக்கலம் போலிருக்கிறதைக் கொண்டுவந்து வைத்துக் கொண்டு மூடின சட்டியைத் திறந்து பார்த்தால், வெண்காரம், பச்சைக் கற்பூரம் பாகுபோல் உருகித் தண்ணீர் போல நிற்கும்!

வாழைக் குருத்தைச் சேர்த்தாற் போல் சேர்த்து எடுத்துப் பொட்டணம் போலப் பிடித்துக் கொண்டு விவரம்:

பொட்டணத்திற்கு அடியில் ஓட்டை பண்ணி, பீங்கானுக்குள்ளே விடவும்; இந்தத் தண்ணீர்த் தட்டு, பீங்கானெங்கும் பரவி நிற்கும். அதைச் சற்று ஆறவிட்டு எடுத்துக் கொண்டு, ஒரு சுத்தமான வீட்டில், பெரிய சதுரமான மாடத்தில் வைத்துக் காற்றுப் படாமலிருக்கவும்.

இப்படி மூன்று நாள் சென்றால், எடுத்துப் பார்க்க வெடியுப்புப் போல் விளைந்திருக்கும்!

அதையெடுத்து, தட்டான பலகைக் கருதினால், வில்லை செதுக்கின்றாப் போலச் செதுக்கிப் பலகை பலகையாகக் கிளம்பும்,

இது அறியவும்.

பிறகு, பெரிய மூங்கிற் குழாயி லடைத்து, சீலைத் திரிபோன்று குழாய் வாய்க்கு மட்டாகத் திரித்து வைத்து, முந்தின பாளையின் மேலே சீலைத்திரியை மேலே ஏற்றி, குழாய்வாய் மூடிவைத்து, ஷோடசோபசாரத்துடனே பூசித்து, தேவிக்கும் வடுகனுக்கும் விச்வாமித்திர சுவாமிக்கும் பூசித்துக் குழாயெடுத்து, உயரச் சொருகி வைத்துப் பத்துநாள் போனால், எடுத்துப் பார்க்க, நல்ல **பச்சைக்கற்பூரம்** பிரதான ஆதிசரக்கு, தொழிலுக்கு நல்லது!

தேவி சகாயம்

## 17. பவள வைப்பு

நல்ல சாதிலிங்கம் பலம் 3 கொண்டுவந்து, முலைப்பாலில் மூன்றுநாள் ஊற வைத்து எடுத்துக் கொண்டு, எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்றுநா ளூறவைத்து எடுத்துக் கொண்டு, சாதிலிங்கம் மூன்றுக்குச் சங்கு நீறு பலம் 2 ஆகக் கலுவத்திலிட்டு, எருமைச் சீம்பால், செம்மறியாட்டுச் சீம்பால் விட்டு, முப்பது நாழிகை அரைத்து மெழுகானால் எடுத்து, நெய் தொட்டுக் கொண்டு, சாம்பிராணி உண்டை பவளம் உருட்டி, தென்னையீர்க் குருத்துப் போலச் சீவித், துவாரம் வைத்து, இப்படி ஒரு ஈர்க்குக்கு நாலு பவளம் கோர்த்து, மணிமுள்ளிக்காய் பிரமாண மிருக்கவும்.

இதனை நன்றாக உலர்த்தி எடுத்துக்கொண்டு விவரம்:

துடைப் பருமன் கெண்டைக்கால் பருமனில் விரால்மீன் கொண்டுவந்து வைத்துக் கொண்டு, அதனுடைய வாயைத் திறந்து, அந்த வாயில், முந்தின பவளத்தைச் சொருகி, இப்படி இரண்டு மூன்று கோவை வயிறு நிரம்பச் சொருகி, வாயைக் கட்டி, சீலை

சுத்தி வைத்துக் கொண்டு, ஒரு முடாவில் அரைப்பானை சம்பா நெல்லைத் தண்ணீர் விட்டுப் பிச்றிக் கொட்டி, அடுப்பிலிட்டு வேக வைக்கவும்.

நெல் வெந்து வாய்கீறினால், இறக்கி நெல்லைக்கொட்டி, ஆறினால், மீன் எடுத்துப் பார்க்க நல்ல சாம்பிராணி உருட்டாக இருக்கும்!

இது காயவிட்டு! அரிசியில் போட்டுச் செவ்வையாய்த் தீட்டி எடுத்து, நல்லெண்ணையில் மூன்று நாள் ஊறி எடுத்துத் துடைத்துப் போட்டு, கருவளையல் மணிக்குக் கீழும் மேலும் கோர்வையிட்டு முடிச்சிட்டுக் கோர்வை ஒன்றுக்கு ஆறுமணிப் பவளஞ் சேர்க்கவும்.

விலையேறப்பட்ட மணியாயிருக்கும்!

தேவி சகாயம். குருவே துணை.

## 18. நல்ல அணிமுத்து வைப்பு விவரம்

பங்குனி மாதம், சித்திரை மாதம் முதல் மீன்வேட்டை ஆடு மிடத்தில், போய்ப் பருமீன் கண்ணுமுழியை விலைகொடுத்து, ஆயிரம் இரண்டாயிரம் பருமுழியாய் வாங்கி எடுத்துக்கொண்டு மணி, கண்டக்காய், தூதுவிளங்காய்ப் பிரமாண மெடுத்துக் கொண்டு விவரம்:

நல்ல முத்துப்போலிருக்கு மிதை எடுத்துக் கொண்டு, நன்றாய்ச் சுத்திபண்ணின ரசம் பலம் 4, கல்லிலிட்டு, சிறுசெருப்படிச் சாறு விட்டு, மூன்றுநாள் ரசம் அரைக்கவும். ரசம் ஓட்டமடங்கிக் கூழ் போல நிற்கும்! ரசத்தின்மேல் துரும்பு நிற்கும்! ஓட்டமடங்கும்! அக்னிக்கும் புகையாது! வாலரசமாகும்; இது அறியவும்.

இந்த ரசம் கையில் வராகனெடை எடுத்துக்கொண்டு, நாலு முத்துக்கூட வைத்துச், சாராயங்குத்திக் கொண்டு கஞ்சாவை நுணுக்குவதைப் போல, மணியும் ரசமும் தேய்த்துத் தேய்த்துப் பார்க்க, ரசத்தை மணி வாங்கிக் கொள்ளும்! கனமேறும்; உருண்டு திரண்டு மணியாகும்!

நன்றாக வாங்குகிற மட்டுக்கும் ரசம் கொடுக்க, அணி முத்தாகும்!

பரீட்சித்தாலும் பரீட்சை வரும்; புரை வாங்கிப் பார்த்தாலும் புரை வரும்!

இந்த முறை யறியவும். குருவே துணை.

இப்படிக்கு ஆயிரம், இரண்டாயிரம் முத்து உண்டுபண்ணி வைத்தால், விலையேற்பட்ட நகை!

## 19. முகமினுக்கி வைப்பு

நல்ல சிவந்த கோரோசனை பலம் 1 கொண்டு வந்து, கலுவத்திலிட்டு நேர்த்தியாகப் பொடி பண்ணிப் பச்சைக் கற்பூரம் வராகனொன்று ஆகப் பொடிபண்ணி, புனுகு வராகன் இரண்டு, சவ்வாது வராகன் இரண்டு, ஆகப் பொடி பண்ணி, இரண்டு தேங்காய் மருவாதிப், பசுவின் வெண்ணையில் கலந்து, பரும்டருங் கொம்புச் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு, வராகனெடை இரண்டுபண மேரைக்கு விற்கவும்.

இதில், பச்சைப்பயறு மருவாதி, எடுத்துக் கையில் தேய்த்து: முகம், உடம்பில் தேய்க்க முகமும் உடம்பும் சந்திர சூர்யப் பிரபையாயிருக்கும்!

மகாராச வசியமாயிருக்கும்! மகாகாந்த வடிவமா யிருக்கும்!
இது ஆணுக்கும் பெண்ணுக்குமாகும்.
தேவி சகாயம்.
[மருவாதீ - அளவு; தேங்காய் மருவாதி - தேங்காய்அளவு]

## 20. நவச்சாரம் வைப்பு

ஆனை மூத்திரம் வள்ளம் 5, குதிரை மூத்திரம் வள்ளம் 5, ஒட்டகை மூத்திரம் வள்ளம் 5, கழுதை மூத்திரம் வள்ளம் 5, பசுவின் மூத்திரம் வள்ளம் 5, எருமை மூத்திரம் வள்ளம் 5, வெள்ளாட்டு மூத்திரம் வள்ளம் 5, செம்மறியாட்டின் மூத்திரம் வள்ளம் 5, அமுரி வள்ளம் 5 ஆக விவரம்:

இருபது வள்ளம் பிடிக்கின்றாப் போலக் கெட்டித் தாழிச் சட்டி கொண்டுவந்து, அடுப்பில் வைத்து, இந்த மூத்திரமெல்லாம் தாழிச்சட்டியில் இட்டு, அடுப்பிலேற்றி எரித்துச் சுண்டவிட்டு, அதிலிடும் மருந்து விவரங்

| | |
|---|---|
| கல்லுப்பு | பலம் 3 |
| வெடியுப்பு | பலம் 6 |
| சீனம் | பலம் 2 |
| பூநீர் | பலம் 2 |

ஆகக் கரைய வேகவிட்டுச் சேர்த்துப் பதமானால் இறக்கி மூலையில் வைத்து மூடி, மூன்று நாள் சென்றால் திறந்து பார்க்க நன்றாகச் சத்தேறிக் கம்பி விழுந்து, நவச்சாரமாயிருக்கும்!

பிளந்தெடுத்துக் கட்டிகட்டியாக எடுத்து, உமியில் வைத்து வியாபாரம் பண்ணவும்.

தேவி சகாயம். குருவே துணை.

## 21. வெள்ளைப் பாஷாணம் வைப்பு

ஒரு வள்ளம் பிடிக்கின்றாப் போலக் கெட்டிக் குண்டுசட்டியாய் அடுப்பிலேற்றி, அதிலிடும் மருந்து விவரம்:-

இருபது பலம் வெள்ளீயம் விட்டு,
ஐந்து பலம் பொன்னரிதாரம் விட்டு,
முப்பது பலம் சீனிக்காரமிட்டு,

| | |
|---|---|
| வெடியுப்பு | பலம் 20 |
| வெண்காரம் | பலம் 2 |
| துருசுப்பொடி | பலம் 5 |
| பூநீர் | பலம் 4 |
| அன்னபேதி | பலம் 4 |

ஆகப் பொடிபண்ணிப் போட்டு, பன்னிநெய் படி இரண்டு விட்டுக் கிண்டி, சட்டிக்கு வாய்ச்சில்லிட்டு, வச்சிரமண் மூன்று இட்டு,

இதற்குப் பொருந்தின சட்டி கவிழ்த்து, வச்சிரமண் மூன்று பூசி, கமலாக்கினியாய் ஆறுயாம மெரித்து, உருகி, நீராகி, வட்டாக நிற்கும்!

சாங்கசீதள மாறினால், திறந்து பார்க்க நல்ல வெள்ளைப் பாஷாணமா யிருக்கும்!

வைத்துக் கொண்டு வியாபாரம் பண்ணவும்.

## 22. கௌரிப் பாஷாண வைப்பு

குண்டுசட்டி கெட்டியாக, அடுப்பில் வைத்துக் காரீயம் பலம் 15 விட்டு உருகும்போது, மேல் மருந்து விபரம்:-

| | |
|---|---|
| வெடியுப்பு | பலம் 5 |
| கல்லுப்பு | பலம் 5 |
| துருசு | பலம் 5 |
| வெங்காரம் | பலம் 3 |
| நவச்சாரம் | பலம் 3 |
| அன்னபேதி | பலம் 3 |
| பூநீறு | பலம் 3 |
| பொன்னரிதாரம் | பலம் 5 |
| சீனம் | பலம் 2 |

ஆகப் பொடி பண்ணி, குண்டுசட்டியில் போட்டு... நெய்படி இரண்டுவிட்டு உருகும்போது, தாழிக்குச் சில்விட்டுச் சீலைமண் செய்து, மூன்று மண் செய்து, மேலே சட்டி கவிழ்த்து, வச்சிர மண் மூன்றுசெய்து, கமலாக்கினியாய் ஆலம் விறகு கொண்டு, அறுபது. நாழிகை எரிக்க, உருகி மணியாக இருக்கும்!

சாங்கசீதள மாறினால், எடுத்துப் பார்க்க மஞ்சள் கௌரிப் பாஷாணமாகும்!

எடுத்து வியாபாரம் பண்ணவும்.

இது முதிர்ந்தால், இரத்த கௌரிப் பாஷாணமாகும்!

தேவி சகாயம். குருவே துணை. சரஸ்வதி துணையாகவும்.

[கமலாக்கினி:- இரண்டு விரல் பருமன் உள்ள விறகுகள் இரண்டை எரித்தால் உருவாவது.

எரியும் தீயானது, தாமரைப் பூப்போல, வட்டவடிவில் எரிவதால், கமலாக்கினி எனப்பட்டது. கமலம் - தாமரை.]

## 23. மாம்பழத் தொட்டிப் பாஷாண வைப்பு

துத்தநாகம் பலம் 10 உருகும்போது சுத்திபண்ணின ரசம் பலம் 10 கொடுக்க வாங்கிக் கொள்ளும்; இது மாவாக நொறுங்கும்.

இதை எடுத்துக் கலுவத்திலிட்டு, மேல் மருந்து,

| | |
|---|---|
| துருசு | பலம் 8 |
| துத்தம் | பலம் 4 |
| நவச்சாரம் | பலம் 3 |
| சீனம் | பலம் 6 |
| வெங்காரம் | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 2 |
| பூநீறு | பலம் 2 |
| சூடன் | பலம் 2 |
| அரிதாரம் | பலம் 3 |
| இந்துப்பு | பலம் 2 |
| கல்லுப்பு | பலம் 3 |

ஆக்ப் பொடிபண்ணி, கலுவத்திலிட்டுப் பாஷாணச் சாறு நாளொன்று, எருக்கம் பழுப்புச் சாறு நாளொன்று, சதுரக் கள்ளிச்சாறு நாளொன்று, சிறு செருப்படிச் சாறு நாளொன்று, அதை அரைத்து ஐந்து குப்பி, ஒண்ணரைப்படி பிடிக்கின்றாப் போல எடுத்து வந்து, சிலை செய்து அதில் மருந்து, வன்னித்திராவகம் விட்டு அரைத்து, உலர்த்திக் குப்பியி விட்டு, வாய்மூடி, வாலுகாயந்திரத்தில் பதினாறு யாமமெரித்து, சாங்க சீதளமாறினால், குப்பிதட்டிப் பார்க்க மாம்பழத் தொட்டிப் பாஷாணமாகும்!

தேவி சகாயம்.

## 24. வங்காளச் சவ்வீரம் வைப்பு

| | |
|---|---|
| சீனம் | பலம் 10 |
| வெடியுப்பு | பலம் 20 |
| பூநீர் | பலம் 30 |

ஆகச் சேர்த்து, மகேந்திரத்தில் திராவகம் வாங்கி வைத்துக் கொண்டு, கேந்திரமாவது வட்டச் சாராயம் வாங்குகிற விவரம் அறியவும்.

சுத்தரசம் பலம் 10, கலுவத்திலிட்டு, முன்படித்த அம்பத் திராவகங் கலுவத்திலிட்டு அரைக்க, சங்குபோல வெளுத்துச் சோளம் போல் பொரிந்து நீறாகும்.

இதற்கு மேல் சரக்கு விவரம் :

| | |
|---|---|
| கல்லுப்பு | பலம் 2 |
| வெடியுப்பு | பலம் 2 |
| சீனம் | பலம் 2 |
| துருசு | பலம் 3 |
| பூநீர் | பலம் 2 |
| அன்னபேதி | பலம் 3 |
| நவச்சாரம் | பலம் 4 |

இவையெல்லாம் அரைத்துக் குப்பிக்கு மூன்று வச்சிரமண் பூசி அரைத்த மருந்தைக் குப்பியிலடைத்து, மாக்கல் வாய்க்கு மூடி, வச்சிரமண் பூசி, வாலுகாயந்திரத்தில் பன்னிரண்டு யாமம் எரித்து, ஆறியெடுக்க, நல்ல வங்காளச் சவ்வீர மாகும்.

## 25. சாம்பிராணித் தைலவைப்பு

இரண்டு வள்ளம் பிடிக்கின்றாப் போல ஒரு பழைய பிடச் சட்டி கெட்டியாகக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு, நடுச் சட்டியில் நடுவிரலுயரம் களிமண்ணினாலே விளக்குக் கம்பம் பண்ணி, அதன் மேல் பெரிதாக அரைப்படி பிடிக்கின்றாப்போல பீங்கான் வைத்து விவரம் :

சட்டி அடுப்பிலேற்றி, சாம்பிராணி பலம் 2, சுண்டைக்காய் போல உடைத்துப் பொடி பண்ணி இரண்டு பலம் பிடைச்சட்டியில் கம்பத்து மேல் வைத்துப் பீங்கானுக்குத் துட்டிடை ஜலம் விட்டுக் கம்பத்தைச் சுத்தி வெட்டின சாம்பிராணி பரப்பி, பச்சைவெட்டுக் குங்கிலியம் பலம் 1, கருங்குங்கிலியம் பலம் 1 ஆகப் போட்டு, அடுப்பின்மேல் வைத்து அடுப்பில் வைத்த சட்டிமேல் ஐந்து வெள்ளம் பிடிக்குங்குடம் வைத்து, நிறையத் தண்ணீர் குடம் நிரம்ப விட்டு, பானைக்குஞ் சட்டிக்கும் வச்சிரச்சீலைமண் மூன்று பூசி, அடுப்பிற்கு ஆவாரம் விறகு கொண்டு, கமலம்போல் எரிக்கவும்.

எரித்து, மேல்குடத் தண்ணீரும் நன்றாகச் சுட்டால், அந்தத் தண்ணீரை இறுத்துப் போட்டு, பதில் தண்ணீர் விடவும்.

மறுபடி, அந்தத் தண்ணீர் முதிரக் காய்ந்தால், அடுப்பு எதிர்க்காமல் தீப்பிரித்து அடுப்பு ஆறவிடவும்

சாங்கசீதளமாறினால், சீலைமண் பிரித்து, குடமிறக்கிப் பார்க்கில் சாம்பிராணித் தைலம் வெடியுப்புப்போல் கம்பி விழுந்து இருக்கும்!

கிண்ணம் பார்த்தால் அப்படி முக்கால்படி பிடிக்கிறாப்போல் வைக்கவும்.

பிறகு, தயிலம் பணத்திற்கு வராகன் மேனிக்கு விற்கவும்.

இந்தத் தயிலத்தைக் குன்றிமணிப் பிரமாண மெடுத்து, ஒரு படி நல்லெண்ணையில் போட, 'களகள'வென்று பொங்கிக் கரைந்து தணிந்தால் அதை எடுத்து முகர்ந்து பார்த்தால் நல்லெண்ணைச் சாம்பிராணித் தைலம் போலே இருக்கும்.

இந்தத் தைலங்கொண்டு முழுகினால் சிரசு தலைநோவு, ஒரு தலை நோவு, சன்னிபதி மூன்றும், பழஞ்சுரம், வாதசூலை, நரித் தலைவாதம், சுவாசகாசம், காதுமந்தம், இருமல், ஈளை மயக்கம். திசைவாயுவும் இந்தத் தைலம் காசு எடை உள்ளுக்குச் சென்று வர அக்கினி மந்தம், குன்மவாயு, திசைவாயு, அசீரணவிக்கல், காமாலை இவையெல்லாம் தீரும்.

குருவே துணை,

## 26. கஸ்தூரி வைப்பு

பெரிய வெள்ளாட்டுக் கிடா, மொத்தைக் கிடாவைப் பிடித்து. பீசத்தடிக் காலுக்குச்சியின் இருக்கில், களிம்பு பிடித்துப் பிசினைப் போல இருக்கும். நிரம்ப ஆடு புருடர்களாயிருக்கும். இது வழித் தெடுக்கவும்.

இப்படி நாலைந்து ஆட்டில் வாங்கினால் இரண்டுபலங் கூடும்.

இதை எடுத்துக் கொண்டு விவரம்:

மாமரம் முத்தி முரடுவிழுந்த மரத்தில், உள்புகுந்து பார்த்தால், ஆட்டு ஈரல் போல் காளான் குங்கும வர்ணமாக விழுந்திருக்கும்; அதைப் பார்த்து எடுத்துக் கொண்டு வந்து விவரம்

இந்தக் காளான் பலம் 2. முந்தின ஆட்டின் காலின் முகட்டி லிருந்த அமுக்கு பலம் 2. ஆகப் பலம் நாலுங் கூட்டி வைத்துக் கொண்டு நன்றாக ஆட்டு ரத்தம் விட்டு, மைபோல அரைத்துக் கொண்டு வழித்து, வில்லை பிடித்து, உலர்த்தி எடுத்துக்கொண்டு. நாலு நாலு பத்துக்கு மேல்மருத்து விவரம்:

| | |
|---|---|
| புனுகு | விராகனிடை 4 |
| சவ்வாது | விராகனிடை 4 |
| பச்சைக் பற்பூரம் | விராகனிடை 1 |
| கோரோசனை | விராகனிடை 1 |
| சமுத்திரபச்சை | விராகனிடை 1 |
| கோஷ்டம் | விராகனிடை 1 |
| பூலாங்கிழங்கு | விராகனிடை 2 |

ஆகக் கலுவத்திலிட்டு முந்தி ஆட்டு ரத்தத்தில் அரைத்து வைத்த வில்லை பலம் 4 இவை அடங்கலும் கூட்டிக் கலுவத்திலிட்டுச் செம்மறியாட்டு மயிர், குறுகக் குறுக நறுக்கி, ஒரு விராகன் தூக்கம் கூட்டி நறுக்கி, அடங்கலும் கலுவத்திலிட்டு இளநீர்விட்டு நன்றாக அரைத்து வழித்து வைத்துக் கொண்டு விரைம்:

செம்மறிக்கிடாய் உடை அடியாமல் முத்தினகிடாய் அடித்த விடங்களில் பார்த்து, அதன் புடுக்கு முன்பில் தோப்பாரம் போல் இரண்டு விரை முன்பால் இரண்டு தோப்பார மிருக்கும்; அது இரண்டு விரற்கடை யறுத்துக் கொண்டு, மைபோல உலர்த்தி, இப்படிப் பத்துப் பதினைந்து தரம் பண்ணி, அதன்முன் அரைத்த மருந்து திணித்து, உலர்த்தி வைத்துக் கொண்டால், நல்ல தீட்டு முனையாகக் கஸ்தூரியாகும்!

பரீட்சை கேட்டவனுக்கு முள்ளா மருவாதி தீயில் புடம்போட, மாங்கிசக் கலிச்சு வீசும்! நாவில் போட்டால் ஜலம் ஊறும்!

தோஷம் பிறந்த பேருக்கு முலைப் பாலில் அரைத்து, நாவில் துவலைபோடத் தோஷம் விமோசனமாகும்!

இந்தக் கஸ்தூரியைப் பணத்திற்குப் பண எடை விற்கவும்.
குருவே துணை.
(முரடு - கனு;
அடங்கலும் - எல்லாவற்றையும்.
உடைஅடித்தல் - ஆட்டுக்குக் காய் அடித்தல்.
பரீட்சை கேட்டவன் - சோதித்துப் பார்க்க விரும்பியவன்.
மாங்கிசம் - மாமிசம்)

## 27. குங்குமப்பூ வைப்பு

மயிர்க்கொன்னைப் பூமேல் நரம்பு கிள்ளி யெடுத்து, உலர்த்தி, இரண்டுபலம் எடுத்துக்கொண்டு, இதற்குமேல் மருந்து,

புனுகு
சவ்வாது
கஸ்தூரி
கம்பீரச் சாம்பிராணித் தைலம்
நாகணம்
பூலாங்கிழங்கு
பச்சிலை
கோரோசனை
வெட்டிவேர்

ஆக வகைக்கு விராகனெடை ½ பொடி பண்ணி, ஒரு படி பசுவின் பசுவின் நெய்யில் போட்டுப், பதமாகக் காச்சும்போது, நல்ல வெள்ளைச் சந்தனம் விராகன் 1, இந்தத் தைலத்தில் முத்தின கொன்னைப் பூப்போட்டு, முதிராமல் பதமாக இறக்கி வைத்து அப்பால் காகித்தில் வைத்து வைக்கவும்.

பத்துநாள் சென்றால், எடுத்துச் செலவு பண்ணவும்.

மறுபடி அதில் போட்டுக் காய்ச்சும் மருந்து,

சாதிக்காய்
சாதிபத்திரி
கிராம்பு
ஏலம்

இவை நாலும் வகைக்கு விராகன் ½ தூக்கம் போடவும்.

நல்ல தீட்டுமுனைச் சரக்கு ஆக; முன் கூட்டின சரக்குக் கெல்லாந் தீட்டுமுனையாகச் சேர்க்கவும்; போலிச் சரக்கானால் சரக்குக் கெட்டுப்போகும்!

இது அறியவும்.

(கொன்னை - கொன்றை
தூக்கம் - எடை)

## 28. கற்பூர மெழுகு வைப்பு

| | |
|---|---|
| நல்ல மலாக்காய்ச் சாம்பிராணி | பலம் 1 |
| நல்ல ஆலத்திக் கற்பூரம் | பலம் 1 |

ஆக இரண்டுங் கலுவத்திலிட்டு, இரண்டு நாழிகை அரைக்க, நல்ல தேன்மெழுகு போல ஆகும்!

எடுத்துப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

இந்த மெழுகு தூதுவிளங்காய் மருவாதி ஒரு படி நல்லெண்ணையில் போடக் கொதித்துப் பொங்கித் தயிலமாம்!

மகாவாசனையாகும்!

குருவே துணை.

## 29. சவ்வாது வைப்பு

நல்ல புனுகு விராகனெடை 2
நல்ல சவ்வாது விராகனெடை 2
நல்ல கோரோசனை விராக்னெடை 1
நல்லாத் திணிந்த பசுவின் வெண்ணை 1
சாம்பிராணி மெழுகு விராகனெடை ½
கெம்புனு(?) விராகனெடை 1
சந்தனத் தைலம் காசு அளவு

ஆகச் சேர்த்து, அணிப்பிள்ளை மயிர், கீரிப்பிள்ளை மயிர் ஏதாகிலும் கால் விராகனாகச் சேர்த்து அரைத்துச் செம்புப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

பத்து நாள் சென்றால் செலவு பண்ணவும்.
நல்ல சவ்வாது ஆகும்.
நல்ல தீட்டுமுனையான சவ்வாதாகும்.
இது அறியவும்.

[பரணி - சாடி (jar)]

## 30. திருச்சூரணம் வைப்பு

நல்ல மலையாளத்து அரக்கு மஞ்சள் பலம் 20 கொண்டு வந்து, ஒன்றிரண்டாய் நையத் தட்டி எடுத்து, ஒரு நல்ல சட்டியில் போட்டு, எலுமிச்சம்பழம், நார்த்தம்பழம் இது இரண்டும் வகைக்கு இரண்டுபடி சாறு பிழிந்து, மஞ்சள் ரொம்பத் தேக்க விட்டு, வெண்காரம் பலம் 2 எடுத்து ஒரு சட்டியில் போட்டு, ஒன்றரைப்படி தண்ணீர் விட்டுக் கொதிக்க வைக்க, வெண்கார முருகிக் குழம்பாகும்.

அதைத் தெளிய வைத்து எடுத்து மஞ்சள் போட்டு . . . . னபச்சாறு விட்ட சட்டியில் கல், மண் விழாமல் இறுத்து, அறுபது நாழிகை மஞ்சளுக்குள் விட்டுப் பார்த்தால், சந்திரோதயம் போலச் செந்தூரித்திருக்கும்!

வெய்யில் படாமல் உலர்ந்து நன்றாகக் காய்ந்தால், எடுத்துக் கல்லுரலில் போட்டுக் கடப்பாரை கொண்டு நன்றாய் மாவாக இடித்து வைத்துக் கொண்டு விவரம்:

ஒரு அகலவாய்ச் சட்டிக்கு, நல்ல கெட்டிச் சல்லாச்சீலை கட்டிக் குத்தாழாக வேடுகட்டி, இந்த இடித்த செந்தூரம், வேட்டு மேல் போட்டு இறக்க கீழே சட்டியில்... திருச்சூர்ணம் நல்ல சந்தி ரோதயம் போல மாதளம் பூவர்ணமாக மாவாக இருக்கும்!

அதை எடுத்து, மாந்தோல் பெட்டியில் அடைத்து, லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, நெல்லிப் பருப்பு, சீதேவி செங்கழுநீர் வேர், சிறியாநங்கை வேர், உரம், வெள்ளையுரம் ஆகச் சரக்கு 3ம் இதற்கு மேல் சரக்கு அறியவும்.

பசுவின் நெய் தெளித்து வறுக்கவும். பிறகு, இது பொன்னிற மாகக் கருகாமல் வறுத்து எடுத்துக் கல்லுரலில் இட்டுக் கடப் பாரை கொண்டு இடித்துத் தூளிதமாக்கி, நன்றாகத் தெள்ளி எடுத்து வைத்துக் கொண்டு, அம்மியிலிட்டு, நேர்ப்பாக அரைத்து, வழித்து வைத்துக் கொண்டு, மேல் சரக்கு விவரம்:

நல்ல தீட்டுமுனையான சவ்வாது, கஸ்தூரி, கெம்புறு, மலாக் காய்ச் சாம்பிராணித் தைலம், மெரியாசுப்பால் தைலம் ஆக வகைக்கு விராகனெடை 10 அம்மியில் வைத்து, அரைத்து முந்தின சரக்குப்பொடி அரைப்படி கூட வைத்து அரைத்துப் பின்பு சகல சூர்ணம் ஒன்றாகத் தாவித்து, சகலமும் சேர்த்து, வட்டப் பொட்டியில் அடைத்து வைத்துக் கொண்டு, ராஜாக்களுக்குச் சேர் அஞ்சு பொன் மேரைக்குத் தூக்கிடவும்.

தைவிக வாசனை என்று அறியவும். இந்தக் கதம்பம் சிவசொரூபம்.

## 31. மரகதப் பச்சைக் கதம்பம் வைப்பு

நல்ல வெள்ளைச் சம்பாவரிசி படி 5 எடுத்து, முத்திட்டலுந் தீட்டிப் புடைத்துத் தேய்த்துப் புடைத்து எடுத்துக் கொண்டு நல்ல சட்டியிலிட்டு, நல்ல தண்ணீர் விட்டு, மூன்று தரம்

பிசைந்து, உறசி நன்றாய்க் கழுவி எடுத்து நீர்வடித்து, உலர்ந்தால் கல்லுரலில் இட்டுக் கடப்பாரைக் கொண்டு இடித்துத் தெள்ளி எடுத்துக் கொண்டு, நன்றாய் அம்மியிலிட்டு, நேர அரைத்து எடுத்துக் கொண்டு, மாவு ஐந்துபடி, சுத்திபண்ணின மலையாள மஞ்சள் பொடி படி 3 ஆகச் சேர்த்துக் கொண்டு, மேல் மருந்து வகையறியும்படி,

நல்ல வயிர மலாக்காய் வெள்ளைச் சந்தனம் பொடி படி 2, அகில் சந்தனம் வயிரம் அரைத்து உலர்த்திப் படி 1, புஷ்ப தேவதாரச் சந்தனம் பொடி படி 1 ஆகச் சூர்ணத்தில் கலந்து வைத்துக் கொண்டு நல்ல தீட்டுமுனை அவுரிநீலம் பலம் 5 நேரப் பொடிபண்ணி, சூரணமெல்லாங் கலந்து, அம்மியில் இட்டு நன்றாக அரைக்கும் போது, நல்ல மரகதப் பச்சையாகும்!

இதற்கு மேல்சரக்கு விவரம் அறியும்படி :

மகரைப் பூ
கொட்டுச்சாந்து
விளா
குண்டோசினை
கிளியவரம்
சமுத்திரப்பச்சை
கற்கடக சிங்கி
ஆண்மணி
நாகணம்
சிறுநாணப் பூ
கொத்தமல்லி
கோஷ்டம்
பூலாங்கிழங்கு பலம் 10
ஏல அரிசி
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கிராம்பு

தாளிசைப் பத்திரி
குராசாணி
ஓமம்
நெல்லிப் பருப்பு
செண்பகப் பூ
மருக்கொழுந்து
வெட்டி வேர்
விளாமிச்சை வேர்
நன்னாரிவேர்
ஓதாசெங்கழுநீர்
வால்மிளகு
சருவப்பட்டை
லவங்கப்பட்டை
லவங்கப்பத்திரி
புனுகு
மல்லிகை
திருநீற்றுப்பச்சை
மாசிப்பச்சை
வறுத்த உளுந்து
வறுத்த கடலை
வறுத்த பச்சரிசி
கம்மாப் பொரி
வறுத்த எள்ளு
மாகாளிக் கிழங்கு
கஸ்தூரி மஞ்சள்
வெள்ளை புரம்
சிறியா நங்கை
விளாம்பழச் சூரணம்
வில்வப்பழச் சூரணம்

ஆகு வகைக்குப் பலம் 5, தனித்தனியே நெய்குத்திப் பொரித்துக் கொட்டி, நெய் சேராகக் குத்தவும்; நிரம்ப ஆகாது!

இவை கல்லுரலிலிட்டுப், பெருங் கடப்பாரை கொண்டு இடித்துத் தெள்ளி, வடி கொண்டு அம்மியில் நன்றாய் அரைத்து, முந்தின சூரணத்தில் கலந்து வைத்துக்கொண்டு, இதற்கு மேல் சரக்கு விவரம் :

நல்ல தீட்டுமுனைப் புனுகு

நல்ல தீட்டுமுனைச் சவ்வாது

நல்ல தீட்டுமுனையான கஸ்தூரி

நல்ல தீட்டுமுனையான பச்சைக் கற்பூரம்

நல்ல மலாக்காய் சாம்பிராணித் தைலம்

மட்டிப்பால் தைலம்

நல்ல பெரியாகப்பால் தைலம் ஆகச் சேர்த்து கல்லி

விட்டு, நன்றாக அரைத்து, முந்தின சூரணம் அரைப்படி கூட்டி யரைத்து எடுக்கவும்

இவைகள் வகைக்கு விராகன் எடை 10 கூட்டி அரைத்துச் சகலமும் கலந்து வைத்துக்கொண்டு, வட்டப் பொடியில் அடைத்து வைத்துக்கொண்டு, ராஜாக்களுக்குச் சேர் ஒன்று ஐந்து பொன்னுக்கு விற்கவும்.

தேவி ரக்ஷிக்கவும்.

## 32. நீலக்கதம்ப வைப்பு

நல்ல சம்பாவரிசி பச்சரிபடி 4 எடுத்து, முத்திட்டலுந்தீட்டி, மூன்றுதரம் கழுநீர் அரிசி பிசைந்து கழுவி, நன்றாக உரசிக் கழுவி, நீர் வடியவிட்டு, இடித்து, மாவாக்கி, நன்றாகத் தெள்ளி யெடுத்து, அம்மியில் நன்றாக அரைத்து, மாவை நேர்ப்பாக அரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு, நல்ல மலாக்காய்ச் சந்தனம் அரைத்து, உலர்த்திப் பொடிபண்ணி, இரண்டுபடி எடுத்துவைத்துக் கொண்டு, அதில் சந்தனம் அரைத்துப் பொடித்துப் படி $1\frac{1}{2}$ ஆக இவைகள் கூட்டி வைத்துக்கொண்டு, இதற்குமேல் சரக்கு,

நாகணம்
கோரோசனை
சிறுநாகப்பூ
கொத்தமல்லி
கொட்டிச்சாந்து
மரிக்கொழுந்து
வெட்டிவேர்
விளாமிச்சவேர்
சமுத்திரப்பச்சை
கோஷ்டம்
பூலாங்கிழங்கு
ஏல அரிசி
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கிராம்பு
தாளிசப்பத்திரி
குரோசாணி
ஓமம்
துளசிப்பூ
மாசிப்பச்சை
திருநீற்றுப்பச்சை
துளசி
சீதாசெங்கழுநீர்
கோரைக்கிழங்கு
நன்னாரி
காட்டுமாகாளிக்கிழங்கு
தேவதாரம்
பரப்பைக்கிழங்கு
வெள்ளை விளாம்பூ
சிறியாநங்கை வேர்
செம்முழிச்சான் வேர்

வறுத்த காரெள்ளு
வறுத்த உளுந்து
வறுத்த பச்சைப் பயறு
வறுத்த கடலை
கம்பம் பொரி
நெல்லரிசிப் பொரி

ஆக வகைக்குப் பலம் 5, அந்தச் சரக்குகளைத் தனியே நன்றாகப் பசுவின் நெய் நன்றாகவிட்டு, வறுத்து இடித்துப் பொடிபண்ணி, ஆனை மணி, நாகணம், கருவப்பட்டை பலம் 5 நன்றாய் நெய் மிதக்கவிட்டுச் சிவக்க வறுத்து எடுத்துக் கொண்டு, பொடிபண்ணிச் சகலமும் நன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டு, மேல்சரக்கு

நல்லமுனைப் புனுகு
சவ்வாது
கஸ்தூரி
மலாக்காய்ச் சாம்பிராணித் தைலம்
நல்ல தீட்டு முனையில் மட்டிப்பால் தைலம்
நல்ல தீட்டுமுனை மிருகச்சிப்பால்
தீட்டு முனைப் பச்சைக் கற்பூரம்

ஆக வகை ஒன்றிற்கு விராகனிடை 10 ஆக அம்மியிலிட்டு நன்றாக அரைத்துப் பூர்வ சூர்ணம் ஒருபடி கூட்டி அரைத்துச் சகலமும் நன்றாகச் சேர்த்துப் புனுகுச் சட்டம், சோம்பு, ஏலம் இது பொடி பண்ணி, சட்டியில் போட்டுப் பசுவின் நெய்விட்டுத் தாளிதம் பண்ணி, வட்டப் பொட்டியில் அடைத்து வைத்துக் கொண்டு, ராசாக்களுக்குச் சேர் ஐந்து பொன் மேனிக்கு விற்றுக்கொள்ளவும்.

தேவி ரக்ஷிக்கவும்.

## 33. சந்தன வில்லை வைப்பு விவரம்

நல்ல சம்பாவரிசி இரண்டு வள்ளம்; முத்தீட்டலும் தீட்டி எடுத்துக் கொண்டு விவரம்:

மூன்றுதரம் தேய்த்துப் பிசைந்து, கழுவி யெடுத்து, நீர் வடித்துக்கொண்டு, நல்ல கல்லுரலில் இட்டு, சடப்பாரை கொண்டு இடித்துத்தெள்ளி எடுத்துக்கொண்டு, அம்மியில் இட்டு நன்றாய் நேர்த்தியாய் அரைத்து வைத்துக் கொண்டு மேல்சரக்கு விவரம்

| | |
|---|---|
| அரிசி மா | பலம் 50 |
| நல்ல மலாக்காய்ச் சந்தனம் அரைத்துத் திட்டுமுனையாய் | பலம் 30 |
| அகில் சந்தனம் | பலம் 20 |
| மஞ்சள் பழுக்காய் | பலம் 30 |
| தேவதாரம் | பலம் 10 |

ஆகப் பொடிபண்ணிச் சேர்த்து, ஒன்றுபண்ணி வைத்து, மேல்சரக்கு

கிழி அவிரிப்பட்டை
பூலாங் கிழங்கு
ஆண்மணி நாகணம் பலம் 10
கொத்தமல்லி
சமுத்திரப் பச்சை
நாகணம்
கோரோசனை
சிறுநாகப்பூ
லவங்கப்பட்டை
கேவிளா
கோஷ்டம்
லவங்கப் பத்திரி
வெட்டி வேர்
கருவாய்ப்பட்டை
மருக்கொழுந்து
விலாமிச்சைவேர்

நெல்லிப் பருப்பு
பருத்திப் பருப்பு
கஸ்தூரி மஞ்சள்
நன்னாரி வேர்
காட்டு மாகாளிக் கிழங்கு
இண்டம் பூ
வெள்வேலம்பூ
பரப்பைக் கிழங்குப்பூ
மாசிப்பச்சைப்பூ
திருநீற்றுப்பச்சைப்பூ
துளசிப்பூ
கோரைக்கிழங்கு
சீதேவி வேர்
சிறியாநங்கைவேர்
கஞ்சாங்கோரைப்பூ
சிவதுளசிப்பூ
சடாமஞ்சி
வால்மிளகு
தாளிசப்பத்திரி
குரோசாணி
ஓமம்
ஏல அரிசி
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கிராம்பு
உரம்

ஆக வகைக்குப் பலம் 2, பசுவின் நெய்யிற் கொண்டு, நன்றாக வறுத்துக் கல்லுரலிலிட்டுக் கடப்பாரை கொண்டு இடித்து வைத்துக் கொண்டு விவரம்:

சம்மா அரிசிப் பொரி
வறுத்த கடலைப் பொரி
வறுத்த உளுந்து
வறுத்த பச்சைப் பயறு
வறுத்த எள்ளு

ஆகக் கூட்டிக் கலுவத்திலிட்டு, நன்றாக அரைத்து, மாவாகப் பண்ணி, முன் சூரணங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு மேல் சரக்கு விவரம்:

தீட்டுமுனைப் புனுகு
புனுகுச்சட்டம்
நல்லமுனைச் சவ்வாது
சவ்வாதுக் சட்டம்
தீட்டுமுனைக் கஸ்தூரி
பச்சைக் கற்பூரம்
மலாக்காய்ச் சாம்பிராணித் தைலம்
குங்கிலியத் தைலம்
பச்சை வெட்டுத் தைலம்
மட்டிப்பால் தைலம்
மெரியாசுப்பால்

ஆக வகைக்குப் பலம் 5 சேர்த்து, அம்மியிலிட்டு, நேர்த்தியாய் அரைத்து, முந்தின சூரணம் ஒரு படி போட்டு நன்றாக அரைத்துச் சேர்மானமானால் விவரம் ஆக எல்லாம் கல்லுரலிலிட்டுத் துவளக் கடப்பாரை கொண்டிடித்துத், தண்ணீர்விட் டரைத்துப் பிசைந்து சேர்மான மானால் விவரம் :

நல்ல வெள்ளைத் துப்பட்டி சுத்தமான இடத்தில் விரித்து, வில்லைக்கிண்ணி எடுத்துக்கொண்டு, சந்தன வில்லை நாலாயிரம், ஐயாயிரம் வைக்கவும். நன்றாக உலர்த்திக் கொண்டு, வில்லைக் கெல்லாம் மெருகுவைத்துக் கொள்ளவும்.

இந்த வில்லைச் சந்தனம், இந்தக் கதம்பங்கள், இந்த வாடைக் கூட்டுகைகயில், இவைகள் ராசாக்களுக்கு ஆன வஸ்து!

தேவதார வாடைக் கூட்டு வகை அறியும்படி விவரம், நூறு வில்லை விலை ஐந்து பொன் விற்கவும்.

## 34. நவரத்தினத்தில் வெள்ளை மணி வைப்பு

ஒரு செம்புத்தமுகை அடுப்பில் வைத்து, விளக்குப்போல ஆவாரவிறகு கொண்டு எரித்துக்கொண்டு. முந்தி அடுப்பில் வைத்த தாம்பூரத் தட்டில், நெய்விட்டது காய்ந்தால், அதில் ஆலத்திக் கற்பூரம், அதில் அரக்கு உருட்டி மணியாகத் திரட்டி உருட்டி ஒழுக்கமாகப் பண்ணி, நன்றாக மோகன மாலைக் குண்டுபோல ஆனால் எடுத்து வைத்துக்கொண்டு விரைம்:

இப்படி வெள்ளை மணி ஐந்து பிடிக்கவும்; ஐந்து மணியும் ஆனபின்பு நன்றாக நாய்ப்பல்லில் நன்றாக விளக்கி, மெருகு இட்டுப் பார்த்தால், நல்லமுத்துப் போல ஒளிவிடும்!

பிறகு வாரமிட்டு எடுத்து, சிவப்புப் பட்டுக் கயிற்றில் கோர்வை யிட்டு வைத்துக்கொண்டு விவரம் அறியவும்!

(தாம்பூரம்-தாமிரம்)

## 35. குங்கும மணி வைப்பு

இரண்டு வராகனிடை பத்திரதானகங் கல்லிலிட்டு, வெகு நேர்த்தியாகப் பொடி பண்ணி, அதில் ரஸ்தாலி வாழைப்பழம் ஒன்று பெரிதாகப் போட்டு, நன்றாக அரைக்கவும்.

அரிதாரம் நாற்றம் போம்!
பால் மணக்கும்!

இதிலிடும் சரக்கு விவரம்:

பச்சைக் கற்பூரம் கழஞ்சி!
ஆனைமணி நாகணம் கழஞ்சி!
நல்லமலாக்காய்ச் சந்தனம் கழஞ்சி!

ஆகச் சேர்த்து அரைத்து, உலர்த்தி வைத்துக் கொண்டு, பொடி பண்ணி வைத்துக் கொண்டு விவரம்:

முந்தின செம்புத்தட்டு அடுப்பில் வைத்துப் பசுவின் நெய் கொஞ்சம் தட்டில் விட்டு, அரிதாரப்பொடி, புளியங்கொட்டை மருவாதிவிட்டு, நன்றாக நெய்யில் காய்ந்தால், நெல்லிக்காய் மருவாதி ஐந்து மணிகட்டி ஆலத்திக்கற்பூரம் மணி பண்ணின பிரகாரம் இந்த மணியும் ஐந்து மணியும் உருட்டுவது.

மணி குங்கும வர்ணமாயிருக்கும்!

இது, நன்றாக மோகனமாலைக் குண்டுபோலத் திரண்டால் எடுத்து மெருகிட்டால், துவாரமிட்டுப் பார்ந்தால், குங்கும மாணிக்கம்போல ஒளிவிடும்! பட்டுக் கயிற்றில் கோர்க்கவும்.

தேவி சகாயம்.

## 36. மரகதப்பச்சை வர்ணம் வைப்பு விவரம்

வங்காளப் பச்சை நல்லசாதி மரகதமாய்ப் பார்த்து விராகன் 2, கலுவத்திலிட்டு, நன்றாய், நேர்த்தியாய் அரைத்து வைத்துக் கொண்டு, மேல்சரக்கு விவரம் :

நல்ல பச்சைக் கற்பூரம் விராகனிடை !

ஆணைமணி நாகணம் விராகனிடை !

நல்லமலாக்காய்ச் சந்தனம் விராகனிடை!

ஆகச் சேர்த்து அரைத்துப் பொடிபண்ணி வைத்துக் கொண்டு, செம்புத்தட்டு அடுப்பிலிட்டுப் பசுவின் நெய்க்கரண்டி தட்டில் விட்டுக் கொதிக்கும் போது, பச்சைத்தூள் புளியங்கொட்டையளவு போட்டுக், கரண்டியால் துழாவிச் சுட வைத்துக் கொண்டு விவரம்:

நெல்லிக்காய் மருவாதி ஐந்து மணிகட்டி, முன் குங்கும மணி தீர்ந்த பிரகாரம், ஆலத்திக் கற்பூரக்கட்டி நெய்யில் அழுத்தி, உருட்டி நன்றாக ஒரு சுத்த மணி பண்ணி வைத்துக்கொண்டு, இப்படி ஐந்து மணியும் பிடித்துத் துவாரமிட்டு, மெருகிட்டுப் பார்த்தால், நல்ல மரகத மாணிக்கம் போலே ஒளிவிடும் !

இதையும் பட்டுக் கயிற்றில் கோர்வையிட்டுக் கொள்ளவும்.

(தீர்ந்த பிரகாரம் - செய்து முடித்தபடி

## 37. சிவப்புக் கெம்பு மாணிக்க வைப்பு

நல்ல சாதிலிங்கம் விராகனெடை 2, முலைப்பாலில் எலுமிச்சம் பழச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து, எடுத்துக் கலுவத்தி விட்டு நன்றாக வாழைப்பழம் போட்டு, நன்றாய் அரைத்துக் காய்ந்து சூர்ணமானால், எடுத்து வைத்துக் கொண்டு விவரம்;

செம்புத் தகட்டு அடுப்பின்மேல் வைத்து, விளக்குப்போல் எரித்துத் தட்டில் பசுவின் நெய் கரண்டிவிட்டுச் சாதிலிங்கப் பொடி, பச்சைக்கற்பூரம், கரைப்பூப் பொடி போட்டுக் கரண்டியில் துழாவ, நெய் சிவந்தால், ஆலத்திக் கற்பூரம் நெல்லிக்காய் மருவாதி எடுத்து, ஐந்து கட்டி இதில் ஒரு கட்டி எடுத்து, நெய்யில் அமுத்தி மணிதிரட்டு, உளுக்கமானால், நல்ல மோகனமாலைக் குன்றுபோல ஆனால், எடுத்துத் துவாரமிட்டு, மெருகிட்டுப் பார்த்தால், நல்ல சிவப்புக்கல் மாணிக்கம் போல ஒளி உள்ளதாயிருக்கும்!

நீராட்டங்காணும்!

இதை எடுத்துப் பட்டுக் கயிற்றில் கோர்வை இட்டு வைத்துக் கொள்ளவும்.

இது அறியவும்.

தேவி சகாயம்.

## 38. நீலமாணிக்கம் பண்ணும்படி

நல்ல அவுரி சாதி நீலம் விராகனெடை 2 கல்லிலிட்டுப் பொடிபண்ணி பச்சைக் கற்பூரம் விராகனெடை 1, சோம்பு விராகனெடை 2, ஆனைமணி நாகணம் விராகனெடை 1 ஆகப் பொடிபண்ணி வைத்துக் கொண்டு விவரம்:

செப்புத் தகட்டு அடுப்பிலிட்டு, ஒரு கரண்டி பசுவின் நெய் தட்டில்விட்டுக் கொதிக்கும்போது, நீலப்பொடி புளியங்கொட்டை மருவாதி போட்டுக் கரண்டியால் துழாவிச் சிவந்தால், ஐந்துகட்டி ஆலத்திக் கற்பூரம், நெல்லிக்காய் மருவாதி எடுத்துக் கொண்டு விவரம்:

இதில் ஒரு கட்டி எடுத்துக்கொண்டு, நெய்யில் அழுத்தி, உருட்டித் திரட்டி உளுக்கமாக மோகனமாலைக் குண்டுபோல் ஆனால், துவாரமிட்டு நன்றாய் மெருகிட்டுப் பார்த்தால், நல்ல நீலமாணிக்கம் போலிருக்கும்!

நல்ல வாசனையா யிருக்கும்!

இது எடுத்துப்பட்டுக் கயிற்றில் கோர்வை இட்டு வைத்துக் கொள்ளவும்.

## 39. கோமேதக மாணிக்க வைப்பு

நல்லசாதி கோரோசனை விராகனெடை 2 கொண்டு வந்து, கல்லிட்டுச் சுத்தி பண்ணின சாதிலிங்கம் வராகனெடை ¼ பச்சைக் கற்பூரம் வராகனெடை 1, சிவப்பு உரம் வராகனெடை 1 பொடி பண்ணி வைத்துக்கொண்டு விவரம் :

செம்புத்தகட்டை அடுப்பில் வைத்துச், சிறுக எரித்துக் காயும் போது, கோரோசனைத் தூள், புளியங்கொட்டைப் பிரமாணம் போட்டுக், கரண்டியில் தேய்க்க, நன்றாகக் கரைந்தால், ஐந்து கட்டி ஆலத்திக் கற்பூரம் நெல்லிக்காய் போல வெட்டி எடுத்துக் கொண்டு, அதில் ஒரு கட்டி எடுத்து, நெய்யில் அழுத்தி உருட்டி, மோகனமாலைக் குண்டு போல உண்டுபண்ணித் துவாரமிட்டு, நல்ல மெருகு இட்டு எடுத்துப் பட்டுக் கயிற்றில் கோர்வையிட்டு, ஐந்து மணியும் வைக்கவும்.

இந்த மணி கோமேதகமணி வடிவாயிருக்கும்! அறியவும்.

## 40. சுத்தக் கறுப்புமாணிக்க மணி வைப்பு

நல்ல சாதி அவுரிநீலம் வராகனெடை 1, கிளுவைக் கரி வராகனெடை, ஆக அரைக்கவும்.

பிறகு, பச்சைக் கற்பூரம் வராகனெடை 1, ஆனைமணி நாகணம் வராகனெடை 1 ஆக அரைத்து, நேர்த்தியாய்ப் பொடி யானால் எடுத்து வைத்துக்கொண்டு விவரம் :

செப்புத் தகட்டை அடுப்பில் வைத்துச் சிறுக எரித்துத், தட்டில் ஒரு கரண்டிப் பசுவின் நெய் விட்டுக் கொதிக்கும் போது இந்தக் கரித்தூள் புளியங்கொட்டை மருவாதி போட்டுக், கரண்டியில் தேய்த்துப் பார்க்க நெய் கறுக்கும். அதன் நெல்லிக் காய் மருவாதி ஐந்துகட்டி எடுத்துக் கொண்டு இதில் ஒரு கட்டி எடுத்து, நெய்யில் தோய்த்து அமுத்தி மணிதீத்து, மோகன மாலைக் குண்டு போல் நன்றாக வருத்தம் பிடித்துத் துவாரமிட்டு மெருகு நேர்த்தியாக இட்டுப் பார்க்கும் போது, மணி கறுத்துத் தெளிந்து நீலமாணிக்கம் போல யிருக்கும்!

பட்டுக்கயிற்றில் ஐந்து மணியும் கோர்வை இடவும்.

(மணிதீத்து - மணிதீர்ந்து - மணி போல உருட்டி)

## 41. வைடூர்ய மணி வைப்பு

| | |
|---|---|
| துருத்தங்கல் வராகன் எடை | 1 |
| சுத்திபண்ணின அரிதாரம் பல எடை | 2 |
| சுத்த ஜாதிலிங்கம் வராகனெடை | ½ |
| சங்குப்பொடி வராகனெடை | ½ |
| பச்சைக் கற்பூரம் வராகனெடை | 1 |
| உரம் வராகனெடை | ¼ |

ஆகப் பொடித்துக் கொண்டு விவரம் :

தாம்பிரத் தகட்டை அடுப்பிலிட்டு. ஒரு கரண்டி பசுவின் நெய் அதில்விட்டு, அந்தப்பொடி வராகனெடை போட்டுக் கொதிக்க வைத்துக் கரண்டி போட்டுத் தேய்த்து, நெய் சிவந்தால் ஆலத்திக் கற்பூரம், நெல்லிக்காய் போல ஐந்துகட்டி எடுத்துக் கொண்டு, இதில் ஒரு கட்டி எடுத்துக்கொண்டு, காய்ந்த தட்டில் நெய்யில் புரட்டி, அமுத்த மணியாம்!

சந்து பொருது இல்லாமல் மோகனமாலைக் குண்டு போலத் திரட்டி எடுத்துத் துவாரமிட்டு, நன்றாக மெருகிட்டுப் பார்க்க நல்ல வைடூரியம் போல, ரத்தினம்போல, இருக்கும்!

இப்படி ஐந்து மணியும் பட்டுக் கயிற்றில் கோர்வையிட்டுக் கொள்ளவும்.

## 42. பற்பராக மணிவைப்பு

| | |
|---|---|
| வெங்கக்கல் சுத்த பளிங்குக்கல் வராகனெடை | 1 |
| துருசுக்கல் வராகனெடை | 1 |
| சங்கு நீறு வராகனெடை | 1 |
| சீனிக்காரம் வராகனெடை | 1 |
| பச்சைக் கற்பூரம் வராகனெடை | 1 |
| உரம் வராகனெடை | 1/4 |

ஆகக் கூட்டி அரைத்து, நன்றாகப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு விவரம்:-

தாம்பரத் தட்டை அடுப்பில் வைத்து, ஆலாரம் விறகு கொண்டு மெள்ள எரித்து, தட்டில் ஒரு கரண்டி பசுவின் நெய் விட்டு, அரைத்த பொடி கழஞ்சு போட்டுக், கரண்டியால் தேய்த்து, நன்றாக உருகும்போது, ஆலத்திக் கற்பூரம் நெல்லிக்காய் போலே ஐந்துகட்டி எடுத்துக்கொண்டு, இதில் ஒரு கட்டி எடுத்துத் தட்டி விட்டு அழுத்தி உருட்டி, மோகனமாலைக் குண்டுபோலத் திரட்டித் துவார்மிட்டு, நன்றாக மெருகிட்டுப் பார்க்க மாணிக்கம் போல ஆகும்!

இது கோர்வையிட்டு வைக்கவும்.

## 43. பவழரெத்தின வைப்பு

| | |
|---|---|
| நல்ல சுத்தி பண்ணின சாதிலிங்கம் வராகனெடை | 3 1/3 |
| சங்கு நீறு வராகனெடை | 2 |
| பச்சைக்கற்பூரம் வராகனெடை | 1 1/4 |
| சாதிக்காய் | |
| சாதிப்பத்திரி | |
| கிராம்பு | |
| ஏலம் | |
| இது வகைக்குப் பண எடை | 1 |

ஆகக் கூட்டி, எருமைச் சிம்பாலில் அரைத்து, உலர்த்திப் பொடி பண்ணி வைத்துக்கொண்டு, தாம்பிரத் தகட்டை அடுப்பிலிட்டு ஒரு கரண்டி நெய் விட்டு வைத்துக்கொண்டு, அரைத்த சாதிலிங்கத் தூள்கள் ஐந்து போட்டுக், கரண்டியால் தேய்த்து நெய் சிவந்தால், ஆலத்திக்கற்பூரம் ஐந்து கட்டி நெல்லிக்காய் அளவில் எடுத்துக் கொண்டு, இதில் ஒரு கட்டி எடுத்துக்கொண்டு, நெய்யில் தேய்க்க, நல்ல சாம்பிராணி உருட்டுப்போல் உருட்டித் திரட்டி மணியாக்கித் துவாரமிட்டு வைத்து, நன்றாய் மெருகிட்டுப் பார்க்க, நல்ல பவழம் போல மணியாயிருக்கும். அறியும்படி கோர்வையிட்டுப் பட்டு நூலில் கோர்த்து வைக்கவும்.

## 44. வச்சிரமணி வைப்பு

விவரம்

| | |
|---|---|
| குருந்தன் கல் வராகனெடை | 2 |
| பளிங்குக் கல் வராகனெடை | 2 |
| சீனிக்காரம் வராகனெடை | 2 |
| விளாம்பிசின் வராகனெடை | ½ |
| பச்சைக் கற்பூரம் வராகனெடை | 1 |
| ஏலரிசி | |
| சாதிக்காய் | |
| நாகணம் | |
| வகைக்குக் கழஞ்சு | 1 |

ஆகக் கூட்டிப் பொடி பண்ணி வைத்துக் கொண்டு தாம்பரத் தட்டு அடுப்பில் வைத்து எரித்துத் தட்டில் ஒரு கரண்டி நெய் விட்டுப் பண்ணின சூரணம் கழஞ்சு இட்டுக், கரண்டியால் தேய்த்து, நெய் சிவந்தால், ஆலத்திக் கற்பூரம் ஐந்து கட்டி நெல்லிக் காயளவு எடுத்துக் கொண்டு, இதில் ஒரு கட்டி எடுத்துக் கொண்டு, நெய்யில் தோய்க்க நல்ல சாம்பிராணி உருட்டுப் போலுருட்டித் திரட்டி மணியாக்கித் துவாரமிட்டு வைத்து, நன்றாக மெருகிட்டுப் பார்க்க, நல்ல வச்சிரமணி போல, மணி யாயிருக்கும்!

பட்டு நூலில் கோர்வையிட்டு வைக்கவும்.

தேவி சகாயம்.

## 45. இராஜாக்களுக்குப் போசனம் பண்ணும்படி சமையல் செய்ய

| | |
|---|---|
| நல்ல மலக்காய்ச் சந்தனம் | பலம் ½ |
| நல்ல அகில்வைரம் அறைத்த சந்தனம் | பலம் ¼ |
| புஷ்ப தேவதாரச் சந்தனம் பலம் | ½ |
| பூலாங்கிழங்கு | |
| விளாமிச்சைவேர் | |
| வெட்டிவேர் | |
| சமுத்திரப்பச்சை | |
| கோரோசினைக் கிழங்கு | |
| சாதிக்காய் | |
| சாதிப்பத்திரி | |
| கிராம்பு | |
| ஏலரிசி | |

ஆக நெய்விட்டுப் பொரித்துச் சூரணம் பண்ணி வைத்துக்கொண்டு, நல்ல சுத்தமான குடத்தில், நல்ல சுத்த ஜலம் எடுத்து வந்து வைத்துக்கொண்டு, முன் பண்ணின சூரணம் ஐந்து விராகனெடை எடுத்து, இந்தக் குடத்தில் சுத்த ஜலத்தில் போட்டுக் கலக்கித் தெளிந்தால், அந்தச் சுத்த ஜலம் ஒரு பானையில் ஒரு படி ஜலம் விட்டு, உலைக்கட்டி வைத்துக்கொண்டு, நல்ல ஊசிச் சம்பா அரிசியை முத்தீட்டலும் தீட்டி எடுத்து நன்றாகப் புடைத்துப் போட்டு வைத்துக்கொண்டு, நல்ல கோணிப்பட்டாய்க் கொண்டு வந்து பரப்பிவிட்டு, அதின்மேல் அந்த அரிசியைப் பரப்பிக் கோணிப்பட்டுக் கொண்டு வந்து தேய்த்து முனை பிரியாத அரிசி பொறுக்கி, மூன்று தரம் கழுநீர் களைந்து, மூன்று நீர் கழுநீர் இறுத்துத் தெளிநீர் வாங்கி வைத்துக்கொண்டு, கழுவின அரிசியை உலையிலிட்டுச், சோறு குழையாமல் பொங்கி யிறக்கவும்.

குருவே துணை.

இதற்குக் கறிவகை விவரம்

முந்தின சம்பா நீர்க்குடத்தில், வாடை கட்டினநீர் ஒரு படி; நல்ல சுத்தச்சட்டியில் ஒருபடி சம்பாநீர் விட்டு, அடுப்பில் வைத்து எரித்து, உலை காய்ந்தால் நல்ல துவரம் பருப்பு முத்திட்டலும் திட்டிச் சம்பா வாடைநீர் விட்டு, இது நேர்த்தியாக வெந்து இறக்கவும்.

பருப்புநீர் ஒண்ணரைப்படி இறுத்து, மேல்சரக்கு விவரம் :

| | | |
|---|---|---|
| மிளகு காசு எடை | | $1\frac{1}{2}$ |
| கடுகு காசு எடை | | 2 |
| வெந்தயம் | பண எடை | 4 |
| சீரகம் | பண எடை | 2 |
| கருவேப்பிலை | வராகனெடை | $\frac{1}{2}$ |
| வெள் வெங்காயம் | காசு எடை | 1 |
| மஞ்சள் | காசு எடை | 1 |
| சோம்பு | காசு எடை | $\frac{1}{2}$ |
| ஏலம் | பண எடை | 3 |
| புளி காசு | எடை | 10 |

ஆகச் சம்பா நீர் விட்டு அரைத்து, மிளகு நீர் கூட்டி, அடுப்பில் வைத்துப் பதமாகக் காய்ச்சி, இறக்கி வைத்துக் கொண்டு,

இனிமேல் தாளிக்க விவரம் :

சட்டியை அடுப்பில் வைத்துச் சட்டி காயும்போது, ஈர வெங்காயம் காசு எடை 3 அறிந்து சட்டியில் போட்டு வறுக்கவும்.

சிவந்து வரும்போது, பசுவின் நெய் ஒரு கரண்டி விட்டு, வேகவிட்டு ஈர வெங்காயம் சிவந்தால்,

| | | |
|---|---|---|
| கடுகு | காசு எடை | 1 |
| வெந்தயம் | பண எடை | 4 |
| சீரகம் | பண எடை | 2 |
| கருவேப்பிலை | பண எடை | 5 |
| உளுந்துப் பொடி | காசு எடை | 1 |
| ஏலம் | பண எடை | 2 |
| தாளிசப் பத்திரி | பண எடை | 2 |

ஆக இவை வறுத்து நெய்யில் போட்டு வறுக்கச், சீரகம் கடுகு பொரிகின்ற பதத்தில் அகப்பையில் நீர் தொட்டுத் தாளிக்க, மிளகு நீர் விட்டு மூடி இறக்கினால் சம்பார மிளகு நீராகும்!

இது எடுத்து வைத்துக்கொண்டு விவரம்:

## சம்பாரக் கூட்டுக்கறி வைப்பு

சம்பாரத் தண்ணீரில், முன் அரிசி களைந்த கழுநீர் படி 1, நல்ல சட்டியில் கத்தரிக்காய் துனுக்குத் துணுக்காய் நறுக்கித் தண்ணீரில் போட்டுக் கழுவி, உலை நீரில் வாங்கிப் போட்டு, சம்பாரக்கள் நீரில் போட்டு வைத்துக்கொண்டு, இதற்கு மேல் சரக்கு விவரம் :

| | | |
|---|---|---|
| மிளகு | காசு எடை | 2 |
| மஞ்சள் | காசு எடை | 2 |
| கடுகு | காசு எடை | $2\frac{1}{2}$ |
| சீரகம் | பலம் | 4 |
| வெந்தயம் | பண எடை | 6 |
| கருவேப்பிலை | காசு எடை | 1 |
| சோம்பு | வராகனெடை | $\frac{1}{2}$ |
| தாளிசப்பத்திரி | வராகனெடை | $\frac{1}{2}$ |
| ஏலம் | வராகனெடை | $\frac{1}{4}$ |

ஆகக் கரண்டியிலிட்டு, இரண்டு கரண்டி பசுவின் நெய் விட்டு, ஈரவெங்காயம் வராகனெடை 3 அரிந்து போட்டு, அடுப்பில் ஏற்றி, மிளகு வெடிக்க வேகவிட்டு வைத்துக்கொண்டு,

முன் சொல்லப்பட்ட மஞ்சளும், மறுபடி இரண்டு காசு எடை ஈரவெங்காயமும் முன் அம்மியிலிட்டு அரைத்து, முன் வேக வைத்துள்ள மிளகு, அம்மியில் கொட்டிச், சம்பாரக் கழுநீர் தெளித்து, நன்றாக அரைத்து வழித்துக் கொண்டு விவரம் :

நல்ல சம்பாவரிசி ஒரு கரண்டி ஊறப்போட்டுக் கல்லிலிட்டு நன்றாய் அரைத்து, ஏகத்திற்குச் சம்பாரக் கழுநீர் விட்டுக் கரைத்துக், கத்தரிக்காய் கூடப்போட்டு, நன்றாகக் கொதிப்பித்து வெந்த சட்டியில் கொட்டிக்கொண்டு,

அந்தச் சட்டியை அடுப்பில் வைத்துச் சட்டி காயும்போது இரண்டு கரண்டி பசுவின் நெய்விட்டு, மூன்று காசு எடை ஈர வெங்காயம் பொடிப்பொடியா யரிந்து, சட்டி நெய்யில் போட்டு, சேரச் சேர நன்றாய்ச் சிவக்க வறுக்கும்போது,

எள்ளு, உளுந்து, பச்சைப்பயறு வகைக்குக் காசு எடை 1, சீரகம், வெந்தயம், கடுகு, கருவேப்பிலை, வகைக்குக் காசு எடை 1 தாளித்து அதில் போட்டு, அகப்பையில் சம்பாரக் கழுநீர் துவைத்துத் தேய்க்க, கலகலவென்று தேய்த்துச் சமைத்த கறியில் கொட்டி, அகப்பையால் கிளறிக் கிளறிக் கொடுத்து, மூடிக் கொதித்தால் இறக்கி வைத்துக் கொளளவும்.

இது கறி அறியவும்.

எந்தக் காயில் கூட்டுக்கறி செய்தாலு மிதுமேனிக்குக் கறி பண்ணவும்.

இதுவே விவரம். அறியும்படி செய்யவும்.

குருவே துணை உண்டாக வேண்டும்.

## கத்திரிக்காய் பண்ணும்படி விவரம்

நல்ல கத்திரிக்காய் இளசாகத் தருவித்து, நெருங்கீத்தாக மேல்தோல் வாங்கிச் சம்பாக் கழுநீரில் போட்டு, ஊறிக் கழுவி எடுத்துக்கொண்டு விவரம்:-

பூர்வ சம்பாசக் கழுநீர்க் குடத்து, வாசனைநீர் விட்டுச் சரி பார்த்து உப்புபோட்டு வேகவிட்டு நீர் எட்ட இறுத்து வடித்துக் கொண்டு, மேல்சரக்கு விவரம்:-

| | |
|---|---|
| மிளகு துட்டிடை | 1 |
| கடுகு துட்டிடை | 1 |
| சீரகம் துட்டிடை | $\frac{1}{4}$ |
| வெந்தயம் காசு எடை | $\frac{1}{2}$ |
| கருவேப்பிலை காசு எடை | $\frac{1}{2}$ |
| ஏலரிசி காசு எடை | $\frac{1}{2}$ |

நெல்லரிசிப் பொரிமா துட்டிடை 1
எள்ளுப் பொரி துட்டிடை 2
உளுந்துப் பொரி மா எடை 2

ஆகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு, முன் கத்திரிக்காயில் தூவி குலுக்கி வைத்துக்கொண்டு விவரம் :

சட்டி காயவைத்து, இரண்டு கரண்டி நெய்விட்டு, வேகையில் ஈரவெங்காயம் இரண்டு துட்டிடை சிறுக நறுக்கி, நெய்யில் போட்டுச் சுவறச் சுவற வறுக்கவும். நீர் வற்றினால், மேல்சரக்கு:

ஏலம்
கிராம்பு
சாதிக்காய்
சாதிப்பத்திரி
தாளிசப் பத்திரி இவை வகைக்கு வராகன் எடை 1
உளுந்து வராகன் எடை 1
எள்ளு வராகன் எடை 1
கடுகு வராகன் எடை 1

ஆகப் பொடித்து வேகுகின்ற சட்டியில் ஈர வெங்காயத்தில் போட்டுச் சம்பாநீர் தெளித்து, அகப்பையால் கலகலவென்று கத்திரிக்காயைக் கொட்டி, தாளித்துக் குலுக்கி, ஒரு ஆவி வேக விட்டு, மூடி யிறக்கிப் பதனமாக மூடிவைத்துக் கொண்டு, வைத்துக் கொள்ளவும்!

இது சாம்பார் பொறிக்கறி அறியவும்.

## சம்பரர் பச்சடி பண்ணும்படி

பாகல்காய் விரல் விரல் கனத்தில், வட்டம் வட்டமாய் அறிந்து சாம்பாரக் குடத்து நீரில் ஊறப்போட்டு, வைத்துக்கொண்டு

கடுகு துட்டிடை 3
மிளகு துட்டிடை 2
வெந்தயம் காசு எடை $\frac{1}{2}$
கிராம்பு காசு எடை $\frac{1}{4}$

| | |
|---|---|
| சாதிக்காய் காசு எடை | $\frac{1}{4}$ |
| சாதிப்பத்திரி காசு எடை | $\frac{1}{4}$ |
| தாளிசப்பத்திரி வராகன் எடை | $\frac{1}{4}$ |

ஆகச் சேர்த்துச், சரக்கெல்லாம் பச்சையாய்ப் புளித்த தயிரில் அரைத்துக்கொண்டு,

| | |
|---|---|
| மஞ்சள் காசு எடை | 2 |
| ஈரவெங்காயம் காசு எடை | 6 |

ஆக எல்லாம் சேர்த்து, அரைத்துக்கொண்டு விவரம் :

முன்னரிந்த பாகற்காய் சம்பார நீர்விட்டு, வேகவைத்து, நீரிறுத்துப் போட்டு, வேறு சட்டியில் முன்னிறுத்த சம்பாரங் காயில் போட்டுப் பிசறிக், காய் மறைய, நல்ல புளித்த தயிர் மிதக்கவிட்டு, நன்றாக, உடைந்து போகாமல் வேகவிட்டு இறக்கவும்.

இது பாரப்பச்சடி அறியும்படி. இப்படி எந்தக் காயிலும் பச்சடி பண்ண நன்று!

தேவி சகாயம். வடுகன் துணை.
தஷிணாமூர்த்தி பாதாரவிந்தமே கதி
வெங்கடாசலபதி துணை யுண்டாக வேண்டும்.
சம்பராயர் துணை.
(சம்பார நீர்-மணமூட்டப்பட்ட நீர்)
குரு முன்னிற்க.

## வைத்ய சாஸ்திரம்

## 46. அதிசாரக் குளிகை

சாதிக்காய்
இந்துப்பு
சுக்கு
நவச்சாரம்
சாதிலிங்கம்

திப்பிலி
முத்தக்காசு
பொன்னூமத்தை விரை
கிராம்பு

இதெல்லாம் சமன் கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் அரைத்து, மறுநாள் இஞ்சிசாற்றில் அரைத்து, மறுநாள் ஊமத்தஞ்சாற்றில் ஒரு சாமமரைத்துக், குன்றியளவு உருண்டை செய்து, நெல்லிப்பருப்புத்த மருடன் கலந்து, ஒரு உண்டை கொடுக்கவும். அதிசார சுரந் தீரும்!

சூலையினால் வந்த கிராணிக்குச் சர்க்கரையிலிடத் தீரும்.

இலுப்பை வேர்ப்பட்டை, சுக்கு, வெல்லம் இருநாழி நீரில் இட்டு, உழக்காகக் காய்ச்சி, ஒரு குளிகை கொடுக்கக் கிராணி தீரும்!

## 47. அக்கினிக் கூட்டு

கரையானரித்த மண்ணும், கரையானும், அரிதாரமும், அருகு வேரும், அரைத்துப் பொடி செய்து, அந்தப் பொடியை நினைத் தவள் மேலிட வசமாவாள்!

இந்தப் பொடியை வெள்ளாட்டுப் பாலிலரைத்து உள்ளங் காலில் தடவி நடக்க நீர்ப்படாமல் நடக்கலாம்!

இந்தப் பொடியும், செவ்வாலரணை வாலும் பொடி செய்து, சீலையில் ஊட்டி விளக்கேற்ற அந்த வெளிச்சங்கண்ட பேர்கள், ஆடுவார்கள்!

## 48. அசுவாதிச் சூரணம்

| | | |
|---|---|---|
| கிராம்பு | பலம் | $\frac{1}{4}$ |
| சிறுநாகப்பூ | பலம் | $\frac{1}{2}$ |
| ஏலம் | பலம் | 1 |
| மிளகு | பலம் | 2 |

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | 4 |
| சுக்கு | பலம் | 8 |
| அசுவகந்தாதி | பலம் | 16 |
| சீனிச்சர்க்கரை | பலம் | 5 |

இவையெல்லாம் பொடி பண்ணி, அந்தி சந்தி தின்றுவர,

ஷயம்
குன்மம்
அட்டபீலிகை
தீராப்ரமேகம்
வாயு
பாண்டு
சோகை
இருமல்
அங்கஷயம்
வறட்சி
கை கால் அனல் போலக் காந்தல்
மெய் வெளிறல்
கண் வெளிறல்

இவை தீரும்!

## பாட்டு

"வேதாமண் மண்டலங்கொண் டருந்துவீரால்

கையில்நெல்லிக் கனியெனவே அசுவகந் தாதிக்
. . . . . . கற்பமெனக் கருத லாமே!"

## 49. [வாதங்கள்]

வேறு

அண்டவாதம் ஆறுக்கும் பெருங்குணமும் மருந்து மறிதலுரை

1 ஏறுவாதம்
2 இறங்கு வாதம்

3 வீங்கும் வாதம்
4 வலி வாதம்
5 அந்திர முட்டி வாதம்
6 நரம்பு வாதம்

ஆக வாதம் ஆறு. இதில்,

## 1. ஏறுவாதக் குணம்

"விரை வீங்கும், குளிர்கண்டால் விடாது! நோவெடுக்கும்; கண், புகை சூழ்ந்திருக்கும். கால் நரம்பிழுத்துக் கொள்ளும்; மூச்சுப் போகவொட்டாது."

## 2. இறங்குவாதத்தின் குணம்

"திரண்டு, விதை வீங்கும்! கனத்துக் கொள்ளும்; நிமிர வொட்டாது! வயிற்றை ஒரு புறத்தில் இழுத்துக் கொள்ளும். குளிர் காய்ச்சலாகும். அசனம் பண்ணப் போகாது. எந்நேரமும் மேலேப்ப முண்டாம்: காற்றுப் பிரியும்; மலந் தீயும்"

## 3. வீங்குவாதக் குணம்

"அண்டம் இளநீர் போல் வீங்கும்! நடக்கவொட்டாது! காலிரண்டின் நரம்பு இழுத்துக்கொள்ளும்! அனல் கண்டால் எரி வெடுக்கும்; கசப்புத் தின்றால் அமரும்! மிளகு பொருந்தாது."

## 4. வலிவாதக் குணம்

"மயிர் பற்றுத்துவக்கம்; புண்ணாகியிருக்கும்! வயிற்று இரைச்சல் அதிகப்படும் மார் உளையும்! விதையும் வீங்கும்."

## 5. அந்திரமுட்டி வாதக்குணம்

"அடி வயிற்றில் பலாவிரை போலக்கிடக்கும்! கைகொண்ட முக்கினால், கீழே விழும்! வாயால் கொதிப்புத் தள்ளும்; வயிறு வலிக்கும். வாயு மேல்நோக்கிக்கொள்ளும்."

## 6. நரம்புவாதக் குணம்

"வாயாலே எட்டுநாள், ஆறுநாள் எடுக்கும்! நாளுந் தலைவலியெடுக்கும்; விக்கலெடுக்கும். அண்டம் வீங்கும்! தினவு உண்டாகும். அமுக்கினால் வலியாது. கருணைக்கிழங்கு போலத் தடிக்கும்!"

## இந்த வாதம் ஆறுக்கும் அடக்க எண்ணை

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணை | நாழி 1 |
| வெள்ளுள்ளி | பலம் 20 |
| பெருங்காயம் | |
| கூகை நீறு | |
| புகையிலை | |
| உப்பு | |
| இந்துப்பு | |
| கல்லுப்பு | |
| கடுகு ரோகிணி | |
| சதகுப்பை | |
| தேவதாரம் | |
| ஆயிலியப் பட்டை | |
| கருஞ்சீரகம் | |
| நற்சீரகம் | |
| சிறுபுள்ளடி | |
| கொள்ளு | |
| சிறுதேக்கு | |
| சித்திரமூலம் | |

திப்பிலி
திரிகடுகம்
சங்கங்குப்பி வேர்
வட்டக் கிலுகிலுப்பை வேர்
இசங்க வேர்
கழற்சி வேர்
உய்யா வேர்
முடக்கொற்றான் வேர்

இவை வகைக்குப் பலம் 1.3

இந்த மருந்தெல்லாம் வெள்ளாட்டின் பால் வார்த்தறைத்து, எண்ணையில் கலக்கிக், காய்ச்சி, நாலு காசு எடை கொள்ள இந்த அண்டவாத மாறும்!

கண்காணாது ஓடும்!

ஒரு மண்டலம் சாப்பிட்டு வரவும்.

கை கண்டது!

இச்சா பத்தியம்.

### அஞ்சனம்

பழந்தின்னி வௌவாலைக் கொண்டுவந்து, அதன் கண்ணில் இரண்டு அட்டை கடிக்கவிட்டு, ரத்தங் குடித்து விழுந்தால், எடுத்துக் குசவன் சூளையில் கவிழ்ந்து கிடக்கிற ஓட்டை எடுத்து. அந்த ஓட்டில் ரத்தத்தைப் பிச்சிச், செம்பருத்தித் திரியிட்டுச், சித்தாமணக்கெண்ணையில் விளக்கேற்றி, மையெடுத்துச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு, வேண்டுமென்ற நேரம், இரண்டு பண எடை எடுத்துச் சித்தாமணக்கெண்ணையில் குழைத்துக், கண்ணிமையிலு மிட்டுக், கையிலுமிடவும் நன்று அஞ்சனம்.

காகத்தின் வாயில், காராம்பசுவின் பால் புகட்டி, அதின் கண்ணும், தாமரை மொட்டு ஈரலும், பித்தும் சேர்த்து, செவ்வகத்திச் சாறு விட்டரைத்துச் சீலையில் ஊட்டி, உலரவிட்டுப் பசுவின்

நெய்யில் விளக்கேற்றி, குசவனோட்டில் மை பத்த வைத்து, எடுத்துப் பசுவின் நெய்யில் குழைத்து, வெற்றிலையில் தடவிப் பார்க்க நன்று.

### அண்டவாதத்திற்கு

| | | |
|---|---|---|
| வெள்ளெருக்கின் கிழங்கு | பலம் | 2 |
| கழற்சிக்காய்ப் பருப்பு | பலம் | 2 |
| அதன் கொழுந்து | பலம் | 2 |
| அதன் பட்டை | பலம் | 2 |
| கருப்புக்கட்டி | பலம் | 10 |

இதெல்லாம் அரைத்து, உண்டை பண்ணி, நெல்லிக்காயளவு மூன்றுநாள் அந்தி சந்தி தின்று வரவும்.

பத்தியம் :

அகங்காய்ந்து, துப்புகின்றதற்கஞ்சி, அரிசியும் பசுவின் பாலும் கூட்டி, முத்தக்காசு, சீரகம், கொத்தமல்லி, உலுவாய் சர்க்கரை - இவை சமன்கூட்டிக் கிளிகட்டிக், கஞ்சியிலிட்டுக் காலமே, மூன்று நாள் குடிக்கவும்.

### அடக்கம் எழுப்ப

நேர்வாளம்
மிளகு
இரதம்
மகிழம் வித்து
பேய்ப்பீர்க்கு வித்து
தேவதாரி

இதெல்லாம் சரியாக்கி ஒக்க இட்டு, எலுமிச்சம்புளியில் ஏழுநாள் ஊறப்போட்டு, அரைத்து, உண்டை பண்ணி வைத்துக்கொண்டு விஷந்தீண்டினாலும், உயிர் போனாலும், ஒரு உருண்டை

எருக்கிலைச் சாற்றில் அரைத்துக் கையாந் தகரைச் சாற்றில் காதலிடவும்.

செவியால் காலன் புறப்பட்டுப் போகும்!

போகாதிருந்தால், சிறுநீரிலுரைத்து, இரண்டு கண்ணிலும் இட்டுப், புடவையை நனைத்து, மூன்று நாழிகைக்கு மூடி வைக்கவும்.

எழுந்திருப்பான்

இது, கைகண்டது!

கீரி நாக்கு

மயில் நாக்கு

கருட நாக்கு

இது மூன்று மொன்றா யுலர்த்திக், கயிறு உருட்டிப் பழச்சாற்றில் உறைத்துக், கடைவாயில் மர்த்திக்க, விஷமிறங்கும்!

இது கைகண்டது!

## அண்டவாதத்திற்கு

நல்லவேளை வேரும், தூரும் பிடுங்கிக் காடி வார்த்துத், துவைத்துப் பொட்டணங்கட்டி ஒத்தலிடவும்.

### வேறு

கழற்சிக் கொடிக் கொழுந்து நாலு காசு எடை ஒரு நாளைக்குக் கொள்ளவும்.

### வேறு

கழற்சிவேர் துவைத்து, எண்ணெயில் கலந்து, சூரியப்புடம் வைத்து, இரண்டு காசளவு உள்ளுக்குக் கொள்ளவும்; நோவிலும் தடவவும்.

இப்படி மூன்று நாள் போடவும்.

பத்தியம் பிடிக்கவுமாறும்.

## 50. அரிதார பற்பம்

பேயம்பழங் கொண்டுவந்து, தோலி யுரித்து, அந்தப் பழத்திற்குள்ளே அரிதாரத்தைத் தகடாய்த் தட்டி, அதனுள் வைத்துத், தோலியாலே மூடி, மூன்றிழை நூல்கொண்டு சுத்தி, அதை நீலக்கத்திரிக்காய் உள்வைத்து, மறுபடி த்டியன் பூசனிக்காயுள் வைத்து, ஏழு சீலைமண் செய்து, அரையாள் புடம்போட் டெடுக்கப் பற்பமாகும்!

மாட்டுவாரினைச் சுட்டுச் சாம்பலும் தேனும் கூட்டிப், பற்பம், அரிசி, எடை இவை மூன்றுங் கூட்டிக்கொண்டு கொடுக்கத் திரும் வியாதி, பெரும்வியாதி.

குறைநோய், குஷ்டம், வெளுப்புப், பலபல புண், கிரந்தி, பரங்கி, செலமும் திரும்!

பத்தியம் : அறுசோகை

### விருத்தம்

நிம்பதளிர் கையானோடு நிரைசுக்கு அயமோதம்
நிறைசீரக மதுரத்தோடு செவ்வரக்கி ஏலம்
கம்பக்கனி மதுகொட்டோடு கையானது கூட்டி
கருதும்படி சரியாயொரு பலமாத்திரை கொள்ள
வெம்பித்திடு வெயில்காயவை மிகுசூர ணம்தனை
விம்போதினி லுறுசீனியில் வேதுகாணப் படிகொள்ள
கும்பித்திடு முதிரத்தினில்குடி கொண்டிடும் பொருமல்
கொடிதாகிய அறுசோகையும் எழுவாயுவும் அறுமே!

## 51. அத்தி சுரத்திற்கு நெய்

நெய் நாழி

பசுவின்பால் இருநாழி

புதுப்பாண்டத்திலிட்டு, வெள்ளைக் குங்கிலியம் பலம் ¼ பொடி பண்ணிப் போட்டு வைக்கத் தயிராம்! மத்தால் கடையத் தயிரா

மிந்த நெய்யை, ஒரு சிறு நார்த்தங்காய் அளவு தின்னத் தீரும் வியாதி:-

காயாசு வாதம்
அத்திசுரம்
வறட்சை
உஷ்ண ரோகம்
மூலக்கடுப்பு
இருமல்

இவையெல்லாம் தீரும்!

## 52. அக்கினி குமாரன்

காந்தம்
வெட்பாலை யரிசி
அதிவிடையம்
பொன்னிமிளை
நீலம்
அரிதாரம்
சுர்க்கடக சிங்கி
சுக்கு
நற்சீரகம்
கடுகு ரோகிணி
கார்கோல அரிசி
சாதிக்காய்
கிராம்பு
இந்துப்பு
இரதம்
சவுக்காரம்

வகைக்குச் சமன் கூட்டி, செம்பொன் நெருஞ்சிச்சாறு வார்த்த ரைத்து, மூன்றுநாளரைத்து, கடலைப் பிரமாண முண்டை செய்து, நிழலிலுலத்தி, சன்னிக்கு, இஞ்சிச்சாற்றிலிடவும்.

கழிச்சலுக்குப், பசுவின் மோரிலிடவும்.

வயீறு எரிச்சலுக்குத், தாமரைக் கிழங்கின் சாற்றிலிடவும்.

வாயுவிற்குத், தேங்காய்த் தண்ணீரிலிடவும்; கோமயத்தி மிடலாம்.

கைகண்டது!

## 53. அமுக்கராக் கற்பம்

அமுக்கரா சமூலங் கொண்டுவந்து, நிழலி லுலர்த்திப் பொ செய்து, சர்க்கரை நெய்யுங் கூட்டித் தின்றால், பெண் கட்டுவிடு

ஆட்டாங்கொட்டை மூலை

சுக்கு

திரிபாலை

வகைக்குக் கழஞ்சு, 4 படி நீரில்போட்டுக் கால்படியாக இறக்கி இந்தப் பொடியையுங் கூட்டி, நாற்பத்தெட்டு நாள் கொள்ள பித்த, கபம்போம்!

பசுவின் மோரில் கொள்ளப், பித்தம்போம்!

வயிற்றில் புழுக்கள் சாகும்! தாகமுண்டாகும்.

சித்தாமணக் கெண்ணையிலாவது, இரண்டுமணி உப்பு கூட்டித் தின்றால், சரீரம் பருக்கும்!

தயிரில் தின்றால், பாண்டு தீரும்! பசுவின் வெண்ணையி தின்றால், வயிற்றில், புழுச்சாகும்! எள்ளும் மஞ்சளுங் கூட்டி தின்ன, நரைதிரை மாறும்!

கடுகெண்ணையில் தின்றால் நரைதிரை மாறும்! பலமுண்டாம் புத்தியுண்டாம்!

இந்த மருந்து எடுக்கின்ற காலம் : மார்கழி மாத மெடுக்கவும் உற்பன்னமாகும்.

## 54. அசன வில்வாதி எண்ணை

மிளகு
திப்பிலி
வசம்பு
ஒரு உள்ளிப் பூண்டு
வலம்புரிக் காய்
அரத்தை
சதகுப்பை
ஏலம்
இலவங்கம்
மதுரம்
செண்பகப்பூக் கிழங்கு
சீதளத் தயிலம்
தகரம்
வெள்ளிலோத்திரம்
அதிவிடையம்
இந்துப்பு
காலிக்கட்டி
மஞ்சாடி
கொத்தமல்லி
வெந்தயம்
முத்தக்காசு
கடுகுரோகிணி
பற்பாடகம்
கல்நார்
மதப்பிறப்பி
சீனிக்கற்கண்டு
பெருங்காயம்
கடல் நுரை

வகைக்குப் பலம் 2, இடித்து பொடிபண்ணி, நெய்யில் கலக்கி, கொதுப்பித்து, மெழுகுப்பதத்தில் வடித்து, இந்த நெய்யைக் குடித்து வரவும்! தலைமேல் துவலை போடவுமாகும்.

ஆகமுறத் தானே அசனவில் வாதிஎண்ணை
வாகடத்தில் கூறும் மருந்துகேள்! — ஆகமுறு
அசனம் அகிலம்வில்வம் அமுக்கிராசித் தாமுட்டி
வசன மிரதவல்லி வாகாய் - இசையவே

சீரக மிளகுதாளிச திரிபலை நன்னாரி
நீர விரவிக்காய்ச்சி அதில்வடித்து - பேரறியப்
பாலிளநீர் எண்ணைச் சமபாகங் கொண்டு
மேல்மருந்து விண்டுவிரை வாய்க்கேள் - கோலமுறு
வெப்பா லரிசி விளாலரிசி சித்தரத்தை
தப்பா சிறுதேக்கு சாதனமும் - ஒப்பாஞ்
சிறுமூலம் கோஷ்டம் திருநாகப்பூ மருவில்லா
விசுமஞ் சிட்டி இருவேலி அதிவிடையம் - வாசமும்
பச்சை மகரப்பூ ஓசையரி திப்பிலி
மூலம் தேவதாரம் நாவி சட்ட
மிளகு குங்குமம் வெந்தயம் - பூலா
மிச்சு சேர்ஒரு நிறையாக அரைத்துத்தேனில்
கலந்து பருவத்துடன் வடித்துத் - தீந்துவரும்
மண்டசூலை மகோதரம் நீர்த்தாச முரித்தே - காச
கண்டத் திருமல் வாய்நாற்றம் பித்தம் காதிரைச்சல்
துண்டத்தில் பீனசங்கள் கபாலசன்னி - புருவதாம்
கொண்டதோர் காச கருத்துளையு மீளையே
எண்ணியநோய் எல்லாம் ஓடுமே - திண்ணமெனச்
சொன்னார் ரிஷினாதன் முன்னாளுரையின்முறை நன்றாக!

(மூலச்சுவடி, இயன்ற அளவு சீர்பிரிக்கப்பட்டுளது)

வேறு

## 55. அக்கினி குமாரன் செந்தூரம்

இரும்புப் பொடி
உருக்குப் பொடி
பித்தளைப் பொடி
செம்புப் பொடி

வகைக்குப் பலம் 2,

| | | |
|---|---|---|
| வெள்ளிப் பொடி | பலம் | 2 |
| பொன் பொடி | பலம் | 1 |
| ரசம் | பலம் | 1 |
| சாதிலிங்கம் | பலம் | 1 |
| காந்தம் | பலம் | 1 |
| அரிதாரம் | பலம் | 1 |
| வெண்காரம் | பலம் | 1 |
| கந்தகம் | பலம் | 4 |
| பூநீறு | பலம் | 1 |

இந்த மருந்துகளைச் சேகரித்துக், கலுவத்திலிட்டுக் கத்தாழைச் சாறு, சாமம், ஆயிலியப் பட்டைச் சாறு, யாமம் 3 அரைத்து, நன்றாய் அரைத்து, ஒரு கவசத்திலிட்டு, மேலே ஒரு மூடி, கவச முகத்தில் ஏழு சீலை மண் செய்து, சிராப் புடத்திலும் உயர்ந்த புடம் போட்டெடுக்கச் சிவந்திருக்கும்!

சிவந்திருக்காவிட்டால், மறுபடி ஒரு புடம் போட்டெடுக்கவும்.

நாவி பலம் 1
கடுகுரோகிணி பலம் 1
திரிகடுகு

கூடக் கூட்டி, முலைப்பால் விட்டுச், செந்தூரமுங் கூடப்போட்டு அரைத்துப், பணம் போல உண்டை பிடித்து உலர்த்தித், தந்தச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

இதற்கு தீரும் வியாதி :

1. மாதுளம் பழத் தண்ணீரில் செந்தூரம் மூன்றுநாள் ஆறு பொழுது கொடுக்க மேகம் 20 தீரும்!

2. தேனில் பத்துநாள் கொள்ள க்ஷயம், இளைப்பு முதலுண்டான வியாதி தீரும்!

3. சுக்கு, திப்பிலி, மிளகு வறுத்துப் பொடி செய்து செந்தூரம் குன்றிடை கூட்டி, வெருகடி, அரைமண்டலந் தின்ன, வாதம் 80ம் குன்மம் எட்டுந் தீரும்!

4. பரங்கிப்பட்டை, பிரம்பன்கிழங்கு, கருஞ்சீரகம் பொடி செய்து, வெருகடித் தூளில் செந்தூரம் குன்றிடை கொடுக்கச் சூலை பதினெட்டும், குஷ்டம் பதினெட்டும், கிரந்திப்புண் முதலான வியாதி எல்லாம் தீரும்!

5. தூதுவளை பொடி செய்து, வெருகடித் தூளில் செந்தூரங் குன்றிடை கொள்ள அரைமண்டலந் தேனில் கொள்ள, சிலேஷ்மம் தொண்ணூற்றானுந் தீரும்!

6. சுக்குக் கிஷாயத்தில் செந்தூரங் குன்றிடை கொள்ளத், தொந்தவாயு வுண்டான தெல்லாம் தீரும்!

இன்னும், அனுப்பானம் அறிந்து செய்தால், அநேக வியாதிகளும் தீரும்!

குரு முன்னிற்கவும்.

## அஞ்சன உண்டைக் கவி

1. சுக்கு மிளகு திப்பிலிநற்
சோம ருப்பு வெள்ளுள்ளி
தக்க கொந்தளம் புபரு
சப்பு வசம்பு தன்னுடனே
ஒக்கத் தேசிப் பழச்சாற்றில்
ஒன்றாய் அரைத்து அஞ்சன உண்டை
மேக்கும் குதிரை வலிதீர
மீளத் தேசிச் சாற்றிலிடே!

## நச்யம்

2. பூலம் பழமும் புதியரைப்பும்
புதிய மிளகு இந்துப்பு
ஆயத் தடங்கும் அகத்திப்பால்
அதுவோ டொக்கப் பொடி செய்து
தாவு முலைப்பால் தனில்கலக்கி
தப்பா திரண்டு நாசியிட
பாவ கப்பால் வலிதானும்
பசாசு பறந்து போமென்றே!

3. வெங்கா யுள்ளி நேர்வாளம்
மிளகு சுக்கு திப்பிலியும்
உண்பாய் கடுகு பெருங்காயம்
நற்சீ ரகமும் வெந்தயமும்
மண்பால் விளைந்த கந்தகமும்
வசம்பு வெளுத்த பிசின்காரமும்
மண்போல் பொருசமோ கமுசுறு
முட்டையுட னேதானே கொள்ளும்!

## குதிரை வலிப்பிற்கு

4. கொள்ளே குதிரை வாலரி
குடுத்துநொச்சி வாடா தோடை
முள்ளே உழக்குக் கருவண்டு
முருங்கை மூலி தூதுவளை
வெள்ளே மிக்கச் காரணையும்
மீறாமல் சற்றே கொடிவேலி
உள்ளே எரித்து வேப்பெண்ணை
உதவங் குதிரை வலிபோமே!

5. துத்தாங் கொடுத்து மூன்றாம்நாள்
கொல்லா திருக்கின் ஏழாம்நாள்
தக்கநாளெட் டொன்ப தாம்நாள்
அருந்தே அடுத்து மருந்துசெய்ய
உத்தாக் காலிரு புரத்திலுள்
மூச்சுமுத லேதான் மேநோக்கில்
செத்தா ரிவரே திண்ணமே
தெளிந்தே உரைக்க லாமேதான்!

## 56. அண்டவாதத்திற்கு

சித்தாமணக்கெண்ணை உழக்கு, கழற்சிப் பருப்பு நாலு; இதில் நஞ்செடுத்துப் போட்டு, நாலு முட்டைக் கருவும் எண்ணையிலிட்டுக் கழற்சிப் பருப்பைப் பொடித்துப் போட்டுப் பதத்தி லிறக்கி, எண்ணையைத் தேய்த்து, வெந்நீர் வைத்து முழுகவும்.

காகர . . . த்தை ஒரு கொட்டைப் பாக்களவு ஐந்துநாள் தின்னவும் மாறும்.

## 57. அஞ்சனம்

செருப்படி

செங்கழுநீர்

ஊமத்தை

சமூலம்

பிடுங்கிச் சாறெடுத்து, அதில் தன் சிறுநீரும் விட்டுக் கலந்து, செங்கீரைச் சாறுவிட்டுப், புது ஓட்டில் தடவிச், சித்தாமணக் கெண்ணையிட்டு, விளக்கேற்றி, மைபத்தவைத்து, சித்தாமணக் கெண்ணையில் குழப்பிப் பார்க்கத் திட்டம்.

இந்த மையைத் திலதமிட நாவடக்கம்.

## 58. அசனமுண்ண

வெள்ளாடு அசைவெடுக்கிற பொழுது, உதப்பியை வாங்கிச் சிமிழில் வைத்து மூடி, இதழில் வைத்துக் கொண்டு அசனமுண்ண எதைத் தின்றாலும் வயிறு நிறையாது!

### வேறு

துளசி வேரும், மிளகும், வெற்றிலையில் வைத்துக்கொண்டு வேண்டிய சோறு தின்னலாம்!

### வேறு

## 59. அபினி தின்கின்றது மாற்ற

சாதிக்காய் வராகனெடை 5
சாதிப்பத்திரி வராகனெடை 5
ஊமத்தம் வராகனெடை 10
மொட்டி வேர் வராகனெடை 10

இவையெல்லாம் அரைத்துப், பாக்களவு குளிகை பண்ணி, நிழலிலுலர்த்தி. மருந்து கொடுக்கிறபோது ஆழாக்குத் தக்கது கண்டு, பசுவின் பாலில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும் நன்று.

## 60. அக்கினி மழுவெடுக்க

செங்கம் வேரு மிலையும்
துத்தி வேரு மிலையும்
அத்தி வேரு மிலையும்

அரைத்து, உண்டை பண்ணி, உண்டை ஒன்று விழுங்கிச் சற்று நேரம் சென்றதின் பிறகு, மழுவைக் காயப்போட்டு எடுக்க வேகாது!

## 61. அரக்கெண்ணைத் தைலம்

| | | |
|---|---|---|
| கொம்பரக்கு | பலம் | ½ |
| மலாக்காய்ச் சந்தனம் | பலம் | ½ |
| தேவதாரம் | பலம் | ½ |
| அகில் கட்டை | பலம் | ½ |
| மஞ்சட்டி | பலம் | ½ |
| வெட்டிவேர் | பலம் | ⅜ |
| விளாமிச்சம் வேர் | பலம் | ¼ |
| கடுகுரோகிணி | பலம் | ¼ |
| மரமஞ்சள் | பலம் | ¼ |
| சதகுப்பை | பலம் | ⅛ |
| செங்கழுநீர் | பலம் | ½ |
| கோஷ்டம் | பலம் | ½ |
| குங்குமம் | பலம் | ½ |
| கோரோசனை | பலம் | 1 |
| புனுகுச்சட்டம் | பலம் | 1 |
| சாதிப்பத்திரி | பலம் | ⅜ |
| சாதிக்காய் | பலம் | ¾ |
| கிராம்பு | பலம் | ½ |
| ஏலம் | பலம் | ¾ |
| அதிமதுரம் | பலம் | ⅜ |
| தேசப்பத்திரி | பலம் | ¼ |
| திப்பிலிமூலம் | பலம் | ¼ |
| மஞ்சள் | பலம் | ⅛ |
| அரேணுகம் | பலம் | ¼ |
| கருநாவித்தளிர் | பலம் | ⅛ |
| அமுக்குராக்கிழங்கு | பலம் | ¼ |
| பெருங்குரும்பை யென்றும் முலைமுறுக்கி யென்றும் பெயர் | பலம் | ¼ |
| மரக்கிழங்கு | பலம் | 21 |

| | | |
|---|---|---|
| வெருகங் கிழங்கு | பலம் | 21 |
| நன்னாரி வேர் | பலம் | 21 |

இந்த மருந்தை உரலில் வைத்துப் பசுவின் பால் படி 2, மோர் படி 2 விட்டுப் பிசைந்து, கடைச்சரக்கையும் பொடிபண்ணிப் போட்டு, எண்ணையும் விட்டு, வேகவைத்து, மெழுகுப் பதத்தில் இறக்கவும்.

மூன்று நாளைக் கொருக்கால் முழுகி வரவும். தீரும் வியாதி:-

1. வாயு
2. பொருமல்
3. இரைச்சல்
4. கால்கடுப்பு
5. இடுப்புப் பிடிப்பு
6. பீனசம்
7. வெட்டை

இவை சகலமும் தீரும்! கைப்பு, புளிப்பு விடவும்.

($\frac{3}{8}$-காலே அரைக்கால்)

## 62. அண்டவாதத்திற்கு

| | |
|---|---|
| விளக்கெண்ணை படி | $\frac{3}{4}$ |
| ஈரவெங்காயம் சிரங்கை | 1 |

புங்கங் கொழுந்து
கழற்சிக் கொழுந்து
வாதமடக்கிக் கொழுந்து
வரிக்கத்தாழை வேர்
சாரணை வேர்
முடக்கொற்றான் இலை
ஓமம்

இவையெல்லாம் சமன் இடித்து, எண்ணையில் வேகவைத்து, நல்ல பதத்திலிறக்கி, நாளொன்றுக்குக், கரண்டி வீதம் ஐந்து நாள் பத்தியம் காக்கவும்.

## 63. அம்புசாய்க்க

அமுக்குரா வேரும், கருஞ்சீரகமும் அரைத்துக் குளிசமாடித் தலையிலிருக்க, அம்புபடாது!

## 64. அரையாப்பிற்கு

பழம் புளி
கோழிமுட்டை
வெள்ளைக் கரு
கிரெவைப் பால்
எருமைப் பால்

இவையெல்லாம் அரைத்து, அரையாப்பைக் கசக்கிக் கொண்டு தெரிவெந்நீர் விட்டு, அதின் பிறகு, பத்துப்போடவும்!

புரைவிழுந்தால், புங்கம்பால் விடவும்.

## 65. அத்திச்சுரம், சோகை, பாண்டு, சகலத்திற்கும்

பசுவின் நெய் நாழி
ஆடாதோடைச் சாறு நாழி

இதற்கு மருந்து,

திப்பிலி
அத்தித்திப்பிலி
இந்துப்பு
சுக்கு
கொடிவேலிவேர்
சவுக்காரம்

வகைக்குப் பலம் ¼ நாலு யாமம் அரைத்து நெய்யில் கலக்கி, மெழுகுப் பதத்தில் வடித்துக் காலை வேளையில் சகல நோய் களுக்கும் இந்த நெய் கொள்ள, தீரும் வியாதி:-

விசுவாமித்திர சுவாமி வாக்கியம்

1. அசுவை
2. பாண்டு
3. மூலக்கிராணி
4. மந்தக்ஷயம்
5. நெஞ்சுக்கட்டு
6. கிறுகிறுப்பு
7. அத்திச்சுரம்

இவை யெல்லாம் தீரும்!

பத்தியம் காக்க வேண்டும்.

இது, சாயங்காலத்திற்குக்

குடிநீர்
திப்பிலி
திரிபாலை
கடுகுரோகிணி
வில்வவேர்
வேப்பம்பட்டை
முந்திரிகை
விளாமிச்சம் வேர்
இந்துப்பு

இவை வகைக்குப் பலம் $\frac{1}{2}$, இரண்டு படி தண்ணீர் விட்டு, நாலொன்றாய்க் காய்ச்சி, சாயு நேரம் உள்ளுக்குக் கொடுத்து வரவும்.

காலையில் நெய்யும், சாயங்காலம் குடிநீரும் கொடுக்கத் தீரும்; கை கண்டது.

## 66. அதிகாரத்திற்கு

கும்பளங்காய்ச் சாறு
விராலிக் கிழங்கு
பால்

நெய்
—வகைக்கு நாழி
திரிகடு
திரிலேகிரி
நெல்லிப் பருப்பு
அசமதாகம்
கச்சோலம்
மாயக்காய்
இந்துப்பு
வெள்ளுள்ளி
நற்சிரகம்
கருடப் பச்சை

இளநீரில் அரைத்து, மெழுகுப் பதத்தில் வடித்து, ஒரு காசளவு கொடுக்கத் திரும்!

## 67. அரோசிப்பிற்குக் காந்தபற்பம்

திரிகடுகு
பெருங்காயம்
இந்துப்பு
நற்சிரகம்
கருஞ்சிரகம்
வெள்ளுள்ளி
ஊசிக்காந்தம்
—வகைக்குப் பலம் 1

தனித்தனியே வறுத்துப், பொடி செய்து, கழிச்சலுக்குத் தூதுவிளங்காய் அளவு தேனில் கொள்ளவும்.

இரத்தம் விழுந்தால், ஐந்து நெல்லிக்காய்ப் பருப்பு எடுத்து, தண்ணீர் விட்டரைத்து பசுவின் மோரில் அவித்துத் தண்ணீர் போக்கி, காசு எடைப் பொடி போட்டுக் கொடுக்கவும், திரும்!

## 68. அதிசார வாயுவின் குணம்

குடல்பிரண் டிரைந்து நொந்து
குறுக்கினில் விலாவில் குத்தும்
உடல்செவி கெட்டு கைகால்
ஓய்ந்துமேற் பிடித்த கட்டும்
பிடித்தனம் பெருக வுண்டாம்
பருகுசோற் றாவல் நிற்கும்
அடிக்கடி வயிறும் போகும்
அதிசார வாயு வாமே!

## 69. அதிசார சுரத்திற்கு மருந்து கவி

ஆவின் பாலும் அன்புறு சீனியும்
மேவு சகத்திர பேதியும் - கூட்டியே
தாவி நாற்பது நாளது தானுண்ண
யாவு முளசுர மோடிப் பதுங்குமே!

சகத்திரபேதிப் பொடிபண்ணி, வெருகடி போட்டுக், குடிக்கவும்

## 70. அத்திச்சுரத்திற்கு லேகியம்

| | | |
|---|---|---|
| கோஷ்டம் | பலம் | 8 |
| நற்சீரகம் | பலம் | 4 |
| மதுரம் | பலம் | 4 |
| சந்தனம் | பலம் | 1 |

இவை சூரணம் செய்து

| | | |
|---|---|---|
| இளநீர்த் தண்ணீர் | படி | 2 |
| நெய் | படி | 1/8 |
| தேன் | படி | 1/16 |
| சீனி | பலம் | 3/4 |

இவையெல்லாம் இளநீரில் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் பொடி தூவிக் கிண்டிக் கொள்ளவும்.

## 71. அரையாப்பிற்கு

பெருங்காயம்
இந்துப்பு
குறான்
சுக்கு

இவை நாலும் சமன் கொண்டு, கடுத்த லெக்கில் அரைத்துப் பூச மாறும்!

## அரையாப்பிற்கு

அகப்பைக் காம்பைத் தணலில் புதைத்து, வெச்சென மூன்று நாள் அரையாப்பிலே வைக்க மாறும்!

## அரையாப்பிற்கு

அரையாப்பளவில் ஓடு எடுத்து, அபின் தடவி, அரையாப்பில் வைத்துக்கட்ட மாறும்!

அரையாப்பிற்கு, நல்ல சந்தனம், முலைப்பாலி லுறைத்துப் பூச, அரையாப்பு மாறும்! கை கண்டது!

## அரையாப்பிற்கு

வெள் வெங்காயமும், மாவலிங்கம் இலையும், இரண்டும் தட்டி வீக்கம் கண்டால், வலது பெருவிரல் நகக்கண்ணில் கட்டவும்!

வலது புறம் கண்டால், இடது புறங்கட்டலும்; இப்படி மூன்று நாள் வைத்துக்கட்ட அரையாப்பு தீரும்!

## அரையாப்பிற்கு

தவ்வளை வேரும் இலையும், உள்ளியும் அரைத்து, அரையாப்பில் வைத்துக் கூட்ட மாறும்!

## 72. அஷ்ட சூரணம்

சீரிய மூலரும் சிறந்த மூவரும்
கூரிய ஒருவரும் கொடிய காயமும்
ஆரிய வடமலை அசம தாகமும்
நேர்பட அரைத்துஇட நெருப்போ டொக்குமே!

## 73. அதிசாரக் கழிச்சலுக்கு

அம்பளங்காய் மரத்தின் பட்டை, நல்ல சீரகமும் சமன் கூட்டிப் பசுவின் தயிரில் அரைத்துப், பசுவின் தயிரில் கலக்கிக் கொடுக்கவும் தீரும்!

## 74. அண்ணாக்குப் புற்றுக்கு
**ஆறாத புண்ணிற்கு**
**வாயில் வருகிற சகலவியாதிக்கும்,**
**வீக்கத்திற்கும்,**
**பாண்டுவிற்கும்**
**மகோதரம் போலிருக்கிறதற்கும்,**
**வாயில் கொப்பளிக்க மருந்து**

சுண்ணாம்புக் கல்லாகிலும், வெந்த சிப்பியாகிலும், ஒரு ராத்தலிற்கு மூன்று பி..சுக்கை தண்ணீர் விட்டுக் கரைத்துப் பத்துநாளூறப்போட்டு, ஒரு நாளைக்குப் பத்துத்தரங் கிண்டவும்; மேல் வருகிற நுரையை எடுத்துப் போடவும்.

இப்படிப் பத்து நாள்; புத்துத்தரம் கிண்டவும்.

மேல்படி அந்தத் தண்ணீரைத் தெளியவைத்துச் சுண்ணாம்புச் சத்தில்லாமல் நீரை யெடுத்துச் செம்புப் பாத்திரத்தில் விட்டு, இந்த நீரில் அரைவிராகனெடை ஒரு நாளைக்குக் கொடுத்து, மேல்படி ஒரு குப்பித் தண்ணீரில் மூன்று கழஞ்சு நவச்சாரம் போட்டு, இப்படிக் கண்ட தண்ணீருக்குக் கணக்காகும்படியே போட்டு, செம்புப் பாண்டத்திலூற மூன்று நாளிட்டு வரயில், செம்மி நாலாம் நாள் குப்பியில் காற்றேறாமல் அடைத்து வைக்கவும்.

வாயில் வருகிற வியாதிக்கெல்லாம், வாயில் கொப்பளிக்கவும்.
வீக்கத்திற்குச் சீலையில் துவைத்து, வீக்கத்தில் போடவும்.
கண்ணோவிற்குக் கண்ணில் விடவும்.

புண்ணிற்கு ஒரு குப்பித் தண்ணீருக்குக் கழஞ்சு சவ்வீரம் போட்டு, பொடித்துப் போட்டு, அந்தத் தண்ணீரைச் சீலையில் துவைத்து, ஆறாத புண்ணிலிடவும்; கை கண்டது!

## 75. அசன வில்வாதி எண்ணை
## எண்ணை முழுக
## உல்ரக்கவி

ஆக முறத்தானே அசனவல் வாதிஎண்ணை
வாகடத்தின் கூறு மருந்துகேள்! - தாகமுடன்
அசன மகில்வில்வம் அமுக்குராச் சித்தாமுட்டி
வசன முதுவள்ளி வாகாய் - இசையவே
சிரக மிளகுதான்றி திரிபாலை நன்னாரி
நீர்விரவிக் காய்ச்சிவிதை நீர்வடித்துப் - பேர்பெரிய
பாலின நீர்எண்ணை சமனாக வேகலந்து
மேல்மருந்து தன்னில் விளம்பக்கேள்! - கோலமுறு
வெட்பாலரிசி விளாவரிசி சித்தரத்தை
நட்பாஞ் சிறுதேக்கு விலாமிச்சை - செப்பமுடன்

சிறுமூலம் கோஷ்டம் தேவதார முடனே
நறுவியகச் சோலமுடன் நாகப்பூ - மறுவில்லா
வாசமுள்ள பச்சைமதில் பூமாஞ் சட்டி
மோசமில்லாத் திப்பிலி மூலமுடன் - நேசமுள்ள
செவ்வள்ளிக் கிழங்கைச் சேரொன் றுகழஞ்சாய்
அவ்வகை யாய்ரைத்து நன் றாய் - இவ்வகையாய்
ஏக்கவிட்டுக் காய்ச்சி ஊறிப் பதம்வடித்துப்
பக்குவ மாய்த்தான் முழுகத்தீ ரும்நோய்! - எக்காம
மண்டையுரு சிலை மகோதரத்தின் நீர்த்தோஷம்
கண்டத் திருமல் கரகரப்பும் - துண்டத்தில்
பீநிசமும் காயம் பெருத்த தலைநோவும்
மூலத்தில் கொண்டிருக்கும் உள்காய்ச்சல் - மானிடர்க்கு
வாதபித்த சிலேஷ்மம் வரும்நோயை மாற்றுவிக்கும்
தீதற வேநோய்கள் எல்லாம் தீருமே! - வேதமெனச்
சொன்னார் தமிழ் முனிவர் சூழ்ந்த இருஷிகளுக்கு
முன்னூலாம் வேதம் உரை!

(உலாக்கவி - கலிவெண்பா)

## 76. அன்னபேதிக் குளிகை

### கவி

அன்னபேதி வேர்க் கொம்பு
அரிய மிளகு வெள்ளுள்ளி
பின்னும் நிம்பைத் தளிருடனே
பெருத்த முருங்கை வேர்ப்பட்டை
மின்னேகேள் கருஞ்சீ ரகமும்
வேறோர் சோமனா தியுடன்
முன்னோர் சொன்னார் கடுகுநொச்சி
மும்மூன் றொன்பது வாங்குவதே!

வாங்கு மருந்து சரியிடைதான்
வாத மடக்கிச் சாறதனால்
ஓங்கி அரைத்து வழித்துருட்டி
இலந்தைப் பிஞ்சுக் காயளவாய்ப்
பாங்காய் உலர்த்தி வேர்க்கொம்பு
பரிவாய் அவித்த தண்ணீரில்
நீங்கா தகுந்த வாய்வெல்லாம்
நில்லா தோடும் கண்டீரே!

## 77. அலகில் எந்த வியாதிக்கும் புகை

நீர்முள்ளி வேரும், கிராம்பும், சுங்கானில் வைத்துப் புகை குடிக்கவும்!

தொண்டை நோய் தீரும்!

இதற்குப் பூச்சு:

1. சில்லுவட்டுப் பருப்பு
2. சங்கு
3. சுண்ணாம்பு
4. பெருங்காயம்

இது மூன்று மரைத்துப் பூசவும்!

## 78. அத்திச் சுரம்

1. உடம்புலத்தல்
2. க்ஷயும்
3. கபம்
4. வறட்சி

இவைகட்கு மருந்து கவி:-

வாயுவில் பத்தே மாகில்
வலித்துப்பின் எரித்துக் காட்டும்
ஏயதோர் அசனம் தண்ணீர்
எதிரெடுத் தருவ ருக்கும்
சாயவே உடம்பு நொந்து
சந்துகால் உடலும் காந்திப்
பேய்கள்போல் மந்தம் பத்திப்
பலங்களைக் குறைக்கும் தானே!

**இதற்கு மருந்து:-**

அசுபகந்தாதிச் சூரணத்தில் தீரும்!

## 79. அரையாப்பிற்கு

கொடிவேலி வேர், கல்லித் தேங்காய் நெய்யில் போட்டுக் காய்ச்சிக், காசு எடை கொடுக்கவும்.

மறுபடி, வேம்பும் பொடி செய்து தின்ன மாறும்!

பின்னும், அதைச் சமூலம் சுட்டு, மஞ்சள் கூட்டி, மோரில் அரைத்து, வீக்கத்தில் பூசவும்.

அவுரிவேர்
செம்மறியாட்டின் புழுக்கை
கத்தூரி மஞ்சள்
சிறுநீர்

இவற்றை அரைத்துப் பூசவும். அரையாப்பிற்கு,

பெருங்காயம்
இந்துப்பு
குலமிஞ்சான்
சுக்கு

சமன்கொண்டு, கடுத்த சாராயத்தில் அரைத்துப் பூசத் தீரும்.

அரையாப்பு, கன்றிப்போனால், பழுக்க:-

நல்ல சந்தனம், நல்ல முலைப் பாலில் அரைத்து, மூன்று நாள் பூச, அரையாப்புத் தெறிக்கும்!

கைகண்டது!

## 80. அழலை மாற்ற மருந்து

ஆவார அரிசி
ஆவாரக் கொழுந்து
ஆவாரப் பட்டை
நற்சீரகம்

இந்த நாலும் பசுவின் பாலில் அவித்து, மூன்று கொதி யானால் இறக்கி, மூடிவைத்துக், காலமே குடிக்கவும்; பால் கொதிக்கு முன்னே, சாதிக்காய், ஏலம், கிராம்பும் கூட்டிக் கிழி கட்டிப் பாலோடு போட்டு அவித்துப் பிழிந்து, இந்த மருந்தும் பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

## 81. அக்கினித் தம்பனம்

சிறுபயறு
நெல்லிப் பருப்பு
மிளகு

சரிமியிடை கொண்டு, கையாந் தகரைச் சாறு விட்டு, அரைத்துப் பொருப்பித்துச், சிரசில் தப்பனமிட்டு, வெந்நீர் வைத்துக் குளித்துப் போட, அக்கிதிக்காந்தல் மாறும்!

அரைசோறு, பட்டுக்கழிந்தால், சுக்குப் பணமளவு, வெள்ளுள்ளி யவ்வளவு மரைத்து, மோரில் கலக்கி, ஒரு கொதியிட்டு இறக்கிச், சோற்றில் விட்டுப் பிசைந்து குடிக்கவும்; பின்னிடை கறியிட்டுச் சாப்பிடவும்.

இது கைகண்டது.

## 82. அஜமோத கற்பம்

அஜமோதத்தைக் களிப்புள்ள கலசத்தில் இட்டு, பழச்சாறு விட்டுப் பிசிறி, நிழலிலுலர்த்தி, மறுபடி கையாந்தகரைச் சாறு விட்டு, நன்றாய் உலர்த்திப் பொடி பண்ணிச், சிறுகத் தின்று வரவும்.

மறுபடி, வெருகடிப் பிரமாணம் தின்று வரவும்.

சுத்தி நன்றாய் விடும்; சோகை மாறும்! காமாலை, பித்தம், பாண்டுரோகம், படர்தாமரை, சிரங்கு, குட்டம் தீரும்! நெய், பால், மிகுதி கூட்டவும்.

தம்பனையுண்டு; ஸ்திரிபோகமுண்டு!

இது கைகண்டது.

அழுகின குட்டத்திற்கு, கொடிவேலி வேர் பொடி பண்ணி, சாரணைவேர் பொடிபண்ணி, நல்லெண்ணையில் கலந்து கொடுத்து மேல் எண்ணை தடவத் தீரும!

பின்னும், கொடிவேலிவேர், சாரணை வேர், காரை வேர், பொடியாக்கிச், சதுரக்கள்ளிச் சாறும், எருக்கிலைச் சாறும், கோமூத்திரம் நாழி கூட்டி, எரித்து, வடித்து, உடம்பில் தடவவும்; கைகண்டது.

(கோமூத்திரம்-பசுவின் மூத்திரம்)

## 83. அஷ்டகுண வாயுவிற்கும் பொடி

நற்சீரகம்
கருஞ்சீரகம்
சுக்கு
மிளகு
திப்பிலி
அசமதாகம்

இந்துப்பு
பெருங்காயம்

பொடி செய்து, வெருகடி தூள் தின்று வரவும்.

கைகண்டது!

## 84. அமிருத எண்ணை

வெள்ளைக் குங்கிலியம் பலம் 3 தூள் செய்து, இரும்புக் கரண்டியில் விட்டு, நல்லெண்ணையு மிட்டுக், காய்ச்சி, கிண்ணத்தில் தண்ணீர் விட்டு, அதில் ஊற்றி, கையால் பிசைந்து, இப்படி ஏழு முறை செய்ய எண்ணையாம்!

கொட்டைப்பாக்களவு தின்னத் தீரும் வியாதி:-

1. நீர்க்கடுப்பு
2. நீர்ச்செறிப்பு
3. மேகம்

## 85. அத்தறா மலங்கழிக்கிறதற்கு உப்புக் குழம்பு

சுக்கு
மிளகு
ஓமம்
வெள்ளுள்ளி
நொச்சிக் கொழுந்து
முருங்கைக் கொழுந்து

வகைக்குப் பலம் பொடி செய்து, உப்புப்படப்படப் பூத்திருந்தனையும் வறுத்துப், பனைவெல்லம் பலம் 1, நல்லெண்ணை படி ¼ விட்டு, மருந்தெல்லாம் லேகியப் பதமாய்க் கிண்டி, நெல்லிக் காயளவு இரண்டு வேளையும் தின்று வரவும்.

இரைச்சல்,
கழிச்சல்
வாயு
குன்மம்
இவையெல்லாம் தீரும்!
கைகண்டது.

## 86. அமிருத கடுக்குக் கவி

சீனி உழக்கு நெய்நாழி
தேத்தாம்பால் வேர்தோலி தானாழி
ஆன தூதளை வேருடனே
அடுக்குத் திப்பிலி பேய்ப்புடல்தான்
தானே வெந்து கடுகுதின்ன
க்ஷயரோகம் போமிளை யில்லை!
மானே பிரமேய காசம்
மாந்தம் தீரும் கண்டீரே!

## 87. அனல்கழிச்சல் பாட்டு

செய்ய கோஷ்டம் அதிமதுரம்
சீரிய வாமிச் சிறுவேலி
பொய்யா முத்தம் சந்தனமும்
பேரானந் தஇளநீர் நெல்பொரியும்
மெய்வாய்ப் பதிவா கக்காய்ச்சி
மீறா திறுத்துக் கொள்வீரால்
அய்யர் சொன்னார் இதுஉண்மை
அனலில் கழிச்சல் அகன்றிடுமே!
(சீரியவாமிச் = சீரியவாம் + இச்;
மீறாதிறுத்து = மீறாது + இறுத்து;
அய்யர் = உயர்ந்தோர்))

## 88. அரக்குத் தைலம் - பாடல்

சென்னா யுருவு சிறுநீரை
தேவ தாரமோ டரத்தை
பொன்னா மெழுகு பெருங்குரும்பை
பேசு மிலாமிச் சிறுவேலி
தின்னார் சுக்கு மலைமஞ்சள்
சேர அரைத்து வடித்ததனை
மின்னாகு மேலில் பூசுவீரால்
மேவும் வெதும்பு உள்சுரமும்
மன்னா யிருந்த பதியெனவே
மலங்கி ஓடும் வாராதே!
(நாயுருவு - நாயுருவி)

## 89. அலகுக் கட்டு திறக்க

மிளகு பன்னிரண்டு
உப்புக்கல் ஐந்து
நாயுருவித்தோல்
குறிஞ்சா வேர்
வெள்ளுள்ளி
எலுமிச்சங்காய்த் தோலி

எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கண்ணில் தடவத் திரும்!

கைகண்டது.

## 90. அண்டவாதத்திற்கு

பூனை முருங்கை இலை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் ஐந்துநாள் கொடுக்கவும்.

பத்தியம்

அரிதாரம்

செந்தூரம்

பூரசம்பட்டைச் சாம்பல்

அரசம் பொருக்குச் சாம்பல் படி 2

அரைக்கீரைத்தண்டுச் சாம்பல் படி 2

முன் சொன்ன பட்டையும், பொருக்குச் சுட்ட சாம்பலும் நாழிமட்டுச் சாடியில் வைத்து, அதன் மேல் தண்டு சுட்ட சாம்பல் பரவி, எருக்கிலை இரண்டு வைத்து, இதன்மேல் வேண்டிய அரிதாரம் வைத்து, அதன்மேல் ஆல இலை மூடி, அதன் மேல் தண்டு சுட்ட சாம்பல் பரவி, அரசம் பொருக்குச் சாம்பல் பரவி, 30 நாழிகை ஊமத்தைக் காயளவு நீயெரித்து, ஆறவிட்டுப் பார்க்கவும்: செந்தூரமாம்!

பணவெடை செந்தூரங் கொள்ள, குஷ்டம், குலைநோய், ஈளை, ஊதுமாந்தை, க்ஷயரோகம், வாதம் 80, சிலேஷ்மம். வயிற்றுவலி இவைகள் தீரும்!

கைகண்டது.

## 91. அண்டவாயுவிற்கு

இலுப்பைக்கட்டி புளியங்கொட்டையளவு, கோளிக்காரம் சமன்கொண்டு, முலைப்பாலில் விட்டரைத்துக் கொடுக்கவும் நன்று.

கோதுமை அரிசி பலம் $1\frac{1}{2}$ மூன்று பங்கு வைத்துப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும் நன்று.

கைகண்டது.

## 92. அண்டவாயு கீழிறங்கினதற்கு

நாறுக் கரந்தையும், வெள்ளுள்ளியு மரைத்து, மூன்றுநாள் முள்ளிக்காயளவு கொடுக்கவும், வாங்கும்!

## 93. [அரையாப்பு]

(i) அரையாப்பிற்கு வீக்கம் வற்ற, ஊமத்துப் பட்ட சம்பு சுட்டு, அந்தளவு கல் சுண்ணாம்பு, சிறுநீர் விட்டரைத்துப் போட ஒரு நாளோடே வற்றும்!

(ii) அரையாப்பிற்கு, பத்து முட்டை வெள்ளைக் கருவும் சுண்ணாம்பும் மந்திரித்துச் சீலையில் ஊட்டிப்போட, வற்றும்!

சுட்டி கரைந்தால், பத்து விடும்!

கை கண்டது.

(iii) பின்னும், மூவிதழ்க் கிழங்கு அரைத்துக் கொதுப்பித்து இடவும்.

(iv) அரையாப்பிற்குக், கிரந்தி பவுத்திரத்திற்கு, அவித்து ஊற்றின விளக்கெண்ணை படி $\frac{1}{4}$, திருகுகள்ளிப்பால், படி $\frac{1}{8}$ மெழுகுப் பதத்தில் காய்ச்சிக் கொள்ளவும்,

பத்தியம்,

(v) அரையாப்புக் கிரந்திக்கு, ரத்தப் பிரமேகம், சலப்பிரமேகம் சகலத்திற்கும்:

நல்லெண்ணை படி $\frac{1}{2}$, கொடிவேலி வேர்த்தோல் எலுமிச்சங் காயளவு, கருப்புக்கட்டி அவ்வளவு சேர்த்துக் காய்ச்சி, மெழுமுப் பதத்திலிறக்கி வைத்துக்கொண்டு, அதைச் சுண்டைக்காயளவு உருட்டி, எண்ணையிலிட்டு, வேளைக்கு ஒரு கரண்டி எண்ணை, ஒரு உண்டையும் கொடுக்கவும்.

(vi) அரையாப்பிற்குப் பத்து

அரையாப்பு தடித்த பொழுது, உவர்மண்ணைக் கரைபோட்டாப் போலே போட்டுக், கொடிக்கள்ளிப் பால் நடுவே இட்டு, அதன்மேல் மஞ்சள்பொடி பலம் $\frac{1}{2}$, சுண்ணாம்புப் பொடி பலம் $\frac{1}{2}$, இது இரண்டும் தினம் மேலிட்டுக் காயும்தனையும் அசையாம லிருந்து கொள்ளவும்.

உள்ளுக்கு, நத்தைச்சூரி வேர் கொட்டைபாக்களவு அரைத்து, நல்லெண்ணையில் மர்த்தித்துக் கொடுக்கவும்; சோற்றிலும் நல்லெண்ணை விட்டுச் சாப்பிடவும்.

பத்தியம். கைகண்டது.

## 94. அடி, குத்துப்பட்டால்

பருத்தி இலைச்சாறு ஒரு சிரங்கை கொடுக்கவும்; நன்று.

## 95. அரிதாரச் செந்தூரம்

அரிதாரஞ் சுத்திபண்ணி, மூக்கரைச் சாரணை யிடித்து, அடைபிடித்துச், சட்டிக்குள் வைத்து, அதன்மேல் அரிதாரம் வைத்து, மேலோடு அடைப்பால் மூடி. சட்டியில் வைத்து மூடிச் சீலை மண் செய்து, எட்டுச் சாமம் எரியிட்டு, ஆறவிட்டிறக்கித் தூள் செய்து. சீலை வடிகொண்டு,

ஒருதலை நோவிற்கும்,
புண்ணிற்கும்,
சிரங்கிற்கும்,

பணவெடை தேனில் கொடுக்கவும்.

வயிற்றுக் கடுப்பிற்கு, முந்திரிகைப் பழத்தில் இடவும்.

கண்ணோவிற்கு, எலுமிச்சம் பழச்சாற்றில் விடவும்.

பிரமோகத்திற்குப் பூசனிக்காய்ச் சாற்றில் கொடுக்கவும்; நன்று

முத்தெருக்கன் செடிச் சாற்றில், அரிதாரம் நன்றாயரைத்து வில்லை பிடித்து, உலர்த்திச், சட்டியில் வைத்து, மேல்சட்டி மூடி, சீலைமண் செய்து, கவுதாரிப் புடம் போடவும்; செந்தூரமாம்!

(கவுதாரிப்புடம் - வரட்டிகளைக் கவுதாரி எனும் பறவை அளவு அடுக்கி, எறிய விடுதல்)

## 96. அரையாப்பு, விப்புருதி, கண்டமாலை தொடைவாழைக்கு

நத்தைச்சூரி வேரும், குப்பைமேனி வேரும் . . . . நீரில் பிசைந்து, பொட்டணங்கட்டிக் காதில் நசியமிடவும். மூன்று நாளைக்கு உள்ளுங் கொடுக்கவும்.

பத்தியம்-மிளகு நீரும், சோறும் கொடுக்கவும்.

## 97. அரணைக் கடிக்கு

சாரணை சமூலம் சிறுநீரிலரைத்து உள்ளும் கொடுத்து, மேலுக்குப் பூசவும்; தீரும்!

## 98. சுபோத சன்னிக்கு

சாரணையும், குப்பைமேனியும், கொட்டைப்பாக்கும் வெற்றிலையும் தின்னிறக்கத் தீரும்!

## 99. அக்கரத்திற்கு இராயப்ப மேஸ்திரி கோரோசனைக்குளிகை

ஏலம்
கோஷ்டம்
அதிமதுரம்
செம்புத்தூள்
இலவங்கப்பட்டை
சீரகம்
கோரோசனை
கலைக்கொம்பு
உத்திராக்ஷம், சமன்கொண்டு

கொடிவேலிவேர், வெட்டிவேர் அவித்த தண்ணீரில், கருடப்பச்சை, விலாமிச்சை இவையெல்லாம் சமன் அரைத்து, மிளகுப்பிரமாண முண்டை செய்து, இந்தத் தண்ணீரில் கொடுக்கவும்.

## 100. அசீரணத்திற்கும், உள்குத்துக்கும் குளிகை

மகிழம் பருப்பு
கழற்சிப் பருப்பு
முருங்கைப் பருப்பு
புங்கம் பருப்பு
சிலப் பருப்பு
மாவிலங்கவேர்
ஊகாய வேர்
கரண்டை வேர்
ஈசுவர மூலி வேர்
அவுரி வேர்
உத்தமதாளி வேர் - இதெல்லாம் சமன்
கழற்சிப்பருப்பு-இருபங்கு
மகிழம்பருப்பு-இருபங்கு
மிளகு
சுக்கு
திப்பிலி
கருஞ்சீரகம்
இந்துப்பு
பேரரத்தை
கடுகு
கிராம்பு
கார்கோல அரிசி
வாலுளுவை
அக்கராச்குடன்

கற்பூரம்

துருசு

வெள்ளுள்ளி

கடுக்காய்-இதுவும் சரக்கு ஒருநிரை

உத்தமதாளிச்சாறு விட்டரைத்து, இலந்தைக் காயளவு உருட்டி நிழலிலுலர்த்தி, உள் கொடுத்துப் பிரவீரத்துக் கோழை, விப்புருதி வாயுவும், மந்தம், அசீரணம், குளிர்சன்னி இதற்கெல்லாம் இஞ்சிச் சாற்றில் முருங்கைவேர்ச் சாறு, தேனும் கூட்டிப் பயமில்லாமல் கொடுக்கவும்!

கை கண்டது.

## 101. அண்டவாயுவிற்கு

மலைதாங்கி வேரும், புகையூரலும், சுண்ணாம்பும் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும்!

## 102. அரையாப்பிற்குச் சூடு

வலதுபுறங் கண்டால், இடதுபுறம் காலில் பெருவிரல் நடு மொனியில் சுடநிற்கும்!

## 103. அடக்கம் எழுப்பக் கவி

வாளவிரை மகிழவிரை பேய்ப்பீர்க்கு விரைமிளகு
வசந்தாசம் தேவதாரம் வகைகேளும் சமனாய்
கோளறவே தேசிக்காய்ச் சாற்றிலே ஊறி
குளிகைசெய்து நிழலுலர்த்தில் வாளரவும் தீண்டி
யோர்கள்
நீளமது கூறுகையாந் தகரைச் சாறும்
நிசமிதுவே விஷந்தீரும் தீராதே போனால்
தாழமொழி பேசுவோர்சிறு நீரில்கண்ணி விடுசலவைத்
நுகில்தனைத்து அவன்தன் சரீரம் பொதிந்து

வாழுலகில் மூன்றுநா ழிகையிலே எழும்புவான்!
வல்லவரின் கிருபையால் இதுவே திட்டம்
காளமது ஓதியே இம்மருந்து செய்நீ
கலங்காதே நான்செய்து கைகண்டது உண்மையே!

## 104. பித்தம் 40க்கும், ஒருத்தலைவலிக்கும், தீரத் தலைவலிக்கும் தீரக் குத்தலுக்கும்

பீர்க்கங்காய் விரை பழையதில் 16, விரை தண்ணீரில் அரைத்துக் கொடுக்கக் கபம் வாயால் எடுக்கும்!

அதன் பிறகு, பதினாறுவிரை முலைப்பாலில் அரைத்து, நாசியில் நசியம் கொடுத்தால், தலையிலிருக்கிற தண்ணீரெல்லாம் வாங்கி போகும்!

இப்படி மூன்று நாள், காலை வேளையில் இப்படிச் செய்தால் முன் சொல்லிய வியாதியெல்லாம் தீரும்!

## 105. பித்தச் சுரத்திற்குக் குடிநீர்

பேய்ப்புடல்
கடுகுரோகிணி
பெருங்குரும்பை
சீந்தி
சந்தம்
பங்கம்பரணைவேர்
கொத்தமல்லி
சுக்கு

இவை வகைக்குப் பலம் 2, இருநாழித் தண்ணீர் விட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும்!

## 106. மாதவிடாய் இல்லாதவர்க்கு

சிவந்த துளசி இரண்டு பச்சைப்பாக்களவு, நல்ல கரியிலரைத்து மாதவிடாய் கண்டால், மூன்று நாள் கொடுக்கவும்.

இப்படி மூன்று மாதங் கொடுக்கவும்; மாதவிடாய் நன்றாய்க் காணும்!

## 107. வயிற்றெரிப்பிற்கும், எரிகுன்மத்திற்கும்

முருங்கையிலைச் சாகமும், வெற்றிலைச் சாகமும் வகைக்குச் சிரங்கை அரை, நல்லெண்ணையில் மர்த்தித்துக் கொடுக்கவும்.

மூன்றுநா ளிரண்டு நேரமும் கொடுக்க மாறும்!

## 108. பேய் போக மருந்து

பெருந்தும்பை வேரும், வெள்ளைச் சாரணை வேரும், பொடித்துக் கண்ணில் விடப் பேய் போகும்!

(பேய் என்பது, இங்கே பேய் பிசாசு அல்ல! பேய்க்கண் என்ற நோயைக் குறிக்கும். இந்நோய் கண் சிவப்பாக இருத்தல், சுழலுதல் முதலிய நோவுகளைச் கொண்டிருக்கும் என்பர்.)

## 109. பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் பனிக்குக் குடிநீர்

| | |
|---|---|
| கொடித்துவ்வை வேர் | பலம் 3 |
| கண்டைவேர் | பலம் 3 |
| கோரைக்கிழங்கு | பலம் 2 |
| பற்பாடகம் | பலம் 10 |
| கோஷ்டம் | |
| சிறுதேக்கு | |

திப்பிலி

சுக்கு வகைக்குப் பலம் $1\frac{1}{2}$

இவையெல்லா மிடித்து, எட்டொன்றாய்க் காய்ச்சி, இரண்டு நேரமும் மூன்று நாளைக்குக் கொடுக்கவும் தீரும்!

### 110. காய்ச்சலுக்கும் குளிருக்கும் குடிநீர்

சுக்கு
கொத்தமல்லி
சாரணை வேர்
சுண்டை வேர்
அமிருத நன்னாரி
கொடித்துவ்வை வேர்

இவை வகைக்குப் பலம் $1\frac{1}{2}$

நாயுருவி வேர் பலம் 2

இவையெல்லாம் எட்டொன்றாய்க் காய்ச்சி, இரண்டு நேரமும் மூன்று நாள் கொடுக்கவும் நன்று!

### 111. சுரம் 64, சன்னி 18க்கும், பலத்திற்கும் கைகண்ட கிஷாயம்

| | |
|---|---|
| விஷ்ணு கிரந்தி | பிடி 1 |
| சிறுபுள்ளடி | பிடி 2 |
| நெல்பொரி | சிரங்கை |
| கொத்தமல்லி | சிரங்கை |

இவையெல்லா மிடித்து, எட்டொன்றாய்க் காய்ச்சி, நாழியில் ஒரு பங்கு எடுத்துப் பொன், வெள்ளி, குரோசினை, காண்டாமிருகத்தின் கொம்பு, கடல் தேங்காய், வெள்ளைக் கருடப்பச்சை, மதுரம், மாசக்காய், கலைக்கொம்பு, உத்திராட்சம், சகத்திரபேதி இவையெல்லாம் சரிக்கூட்டி அரைத்துப் பத்துநாள், இரண்டு வேளையும் கொடுத்து வரவும், நன்று!

## 112. சன்னி பதினெட்டுக்கும் பூச்சு மருந்து

இருதிப்பிலி
கடுகு
பூதவற்கம்
சுக்கு
வசம்பு
வெள்ளுள்ளி
வெளுத்த பிசின்
பெருங்காயம்
கறுவாய்

இவையெல்லாம் சமன் கொண்டு, வெந்நீரில் அரைத்துப் பூசவும் நன்று!

## 113. சகலக் காய்ச்சலுக்கும் குடிநீர்

கொத்தமல்லி,
சீரகம்
அதிமதுரம்
இருசந்தனம்
கடுக்காய்
ஏலம் 5
நெல்லிக்காய்
திப்பிலி
கிராம்பு
இருவேலி
தென்னம் வேர்
கீளிரைப்பட்டை
சாதிக்காய்
மாசக்காய்
மூங்கில் தோல்

சமன் கூட்டி ஒரு பொட்டலங்கட்டி கூட்ப் போட்டுத், தண்ணீர் விட்டுச் சிறிது எரித்துச் சிவந்து வருகிறபோது, இறக்கிக் கொடுக்கவும்!

## 114. சூலைவாயு கம்மிச் சாலக் கஷாயம்

சீரகம்

கருஞ்சீரகம்

ஓமம்

சாதிக்காய்

கிராம்பு

ஏலம்

இருசந்தனம்

இருவேலி

விலாமிச்சு

கொத்தமல்லி

வெள்ளுள்ளி

சாத்திரபேதி

கன்னாரமாயக்கால்

சுக்கு - வகைக்குக் கழஞ்ச $\frac{1}{4}$

துவிளம்

ஆடாதோடை வேர்

மாதுளந் தோடு - வகைக்குப் பலம் $\frac{1}{4}$

ஒன்றரைப்படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி, அரைப்படியில் இறக்கிச் சீரகம், சாதிக்காய் சமன், வெவ்வேறு பொடித்து ஒரு நேரம் சாதிக்காயிலும், ஒரு விசை சீரகத்திலுமாகத் தேனும் ஊற்றிக் கொடுக்கவும் தீரும்!

## 115. சூலைக்கு நெய்

பசுவின் நெய்
பணவெடி
உள்ளிச்சாறு
அன்னாகச் சாறு - வகைக்கு படி ½
சாதிக்காய்
கிராம்பு
சிரிமி (?)
அஜமோதகம்
ஏலம்
வெள்ளுள்ளி
சோமனாதி
காயம் - வகைக்குப் பலம் 1

நன்றாய்த் தட்டிக் கூட இட்டு, கடுகு (?) பதத்தில் இறக்கி, ஒரு கரண்டி வீதம் கொடுக்கவும்; தீரும்!

## 116. சூலை கழிச்சலுக்கு

சீரகம்
ஓமம்
மாதுளத்தோடு
சாதிக்காய்
கிராம்பு-சமன்கொண்டு,

நாலொன்றாய்க் காய்ச்சி, இறுத்து, இதற்கு மேற்பொடி,

சாதிக்காய்
கிராம்பு
மாதுளத்தோடு
வசம்பு
காயம்-இவை சமன்கொண்டு,

பொடித்து, மேற்பொடியிட்டுக், கொடுக்கத் தீரும்! நன்று

## 117. கணைக்குப்பொடி

கிராம்பு
சாதிக்காய்
சாதிப்பத்திரி
மதுரம்
கருவைப்பால்
கருடப்பச்சை
நீலக்கருடப்பச்சை
கன்னார சாத்திர வேதி
கிருமி சத்துரு
ஓமம்
சீரகம்
கொத்தமல்லி
கடுக்காய்
செருசந்தனம்
மாயக்காய்
தும்பைப் பூ

இவை சமன் கொண்டு, பொடி செய்து, சீலை வடிகொண்டு வெல்லத்திலும் கொடுக்கலாம்.

உருட்டுக்கு இஞ்சிச்சாகம், கிருமிக்குத் தண்ணீரும், உள்ரோகத்திற்குச் சீரக வெல்லத்திலும் கொடுக்கலாம்.

வயிற்றுப்பொருமலுக்குமாகும்!

இந்தப் பொடி, பலத்திற்கும் கைகண்டது!
(கன்னார சாத்திரவேதி-நவச்சாரம்)

## 118. கணைக்கு நெஞ்சிலிடத் தளம்

கருவை
நெல்லுப்பொரி

மதுரம்
கூவிளம்
மிளகு
மஞ்சள்
கச்சோளம்
மீரை
சன்னிநாயகம்

இவையெல்லாம் சமன்கொண்டு, முலைப்பாலிலரைத்துத் தளமிடக், கபக்கட்டு, இரையிறது எல்லாம் திரும்!

## 119. கணைக்குப் பூச்சு மருந்து

கரை நண்டு
மரமஞ்சள்
வசம்பு
அருதை
கறுத்த உப்பு
வெள்ளுள்ளி
நற்சீரகம்
நாவல்கொழுந்து

இவையெல்லாம் சமனிட்டுக் காய்ச்சி, மெழுகுப்பதத்தில் இறக்கிக் கரண்டிவீதம் கொடுக்கவும் திரும்!

## 120. வயிற்றுப் பேதிக்கு

சாதிலிங்க விரேசனம்
சாதிலிங்கம்
சுத்தி செய்த நேர்வாளம்
பொரிக்காரம்

இவை சமன்கூட்டி, கொஞ்ச மிந்துப்பும், கொஞ்சம் ஆமணக்கு முத்தும் கூட்டி அரைத்துக், குழம்புப் பக்குவத்தில் அரைத்துச் சிமிழில் அடைத்து, ஒரு மஞ்சாடி யளவு, சீனியிலாகுதல், கருப்புக் கட்டியிலாகுதல், கருத்த சர்க்கரையிலாகுதல் கொடுக்கவும்.

மறுபடி வெந்நீர் கொடுக்கவும்; பேதியாகும்!

பெற்ற பெண்பிள்ளைகளுக்கு, நிணம் பிடித்தாலு மிந்த மருந்து கொடுத்தால், மலமும் சோரையும் போகும்! பயப்பட வேண்டாம்! மிளகானமும் சோறும் கொடுத்துவரவும்.

மற்ற மனுஷருக்கு மாகும்! கை கண்டது!

## 121. அரணைக் கடிக்கு

வெற்றிலையும், அகத்தியிலையும், மிளகுமரைத்துப் பூசவும் தீரும்!

## 122. குன்மத்திற்கு

ஓரிலைத் தாமரையும், முசுமுசுக்கை இலையும் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்!

## 123. சிறுபிள்ளைகள் பலபிணிக்கும்

நற்சீரகம்

கொத்தமல்லி

கரியுள்ளி

சிறுபுள்ளடி

பூவாங்குருந்தி இலை

இவையெல்லா மிடித்து, அரைப்படி தண்ணீர்விட்டு, கால்படியாக்கி, சர்க்கரை மேம்பொடியிட்டு, மூன்று நாள் கொடுக்கவும்; நன்று!

## 124. பெண்பிள்ளைகள் வயிறுருட்டுக்கு

| | |
|---|---|
| அருதைப் பிடி | 1 |
| அல்லோகப் பிடி | 1 |
| வெள்ளுள்ளி சேர் | 3 |
| ஓமம் பலம் | $1\frac{1}{2}$ |

இவையெல்லாம் துவைத்து, நீரெடுத்து, கருத்தராக்கில் கலந்து கொடுக்கவும்!

அந்தக் கோரை ராக்கில் கலந்து, அடிவயிற்றிலும், வயிற்றிலும் பூசவும்.

## 125. இரத்தமும் சீதமும் போகின்ற கடுப்பிற்கு

காட்டுச்சீரகம் பொடித்து நெய்யில் குழைத்து, மூன்று நேரம் தின்னத் தீரும்!

கைகண்டது!

## 126. வாதத்திற்கு நொச்சிக் குழம்பு

நொச்சிச்சாறு உழக்கு

தேங்காய்ப்பால் உழக்கு

பனங்கூழுப்படி உழக்கு

இந்த மூன்று மருந்துங் கூட்டிக், களிகிண்டித் தின்னவும்.

இப்படி ஆறுநாளிரண்டு நேரமும் தின்ன, நடுவில் நீர் விழுந்தாலும், கண்களில் நீர் விழுந்தாலும், கைகால் களைக்கிறது. கண்களில் நீர் கட்டினது எல்லாந் தீரும்!

## 127. வாதத்திற்குக் குடிக்க

புதுக்கால் எண்ணை ஒரு கோப்பை, அவன் சிறுநீரோடு கோப்பை-இரண்டும் நன்றாய் மர்த்தித்துக் குடிக்கவும்

இப்படி மூன்று நாள் ஆறு வேளை குடித்தால், ஆண்டவனுதவியால் வாதமுட்டுகளிலுள்ள நோவு, களைப்பும், கைகால் களைப்பும் முடக்கமும் எல்லாந் தீரும்!

உப்பு, புளி தள்ளிப் போடவும்.

கஞ்சித் தண்ணீர், சோறு, காற்று, வெயில் இவைகளெல்லாம் பதனமாய்க் காத்துக் கொள்ளவும்.

## 128. முடக்கு வாதத்திற்கு

| | |
|---|---|
| தேங்காயெண்ணை | ஆழாக்கு |
| சதுரக்கள்ளிச்சாறு | ஆழாக்கு |
| சுந்திரிக்கம் | பலம் 2 |
| கஸ்தூரி மஞ்சள் | 20 |

இவையெல்லாம் கூட்டிக், காய்ச்சி, நோயுள்ள இடங்களில் பூச, முடக்குவாதந் தீரும்!

## 129. சன்னிவாதம், திமிர்வாதம் வாதக்கரப்பானுக்கு

| | |
|---|---|
| வெள்ளாட்டுப் பால் | உரி |
| புளியிலைச்சாறு | உரி |
| ஆமணக்கெண்ணை | உரி |
| கள்ளிப்பால் | ஆழாக்கு |
| எருக்கம் பால் | ஆழாக்கு |

ஆக இவைகளெல்லாம் கூட்டி, வெந்து, மெழுகுப் பதத்தில் வடித்து, உள்ளுக்கும் சற்றே கொடுத்து, மேலிலும், நாடி நரம்புகளிலும் தடவி, ஒரு நாள் சும்மாயிருந்து, மறுநாளும் அப்படிச் செய்து, அதற்குப் பச்சிலை, வாதமடக்கி இலை, எருக்கிலையும், அத்தி இலை, நொச்சி இலை, இந்த இலைகள் போட்டு வெந்து இந்த நீர் குளிக்கவும். சாயங்காலம் அரப்புத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும்.

சன்னிவாதந், திமிர்வாதம், வாதக்கரப்பான் இவை தீரும்!

## 130. இருமல், வாதம், காமாலை, பக்கநோய் வாதச்சுரம், சேத்துமச் சுரத்திற்குக் குடிநீர்

சுக்கு

கோஷ்டம்

சிறுமூலம்

சீந்தித்தண்டு

கண்டங்கத்திரி

ஆக இவை பன்னிரண்டு கழஞ்சு எடை இடித்து, இருநாழி வெள்ளம் விட்டு, உழக்காகக் காய்ச்சி, திப்பிலி மேம்பொடி போட்டுக் குடிக்கத் தீரும்!

## 131. பிரமேகஞ் சூலைக் கடுப்பு கரல் கை முடங்கின வாதத்திற்கும் பொடி

| | |
|---|---|
| சீனிப்பாகு | பலம் 2 |
| திப்பிலி | பலம் 1 |
| அஜமோதம் | பலம் $\frac{1}{2}$ |

இந்த மூன்றும் வெவ்வேறாய்ப் பொடித்துக் கொள்ளவும்; அசமதாகம் புடமிட்டுக் கொள்ளவும்.

மூன்றும் வெவ்வேறு வடிகொண்டு, ஒன்றாய்க் கூட்டி, எட்டு நாள் பதினாறு நேரம் தின்னவும்; உப்புப் புளி தவிரவும்; கோழிக்கறி, கோழி முட்டையும் கூட்டவும்; வெந்நீர் கொஞ்சமாய்க் குடிக்கவும். எட்டுநாள் போனதன் பிறகு, ஒளஷதத்தை விட்டு மறுபடி மூன்றுநாள் விட்டுத், தலைவழி வெந்நீர் விட்டுக் குளிக்கவும்.

இப்படி நாலு நாளைக்குப் பிறகு, எண்ணை தேய்த்து முழுகவும்.

பத்தியம் முறியாமலிருந்தால், தேவநாயகி யுதவி செய்வாள்!

## 132. கைகால் முடங்கின வாதத்திற்கு எண்ணை

எருக்கிலை
புளியிலை
நொச்சியிலை
சாகம் நாழி
பசுவின் மூத்திரம் நாழி
இதற்குக் காய், குளவிந்த மஞ்சள்
வெண்சிறுகடுகு
அமுக்குரா வேர்
கொடுவேலி வேர்
இருவேலி வேர்
சாரணை வேர்
சதகுப்பை
செவ்வியம்
வசம்பு

இவை சமன்கழஞ்சு வாங்கி அரைத்துக், கரைத்து, நல்லெண்ணை விட்டுக், காய்ச்சிப், பதத்தில் வடித்துப் பூசவும்; முடங்கின வாதமும் வலியும் தீரும்!

## 133. வாதத்திற்குப் பூச்சு

நொச்சி இலையும், மஞ்சளுமாய்க் கூட்டிக் காடித் தண்ணீரில் அரைத்து, உலர உலரப் பூசவும்.

பூச்சு — கோழிமுட்டை 3
கடுக்காய் 9
எருக்கிலைப்பால்
ஊமத்தைச் சாறு

விட்டரைத்து, முதுகில் பூசவும். வாதம் தீரும்!

## 134. படல் காயத்திற்கு

கடல் நுரை, முலைப்பாலில் அரைத்துத் தடவவும்.

கருவேலம்பட்டை கூட்டி அரைத்துப் போடக் காயம் தீரும்

## 135. கண்ணுக்கு நெய்

அதிமதுரம்
கோரோசனை
குங்குமப்பூ
ஏலத்திரி
நற்சீரகம்

இவை வகைக்கு ஒரு கழஞ்சு,

இஞ்சி நீர் பலம் 3
கொடுப்பை வேர் பலம் 1
சிறுகீரை வேர் பலம் 1

இந்த மருந்தெல்லாம் பசுவின் பாலில் அரைத்துப் பசுவின் நெய் ஆழாக்கு ஊற்றிக் காய்ச்சி, உருகிற பதத்தில் வாங்கி வைத்துக் கொண்டு, கண்ணிலிறக்கவும். கண்ணில் வியாதி மெந்தீரும்!

## 136. கண்ணிற்குக் களிம்பு

சாதிப்பத்திரி
வாய்விளங்கம்
இலவங்கம்
கற்பூரம்
கிராம்பு
மாயக்காய்
குராச்சி

இந்த மருந்தெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து, வடிகொண்டு, பசுவின் வெண்ணையில் சாலித்துக் குழம்பாக்கி எடுத்துக், கண்ணி விடக் கண்ணிலுண்டான வியாதியெல்லாம் தீரும்!

## 137. கண்ணில் பூவிற்கும் சதைக்கும் குளிகை

தேற்றாவிரை, வெள்ளைக்காய், கலத்தின் வேர், சமுத்திரப் பச்சை - பலமெடை எடுத்துக் கயிறுபிடித்து, நிழலிலுலர்த்தி, உமிநீரிலரைத்துக் கண்ணிலிடப் பூ மாறும்!

## 138. கண்ணில் சதைக்குக் குளிகை

கோரோசனையும், கோஷ்டமும், புங்கம்பட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறுபிடித்து நிழலி லுலர்த்தி, முலைப்பாலி லரைத்துக் கண்ணிலிடச் சதை மாறும்!

வேறு

## 139. கண்ணில் சதைக்கு மருந்து

தேத்திப்பூவும், கவிரத்தின் பண்ணையும், துளசிக்கோகுப்ளப ஈருள்ளி, நற்சீரகம், சரி எடை எடுத்து, வாழையிலை பொதிந்து, வேதுவைச் சாம்பலில் பொதிந்து, வாழை இலை மெரிஞ்சால்

எடுத்துக் கண்ணில் தாரை ஒழுகப் பிழிந்து, நீரெடுத்து ஒழுக்கவும்.
கண்ணில் நோவு, படலம், கண் கடிக்கிறது, பீளை விழுகிறதும் தீரும்!

## 140. கண்ணோவிற்கு

சமுத்திரவேலிப் பச்சை வெள்ளத்தி லரைத்துப் பூசக் கண் நோவு தீரும்!

## 141. கண்ணிற்கு ரத்தினாதிக் குளிகை

பொன்
வெள்ளி
பவழம்
செம்பு
ஈயம்
முத்து
புலிநகம்
மாட்டெலும்பு
கலங்கொம்பு
துத்தம்
சாதிலிங்கம்
கற்பூரம்
பொன்னாங்கண்ணி வேர்
சமுத்திரப்பழம்
நீர்க்கிழங்கு
துருசு
கிராம்பு வித்தி

இவை சமன்கொண்டு, எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு பிடித்து, நிழலிலுலர்த்தி, முலைப் பாலிலுறைத்திடக் கண்ணுள்ள நோவு, படலங்காயம், பலவியாதி தீரும்!

## 142. கண்ணீற்குக் குளிகை

### கவி

சந்தனம் தேவ தாரம்
தன்னிடை காவி துத்தம்
வந்த துரிசி மொட்டு
வடித்தபொன் மிளகும் கூட்டி
நந்தியா வட்டைச் சாற்றை
நளினமாய் விட்ட ரைத்து
அத்தமாய்க் கயிறு செய்திட
ஆதித்தன் சுடர்போ லாமே!

1. சந்தன மரத்துச் சந்தனம்
காவி மண்
கோலரக்கு
சமுத்திரவேதி
கல்பிச்சகமொட்டு

இவை சமன்கொண்டு முலைப்பாலி லரைத்துக், கயிறு பிடித்து, நிழலிலுணர்த்தி, முலைப்பாலி லெழுதக் கண்ணோவும், பூவும், வெள்ளியுந், திசை பார்க்கிறதும், புகைச்சலும் திரும்!

2. பசுவின் பாலும்
சந்தனமும்
பளிங்கிமுத்து
இந்துப்பு
மனோசிலை
மஞ்சள்
மிளகு
கோழிமுட்டைத்தோடு
ஆமையோடு
கவடி
ஆனைப்பல்

சலங்கொம்பு
கடல் நுரை
செம்புப்பொடி
துத்தம்
கழுதைப்பால்

இவை சமன் கொண்டு, நார்த்தங்காய்ச் சாற்றில் அரைத்துக் கயிறு பிடித்து, நிழலிலுணர்த்தி, முலைப் பாலிலும், கருக்கின வெள்ளத்திலும் கண்ணிலெழுதக் கண்வியாதியெல்லாந் தீரும்.

## 142. கண்ணிற்குப் பொடி

| | |
|---|---|
| துருசு பண எடை | 3 |
| மிளகு பண எடை | ½ |
| சுக்கு பண எடை | 4 |
| கற்பூரம் பலம் | 1 |
| வெளுபீங்கான் கறுப்புக்கூடாதே பண எடை | 8 |
| புனுகு பண எடை | 2 |

இவை எல்லாம் நன்றாய் வடிய அரைத்துப் பொடியாக்கி, வடிகொண்டு, கண்ணிலிட, வெள்ளைக்காயம் இவையெல்லாம் தீரும்.

## 143. கண்ணிற்குக் குளிகை

துருசு
துத்தம்
மிளகு
கற்பூரம்
சுக்கு
திப்பிலி
கடுக்காய்
பிதுருமணி(?)

இவையொன்று 3 பணம் தூக்கம் பண்ணித்,

தேற்றம்
ஆனைப்பல்
குதிரைப்பல்
கோழிநெஞ்சின் முட்டெலும்பு

இவை ஒன்றொன்று பண எடை 4 எடுத்தெல்லாங் கூட்டி,

முதலாவது, பனைக்கிழங்கு நீரிலரைத்து,

இரண்டாவது, முலைப்பாலில்,

மூன்றாவது, புளியிலை நரம்பு இடித்துப் பிழிந்து உரித்து, அந்நீரில்,

நான்காவது, நார்த்தங்காய் நீரில்,

ஐந்தாவது, கொடுப்பை வேரிடித்துப் பிசைந்து, இறுத்து, அந்நீரில் அரைத்து உலர்த்திக் கொண்டு, முலைப்பாலி லாகுதல். பச்சை வெள்ளத்திலாகுதல் இட,

புல்லம் படலம்,
தேசகரணம்,
பொளிவாதம்,
நீரொழுகுகிறது,
பூவும் தீரும்!

## 144. கண்ணீற்குத் தாரை

மஞ்சிட்டிப் பொடி
திப்பிலி
இருவேலி
விலாமிச்சம்
மரமஞ்சள்

தேவதாரம்
அதிமதுரம்
முந்திரிகைப் பழம்
கோலரக்கு
தேற்றாம்பால்
சந்தனம்
அரைத்த சந்தனம்

வகைக்கு பலம் 1; பச்சோந்தித் தோல் பலம் 1 எல்லாம் சிதைத்து 3¾ வெள்ளத்தில் பாதி சுருக்கின வெள்ளங் கூடகூட்டிக்கொண்டு வெந்து 1¼ வெள்ளத்தில், பலா இலை எடுத்து அரிந்து, ஒடு கண்ணில் 51 துளி ஒழுக்க, இரத்தப்படல், பூவு, சதை, வெள்ளை காயம் இவை எல்லாந் தீரும்!

## 145. ஆனந்த வாயுவிற்கு

1. நல்லவேளை வேரும், தூரும் பிடுங்கிக் காடிவிட்டு இடித்துக், கிழிகட்டி, ஒத்தலிடவும்!

2. கழற்சிக்கொடி வேர் துவைத்து, எண்ணையில் கலக்கிச் சூரியப்புடம் வைத்து, இரண்டு காசு எடை கொடுக்கவும்; வீக்கத்திலும் தடவவும்

### வேறு

3. கழற்சிக்கொடிக் கிழங்கு நாலு காசு எடை அரைத்து, ஒரு நாளைக்குக் கொடுக்கவும்.

4. வெள்ளாட்டின் புழுக்கை
வெள்ளுள்ளி
சறுகு
செந்தவிடு
வேப்பம் பிண்ணாக்கு

கூட்டிப் புகை காட்டவும்.

நோய் நிற்குமிடத்தில், வேப்பெண்ணை ஆமணக் கெண்ணையும் தடவிப் புகை காட்டவும்.

5. வெள்ளுள்ளி பலம் 1 அரைத்து, சீலையிலூரட்டி, ஆமணக் கெண்ணை விளக்கேற்றிச், சீலையில் மைப்பற்ற வாட்டித் தைலம் வடித்து, அந்தத் தைலத்தில் இரண்டு . . . . அளவு சமுத்திராப் பளம் பொடி செய்து போட்டுக் கொடுக்கவும்.

மாறாத பிரமேகம் 3 நாளைக்குள்ளே மாறும்! கைகண்டது!

## 146. குளிர் சுரத்திற்கு

ஆடாதோடைக் குடிநீர்
ஆடாதோடை
பேய்ப் புடல்
சீந்தித் தண்டு
முத்தக்காசு
நீர்முள்ளிவேர்
கொடுப்பை
நன்னாரி
வெட்பாலை

சரியெடை கொண்டு, இருநாழித் தண்ணீர்விட்டு, ஆழாக்காக இறக்கி, அரைச்சிரங்கை கொடுக்கவும்; சுரம் 64ம் திரும்!

சந்தனம்
சுக்கு
கோஷ்டம்
தான்றிக்காய்
மிளகு
இருவேலி

வகைக்குப் பலம் 1 மூன்றொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

குளிர்சுரம் தீரும்!

## 147. ஆனந்தவயிரவன் சந்தனாதிக் குளிகை

கடுகு ரோகிணி
பொன்னரிதாரம்
கருஞ்சீரகம்
நற்சீரகம்
திரிகடுகு
அரத்தை
....ச்சினாவி
கந்தம்
தேவதாரம்
அதிமதுரம்
வெண்காரம்
விளாவருசி
சந்தனம்
செஞ்சந்தனம்
வசம்பு
கன்னார்
சாத்திரபேதி
சாதிலிங்கம்
களிப்பாக்கு

வகைக்குக் கழஞ்சு-1; அவின் பலம் 2, முருக்கிலைச் சாற்றில் ஒரு நாளரைத்து வைக்கவும்.

மறுநாள், கையாந்தகரைச் சாற்றில் அரைக்கவும்.

இலவங்கொட்டைப் பிரமாண முண்டை செய்து, நிழலி லுணர்த்தி, ரத்தம் சீதம், கடுப்பிற்குப், பெருஞ்சூரைச் சாற்றில் தேங்காய்ப் பால் கூட்டி இடுவது.

பெருங்கழிச்சல், பொருமல், அசீரணத்திற்கும், செறியாமைக்கும் நொச்சியிலைச் சாற்றிலிடுவது.

வாத உதிரத்திற்குத் தேன் கூட்டியிடுவது.

வாதக் குன்மத்திற்கு வேப்பெண்ணையிலிடுவது.

பித்தக் குன்மத்திற்குத் தேனிலிடுவது.

சிலேஷ்மக் குன்மத்திற்கு முருங்கைப்பட்டைச் சாற்றிலிடுவது

பெருவயிற்றிற்குக் கோமயத்திலிடுவது.

உதிரவாதத்திற்கு ஆமணக்கெண்ணையிலிடுவது.

தண்ணீர்த் தவனத்திற்குக், கொடிக் கச்சிச் சாற்றிலிடுவது.

நெஞ்சு கிரேசனத்திற்குப் பிராம் பட்டைச் சாற்றிலிடுவது.

நீர்க்கடுப்பிற்கு ஆலவிரைச் சாற்றிலிடுவது.

ஈளைக்குத் தேனும் வேப்பிலைச் சாறும் கூட்டியிடுவது.

சுரத்திற்குச் சீனியிலிடுவது.

பெரும்பாட்டிற்குத், தென்னம்பூ விரியிலிடுவது.

நீர்ச் செறிப்பிற்கு; இளநீரிலிடுவது.

நானாத்திண்ணத்திற்குத், தவிட்டாமிலைச் சாற்றிலிடுவது.

கோரைவிப்புருதிக் கடுப்பிற்கு, மதுக்காரைப் பழச்சாற்றி விடுவது.

கல்லடைப்பிற்கு, முடக்கொற்றான் சாற்றிலிடுவது.

....றுவாங்க வாயுவிற்கு, முலைப்பாலிலிடுவது.

வீக்கத்திற்கு, வடிபுளியிலிடுவது.

அசீரணத்திற்கு, இலைக் கள்ளிச் சாற்றிலிடுவது.

மந்தச் சுரத்திற்கு, முருங்கை இலைச் சாற்றிலிடுவது.

பத்தியம் காக்கவும்.

## 148. ஆனந்த வயிரவன் குளிகை

ரசம்
கந்தம்
வெள்ளைப்பாஷாணம்
திரிகடுகு
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
சாதிப்பத்திரி

வகைக்குப் பலம் 1, கையாந்தகரைச் சாறுவிட்டரைத்து, வெந்தய மளவு உருட்டி, நிழலிலுணர்த்தி, ஒரு திப்பிலி, இரண்டு கிராம்பு வெதுப்பிப் பொடி செய்து. ஒரு குளிகை கூட்டி, வெந்நீரில் கொடுக்க சன்னிதோஷம், வலி, குளிர், நடுக்கம் இவை தீரும்!

பாஷாணம், அழிஞ்சிச் சாறில் ஊறப்போடச் சுத்தியாம்.

இப்படி ஊறப்போட்டுக் கூட்டிக் கொள்ளவும்.

## 149 ஆறதா புண்ணிற்கு

1. வெள்ளுள்ளி
வசம்பு
ஊமத்தம் வேர்

இவை சமன் கூட்டி, அரைத்து, நல்வெண்ணையில் வெந்து, சிவந்த பருவத்திலிறக்கிப் புண்ணிலிடவு மாறும்!

2. ஆறாத புண்ணிற்கு, நரையில்லாத மனிதனெலும்பு, துத்தம், துருசு, எலுமிச்சம் சாறு வார்த்து அரைத்துப், பிறகு பசுவின் வெண்ணையிலரைத்துப் புண்ணில் போடவும்; பச்சைக் கழுதை லத்தி பிழிந்து, சிரங்கைச் சாறு மூன்று நாள் கொடுக்கவும்; உப்பு, புளி தவிர்க்கவும்.

புண்ணுந் தீரும்; கைகண்டது!

## 150. ஆரோக்கிய சூரணம்

சதகுப்பை
கருஞ்சீரகம்
நற்சீரகம்
இலவங்கப்பட்டை
கருவைப்பட்டை
மகிழம் பூ
மகிழம் விரை
அதிமதுரம்

வகைக்குக் கழஞ்சு 1,

| | |
|---|---|
| கொத்தமல்லி | பலம் 8 |
| வெள்ளைக் கற்கண்டு | பலம் 16 |

இவையெல்லா மிடித்து, வஸ்திரகாயஞ் செய்து, இரண்டு வேளையும் வெருகடித் தூள் தின்றுவரத், திரும் வியாதி! ஈரல் குலையைப் பலப்படுத்தும்! தலையெரிவுகளை மட்டுக்கட்டும்! நெஞ்சு மிருது வாகும்! இருதயம் அசுத்தங்களைத் தள்ளும்! மொக்கைப் பலப்படுத்தும்! கண்ணில் நீர் விழுந்தால் நிறுத்தும்! கண்ணிற்குப் பிரகாசம் கொடுக்கும்! அசீரணத்தைச் செரிப்பிவிக்கும்! நித்திரை வரப் பண்ணும்! வயிற்றுப் பூச்சிகளைத் தள்ளும்! இடுப்பு நோக்காட்டை நிறுத்தும்! கல்லடைப்பைத் தள்ளும்! தொண்டை விஷங்களைத் தள்ளும்! நல்ல ஆவிவரப் பண்ணும்! கழுத்தில் வருகிற பொல்லாப்பை விடுவிக்கும்! பசியெடுக்கும்! சரீரத்திலுள்ள கட்டுகளை விடுவிக்கும்!

கைகண்டது!

## 151. ஆசனக் கடுப்பிற்கு

பெருச்சாளித்தோல் உலர்த்திப் பொடி செய்து, ஆசனத்தில் புகைபிடிக்கத் தீரும்!

நன்று!

## 152. ஆசன வாயுவிற்கு

வலதுபுறம் வந்தால் இடதுபுறத்தில், புறங்காலில், வெள்ளையும் கறுப்பும் கூடினவிடத்தில், சூடுபோட நிற்கும்!

நன்று!

## 153. ஆனந்தவாயு ஏறுவாதம், குடல்வாதத்திற்கு

ஆமணக்குவேர்
கழற்சி வேர்
சாரணை வேர்
முடக்கொற்றான் வேர்

இவையும் கசாகூளமாக அவித்துக்கொடுக்க, எந்த வாயுவும் தீரும்!

கைகண்டது.

## 154. சன்னிக்கு ஆனந்த வயிரவன் பாட்டு

துத்தம் துருசு கந்தகமும்
துய்ய நாவி மனோசிலையும்
சுத்தம் சூதம் ரோகிணியும்
சொன்னேன் சமனாய்த் தான்கொண்டு
முத்தித் துவண்ட பேய்க்கரும்பை
முறுக்கிப் பிழிந்த சாறதனால்
சித்த ரைத்து உளுந்ததுபோல்
செய்தே உலர்த்தி நிழலுலர்த்தி
செய்தே வாத சன்னிக்குத்
திறமாய் ஆனந்த வயிரவனைக்
காற்றே படாமல் இருந்துகொண்டு
கருத்தாய் இஞ்சிச் சாறதனால்

பார்த்தோர் உருண்டை தன்னைவிடப்
பதரும் சன்னிப் பதினெட்டு
மூத்தோர் சொன்ன முறைப்படியே
முடுகும் சன்னி பறந்திடுமே!

## 155. ஆண்பிண்ணை கோபம் அமர

சிறுநீரும், நாயுருவிச்சாறும், நல்லெண்ணையில் காய்ச்சி முழுகக் கோபமமரும்!

## 156. குழந்தைகள் உள்ரோகத்திற்குக் குளிகை

சிவந்த கன்னாரம்
நீலக்கருடப் பச்சை
பால்கருடப் பச்சை
மாசக்காய்
சாதிக்காய்

இவை சமன்கொண்டு சுருக்கிக்கொண்டு, சாகத்திலரைத்து மஞ்சாடியளவு உருட்டி, நிழலிலுணர்த்திக் கொண்டு, சுகமாயிருக்கிற குழந்தைகளுக்கு வெந்நீரில் கொடுக்கவும்.

உள்ளிப் ரோகம் முற்றிக் கழிச்சல் உண்டானால், கடுக்காய் நீரில் கொடுக்க வயிறு கழியும்; கழிந்தால் முறிவு, பருத்திப் பிஞ்சில் கொடுக்கவும்; உள்ரோகம் தீரும்!

## 156. குழந்தைகள், உச்சியும் நெஞ்சும் குளிர்ந்திருக்கு மதற்கு

துத்தம், துருசு அனலிலே வெதுப்பி, வெள்ளைக் குங்கிலியம், கஸ்தூரி மஞ்சள், முராரி சிங்கு, காசுக்கட்டி, களிப்பாக்கு, கறுப்பு வெற்றிலை முறித்து, இவையெல்லாம் சமன்கூட்டி, அரைத்துப் புண்ணுக்குத் தடவக், குணமாம்!

## 157. முலைக்குத்திற்கு

நிலைப்பனைக்கிழங்கு முலைப்பால் வார்த்து அரைத்துப் பூச உடனே தீரும்!

## 158. மாலைக் கண்ணிற்கு

திப்பிலியைப் பூசனி இலைச்சாற்றில் உறைத்துப் போட ஒளிவரும்!

## 159. சர்வ கிரந்திக்கு

| | | |
|---|---|---|
| சித்திர மூலம் வராகனெடை | | 4 |
| சாதிக்காய் வராகனெடை | | 4 |
| வெள்ளெருக்கு வராகனெடை | | 4 |
| சங்கன் வேர் வராகனெடை | | 4 |
| எள்ளு | பலம் | 4 |
| சேங்கொட்டை | பலம் | 10 |
| கருப்புக்கட்டி | பலம் | 4 |

இவையெல்லாம் ஒன்றாய் லேகியம் பண்ணிச் சாப்பிடவும்.

ஏழுநாள் சாப்பிட்டு, பதிமூன்றுநாள் வெந்நீரும் சாதமும் சாப்பிட்டுத் தலைக்குத் தண்ணீர் விடவும்.

## 160. உஷ்ணத்திற்கு

சித்திரமூலம்
திப்பிலி
மிளகு
சுக்கு
கடுக்காய்

சீரகம்
ஓமம்
பெருங்காயம்
லவணம்
விடரபவம்(?)

சமன்கூட்டிச் சூரணம் பண்ணி, வெந்நீரில் கொள்ளத் தீரும்!

கைகண்டது.

## 161. காந்த ரசப் பற்பம்

கந்தகம்
அரிதாரம்
மனோசிலை
காந்தம்
சூடம்
கற்பூரம்
ரசம்
சாதிலிங்கம்
சுக்கு
கருஞ்சீரகம்

வகைக்கு வராகனெடை 1, வெள்ளைப் பாஷாணம் மஞ்சாடி 1. சரக்கெல்லாம் சுத்தி செய்து, மேனிச்சாறிலாவது, சுத்த ஜலத்திலாவது, நாலுஜாம மரைத்து, மஞ்சாடி பிரமாண முருண்டை செய்து, நிழலிலுலர்த்தி, ஓட்டில் வைத்துச் சீலை செய்து தாழிக்குள் மணலிலிட்டு ஒரு சாம மெரிஎத்து எடுத்துத் தேனில் கொடுக்கவும்.

குட்டம், சொறிசிரங்கு, பரங்கிப் புண், சூலை எல்லாம் தீரும்!

பத்தியம்—பாலும் சோறும் சாப்பிடவும்.

## 162. சன்னிக்கு வேட்டு மாரணக் குளிகை

காந்தம்
நாபி
திரிகடுகு
திரிபாலை
ஓமம்
சீனாக்காரம்
கோரோசனை

இவை சமன்கூட்டி, இஞ்சிச் சாற்றிலரைத்துச், சிறு பயறுப் பிரமாண முருண்டை செய்து, தேனிலிடத் தீரும்!

## 163. வெள்ளைக்கு

இரசகற்பூரம் வராகனெடை 2, வெள்ளைக் குங்கிலியம் வராகனெடை 2, கற்கண்டு வராகனெடை 5, கந்தகம் வராகனெடை 2 கூட்டியரைத்து, ஆறு பொட்டணம் கட்டி, வேளைக்கொரு பொட்டணமாக, மூன்று நாள் ஆறு பொழுது சாப்பிடவும்; வெள்ளை தீரும்!

பத்தியமிருக்கவும்.

## 164. கிரந்திப் புண்ணுக்கு

| | | |
|---|---|---|
| ரசகற்பூரம் | வராகனெடை | 1 |
| வேப்பம் கொழுந்து | பலம் | ½ |
| வெல்லம் | பலம் | ½ |

முன் சொல்லிய கற்பூரத்தை முலைப்பாலிலரைத்துப், பின்சொல்லிய வேப்பம் கொழுந்தைந் போட்டு, இரண்டையு மரைத்துப், பிற்பாடு, வெல்லத்தைப் போட்டு அரைத்து, 14 உண்டையாகப் பண்ணி, ஏழுநாள் பதினான்கு உருண்டையும் சாப்பிட்டு, ஏழு

நாளும் பத்தியமிருந்து, 15ம் நாள் தலைமுழுகிச், சிறுநீரைச் சாறுகுடித்துப், பிற்பாடு மிளகுநீரும் சாதமும் சாப்பிடக் கற்பூர வேகந் தீரும்!

மறுபத்தியம், உப்பு வறுத்துக் கூட்டவும்.

சகலப் புண் கிரந்தி, கூச்சல் தீரும்!

## 165. நளிரு

| | | |
|---|---|---|
| கள்ளிக் கொழுந்து | பலம் | $\frac{1}{2}$ |
| உள்ளி | பலம் | $\frac{1}{4}$ |
| மிளகு | பலம் | $\frac{1}{4}$ |
| வெற்றிலை | | 3 |

இதை அரைத்து, நளிரு வரும்போது மூன்றுநாள் கொடுக்கவும் தீரும்!

(நளிர்-குளிர்சுரம்)

## 166. மாட்டுப்பிணிக்கு

உதிரமடைப்பன் செய்குணம்:-

நாலு நடையு முடைந்து பதறும்! கண் பூளை சாறும்! நீர் விடுகில் குன்றி நிற்கும்! மயிர் சிறுக்கும்! வாயாய் நுரை தள்ளும்!

இதற்கு மருந்து:-

நெய்க்கொட்டான் பழம், கோழிக்காரம், காடித் தெளிவிலே கலக்கிக் கொடுக்கத் தீரும்!

கைகண்டது!

## 167. குளிர்தோஷத்திற்கு

இரண்டு கழற்சிக்காய் வாங்கி, உள்பருப்பை எடுத்துப் போட்டு, ஒவ்வொரு கழற்சிக்கும், கழஞ்சு ரசம் விட்டு, மெழுகினாலடைத்துக், கருப்பு நூல், சிவப்பு நூல், மஞ்சள் நூல், வெள்ளை நூல் நாலுவகை நூலும் சென்று தாயித்தாய்ப் பண்ணிக் கட்டவும்.

## 168. பேதிக்கு

நல்லெண்ணெயில் எலிப்பிழுக்கையைத் உறைத்துத் தொப்புளில் தடவப் பேதி எடுக்கும்! துடைக்கப் பேதி நிற்கும்!

## 169. முகத்தில் விழுந்த கறுப்பு வாங்க

நத்தைச்சூரி வேர் பிடுங்கிப், பசுவின் பாலில் மூன்று நாளரைத்துக் கொடுக்கத் தீரும்!

## 170. கீரிப்பூச்சிக்கு

தேவதார முக்கழஞ்சு கொண்டு வந்து தட்டித் தண்ணீர்விட்டுக், காய்ச்சிக் கொடுக்கக் கூட்டோடு பூச்சி விழும்!

இது கைகண்டது!

## 171. வயிற்று வலிக்கு

பிரண்டையை அரைத்து, ஒரு பாக்களவு தேனில் கொள்ள, வயிற்றுவலி தீரும்!

## 172. எல்லா நஞ்சுக்கும் மாற்று

சிறுகீரையும், செந்நாயுருவி சமூலம் பிடுங்கிப் பச்சரிசிகூடக் கஞ்சி வைத்துத், தண்ணீர் கொடுக்க சகல விஷ நஞ்சும் முறியும்!

## 173. இராஜ சந்திரசேகரக் குளிகை

கோரோசனை, சாதிலிங்கம், சூடான கற்பூரம் - வகைக்குப் பலம் 1, முலைப்பாலிலரைத்து, உளுந்துப் பிரமாண முண்டை பண்ணி, நிழலிலுணர்த்தி, முலைப்பாலில் கொடுக்கச் சுரவகை தோஷமெல்லாம் தீரும்!

## 174. தண்ணீர்த் தாகத்திற்கு

அத்திப்பிஞ்சு தட்டிச் சாறு கொண்டு, இந்தச் சாற்றில், மணிக் காரம், நெல்லிக்காரம், ஏலம், இவை சமன் அரைத்து, நெய்யில் வெந்து, சீனி சேர்த்துத் தின்னவும்.

## 175. குழந்தைகள் கன்னபாசிக்குக் குணங்கள்

### கவி

உச்சி நெஞ்சம் குளிர்ந்திருக்கும்
உண்ணும் பாலும் தங்காது
பச்சை நிறமாய் வயிறுகழியும்
பாகம் போலச் சிறிதாகும்
எச்சம் இருக்கும் எழுந்திருக்கும்
எடுத்துக் குடிக்கும் தண்ணீரைக்
கச்சாங் கருந்து முலைமடவீர்
கன்ன பாசிக் குணமிதுவே!

### இதற்கு மருந்து

ஒருபிடி பொன்னாவரை
ஒருபிடி கொளஞ்சி
ஒருபிடி வெள்ளுள்ளி

இந்த மூன்று மருந்தும் சமன்கூட்டி, இடித்து, நாலுரி வெள்ளத்தில் வெந்து, உரியாக்கிக் கொடுக்கவும்; கன்னபாசி தீரும்!

### 176. குழந்தைகள் கணைக்கு மருந்து

மக்கிப் பூ
கிராம்பு
வசுவாசி
சாதிக்காய்
நற்சிரகம்
மாயக்காய்
கருவைப்பட்டை
கொத்தம்பால்
கடுக்காய்
அதிமதுரம்
ஈருள்ளி
மாதுளம் பூ

சமன்கொண்டு இடித்துக் கஷாயமிட்டுக் கொள்ளவும்; கணை யெட்டும் தீரும்!

(மாயக்காய்-மாசக்காய்)

### 177. வெள்ளெழுத்திற்கு

பருத்தி பழுத்த இலையைக் கையில் வைத்துக் கசக்கிக் கண்ணில் பிழிய, வெள்ளெழுத்து மாறும்!

### 178. கண் கழுவ வெள்ளம்

நெல்லிகா யுழக்கு, கடுக்காய் 15, தான்றிக்காய் 15 துருவு போக்கி, ஒரு கிழிகட்டி, புளியிலையு மொரு கிழிகட்டி, ஒரு

பானையில், நாழி வெள்ளம் விட்டு, இந்த இரண்டு கிழியும் கூடப் போட்டு, வெந்து, வைத்திருந்து, இரண்டு நேரமும் கண்ணைக் கழுவவும் நன்று!

(கிழிகட்டி-ஒரு துணியில் பொருளை வைத்து, துணியின் எல்லாப் பக்கங்களையும் கூட்டித் தூக்கிப்பிடித்தல்)

## 179. வெள்ளை படுகிறதற்கு

ஈருள்ளி மூன்றுபல மிடித்துச் சாறெடுத்து, உள்ளுக்குக் கொடுக்கவும்; வெள்ளை படுகிறது மாறும்!

## 180. நீரழிவிற்கு

1. நெல்லிக்காயும், நல்ல களிப்பாக்கு மரைத்துப், பசுவின் பாலில் நீர் பாதியாகக் குறுக்கிக் காய்ச்சிக் குடிக்கவும்; தீரும்! வலம் சலம் சிறுத்து விழுந்தால், விலாமிச்சவேர் ஒரு பாக்களவு அரைத்து, நல்லெண்ணையில் கொடுக்க நன்றாய்விடும்!

(வலம் = மலம்)

2. பூவரசின் தோல் உலர்த்திப், பொடி செய்து தேனில் குழைத்து, ஒரு சுண்டைக்காயளவு விழுங்க, நீரிழிவு நிற்கும்!

நீர் திரட்சியாய்ப் போகின்றதற்குக் கோழித்தோ லறுத்து, அந்தத் தோலை வெய்யிலில் உலர்த்திப், பொடி செய்து, பன்னீரில் குழைத்து, மூன்றுநாள் ஆறுபொழுது தின்னச், சிறுநீர் திரட்சி யாய்ப் போகிறது நிற்கும்!

3. பழுப்புப் பலா இலை உலர்த்திப், பொடி செய்து, தேனில் குழைத்துத் தின்ன தீரும்!

4. கற்றாழைவேர், வடக்கே போகின்ற வேர், கொண்டு வந்து, அரைத்து, ஒரு எலுமிச்சங்காயளவு நல்ல சந்தனமும் அதிலொக்க

வைத்து அரைத்துப் பசுவின் பாலில் குழப்பிக் குடிக்க, நீரழிவு நிற்கும்!

## 181. கல்லடைப்பிற்கு

நல்ல சுர இலை வாட்டிப் பிழிந்து, ஒரு காசளவு வெங்காரமும் பொரித்துச் சர்க்கரையும் கூட்டிக் குடிக்கக் கல்லு விழும்!

## 182. நீரடைப்பிற்கு

ஆட்டின் பிழுக்கை கொண்டுவந்து, ஆண்பிள்ளைகள் சிறு நீரில் கலக்கி, வெந்து, அடிவயிற்றியில் பூச, நீர் விழும்!

## 183. சிறுநீர் நிரம்பப் போகின்றதற்கு

பச்சைப் பலா இலை உலர்த்திப், பொடி செய்து, வட்டத் துத்தி இலைச்சாறு யெடுத்து, ஈருள்ளி சுட்டுப் பன்றிக் கொழுப்புந் தேங்கா யெண்ணையும், கோழிமுட்டை வெள்ளைக்கரு கற்றாழை இலையு மெல்லாம் சமன் கொண்டு இடித்துக் காய்ச்சிப் பருவத்தில் எடுத்து வைத்துக்கொண்டு, அம்மருந்துக் கொட்டைப் பொடித்து, மேம்பொடி இட்டுத் தின்ன, சிறுநீர் மெத்தப் போகின்றது நிற்கும்!

கைகண்டது!

## 184. பித்தம், தலை சுற்றலுக்கு

நாயுருவி இலை அரைத்து வெந்நீரில் கொடுக்கப், பித்தம், தலைசுற்றல், கிறுகிறுப்பு இவைகளெல்லாந் தீரும்!

## 185. காமாலைக்கு

தேங்காய்ப்பால் நாழி பிழிந்து, கருங்குங்கிலியம் பொடி செய்து போட்டு, மூன்று நாள் கொடுக்கக் காமாலை தீரும்!

## 186. மஞ்சள் காமாலைக்கும் பாண்டு ரோகத்திற்கும்

குப்பைமேனி வேரு ஒரு கூறு, வெள்ளைச் சாரணை வேர் ஒரு கூறும், இது இரண்டும் பசுவின் பாலில் அரைத்து, மூன்று நாள் அந்தி சந்தி கொடுக்கவும் தீரும்!

## 187. மஞ்சள் காமாலைக்கு

பருத்தியிலை ஒரு பிடி இடித்து, அரைத்துப், பசுவின் பாலில் கொடுக்கவும்.

இதற்குக்குறி, நாக்கு முதடும் கடுக்கும்!

இது கண்டால் மூன்று சந்தி கொடுக்கவும் மஞ்சள் காமாலை தீரும்!

## 188. பிள்ளைகள் சத்து மறிக்க

கோரோசனை முலைப்பாலில் அரைத்துத், தாய் முலைக் கண்ணிலிட்டு, முலை கொடுக்கச், சத்தில் மாறும்!

கைகண்டது!

## 189. பித்தத்திற்குப் பொடி

நற்சீரகமும், சமுத்திராப்பழமும், கற்கண்டும் பொடி செய்து தின்னப் பித்தம் தீரும்!

## 190. கண் புழுவிற்கு

ஆதளைப்பாலைச் சீலையி லூட்டி, உலர்த்தி, எண்ணையில் நனைத்து ஒத்தவும் தீரும்!

## 191. சோகைக்கு மருந்து

நாயுருவி இலையைக் கறுக வறுத்து, மஞ்சள் வேர் ஒரு பிடி, மிளகு ஒரு பிடி, அரப்பொடி ஒரு பிடி, மஞ்சள் வேர் பொடி செய்து, இவை மூன்றும் சிவக்க வறுத்துப் பொடி செய்து, கூட்டித் தின்னச் சோகை, பித்தம், பாண்டுரோகம் இவையெல்லாம் தீரும்!

கை கண்டது.

## 192. குளிர் தோஷத்திற்கு

இரண்டு கழற்சிக்காய் வாங்கி, உள் பருப்பை எடுத்துப் போட்டு, ஒவ்வொரு கழற்சிக்கு ஒரு கழஞ்சு சீரகம் விட்டு, மெழுகினாலடைத்துக், கறுப்பு நூல், சிவப்பு நூல், மஞ்சள் நூல், வெள்ளை நூல், நாலுவகை நூலும் சேர்த்துத், தாயத்துப் போலத் தைத்துத் தூபங்கொடுத்துத் தாய் கழுத்திலும், பிள்ளை கழுத்திலும் கட்டவும்.

பசலைவேர் அரைத்து, ஆமணக்கெண்ணையில் கலந்து, முலைப் பாலில் புகட்டவும்; குளிர்தோஷம் பொறுக்கவும்.

## 193. சிரங்கிற்கு

வாகைப்பட்டை இடித்து, வஸ்திர காயம் பண்ணி, உழக்கு வேப்பெண்ணையில் வேகவைத்து இடவும்.

இந்த எண்ணை, காதில் புகுந்த ஈக்குமாகும்.

## 194. தலை நோவுக்கு

தேற்றான் விரை சத்து, முலைப் பாலிலரைத்து, நச்யம் பண்ணத், தலை நோய் தீரும்!

(நச்யம் பண்ண - நுகர்ந்து பார்க்க)

## 195. ஈளைக்கு

1. முதலைக் காஷ்டம் பாக்களவு, எருமை மோரில் கொடுக்கவும்.

2. இலுப்பைக் கட்டி தூள் பண்ணிச், சட்டியில் தண்ணீர் வார்த்து, வேடு கட்டி இந்தத் தூளை வைத்து மறுபடி சட்டியால் மூடியவித்து, இதில் இரண்டு மூன்று காசு எடை கொடுக்கவும்; தீரும்!

ஈளை கூட்டோடு விழும்!

தொண்டை வலித்தால், பச்சரிசியும், பச்சைப் பயறும் அவித்துக் கஞ்சி கொடுக்கவும்; நன்று!

## 196. குழந்தைகள் கணைக்கு மருந்து

மக்கிப்பூ
கிராம்பு
விசுவாசி
சாதிக்காய்
சீரகம்
மாசிக்காய்
கருவைப்பட்டை
கொத்தமல்லி
கடுக்காய்
ஈருள்ளி
மாதுளம் பூ

இவை சமன் கொண்டு இடித்துக் கஷாயமிட்டுக் கொடுக்கவும் கணையெட்டும் தீரும்!

## 197. சோகைக்கு மருந்து

நாயுருவி இலையைக் கறுக வறுத்து, மஞ்சள் வேர் பிடி 1, மிளகு பிடி 1, அரப்பொடி பிடி 1; மஞ்சள் வேர் பொடி செய்து இவை எல்லாம் சிவக்க வறுத்துப் பொடிபண்ணி, வெருகடித் தூள் தின்னச், சோகை, பித்த, பாண்டுவும் தீரும்!

கைகண்டது!

## 198. பித்தம், தலைசுற்றல், கிறுகிறுப்பிற்கு

நாயுருவி இலையை அரைத்து வெந்நீரில் கொடுக்கவும்; தீரும்!

## 199. காமாலைக்கு

தேங்காய்ப்பால் நாழியில், கருங்குங்குலியம் பொடி செய்து போட்டு, மூன்றுநாள் கொடுக்கக், காமாலை தீரும்!

## 200. பித்த வாயுவிற்கு

நற்சீரகம், தண்ணீரிலிட்டுக் காய்ச்சி, வெல்லம்போட்டுக் கொடுக்கவும் தீரும்!

## 201. வாயுவிற்கு பொடி

சுக்கு, மிளகு வெங்காயம், சமன் கொண்டு பொடி செய்து, வெருகடித்தூள் தின்னவும்; வாயு தீரும்!

## 202. வெந்த புண்ணிற்கு

" நெல்லிக்காய், மாதுளைத்தோடும் கறுக வறுத்து, முலைப் பாலில் அரைத்துக் குழம்பாக்கிப் பூசவும்; வெந்த ரணம் தீரும்!"

## 203. வெட்டுப்பட்ட புண்ணிற்கு

தும்பையிலை அரைத்து எண்ணையில் வேகவைத்து, மெழுமுப் பதத்தி லிறக்கிப் புண்ணில் போட, வெட்டுப்பட்ட புண் ஆறும்

## 204. வயிற்றுக் கடுப்பிற்கு

சாதிக்காய் 1 நெய்யில் போட்டுப் பொரித்து, அரைத்துத் தயிரில் குழைத்துத் தின்னவும்.

தாகமும் அமரும்; வயிற்றுக் கடுப்பு மாறும்!

## 205. மஞ்சள் சோகைக்கு

கோவை இலைச்சாறு, சிறு பயறு சமன்; சீனியும் குரையும் கூட்டிச் சிரங்கை கொடுக்கத் தீரும்!

## 206. புண்ணிற்குப் பகை

கந்தகம் பலம் 2, இரதம் பலம் 1, ஈயம் பலம் ¼ பொடித்துக் கொண்டு, மோரும் சோறும் கொடுத்து, இந்தப் புகை காட்டவும். பிறகு, குளித்துவரத் தீரும்!

## 207. கொள்ளைக் கழிச்சலுக்குப் பொடி

சாதிக்காய் 1½
கிராம்பு 20
ஓமம் பலம் 1
நெல்லிப்பருப்பு பலம் 1
பொரி அரிசி மாவு சிரங்கை 1
விஷக்கொத்துப் பொடி சிரங்கை 1

இந்த மருந்தெல்லாம் சூர்யப்புடம் வைத்து, இடித்துச் சூர்ணம் செய்து, வெருகடி, பசுவின் தயிரில் கொடுக்கவும்.

எந்தக் கழிச்சலும் மாறும்!

## 208. மேகம் 21க்குச் சம்பிரதாயச் சூரணம்

வெள்ளைச் சாரணைவேர் பசுவின் பாலில் அவித்து, உலர்த்திச், சூர்ணம் செய்து, தேன் சக்கரையில் குழப்பி, நெல்லிக் காயளவு, அந்தி சந்தி தின்றுவரவும்!

பத்தியம்.

மேகம் 21 தீரும்!

கைகண்டது.

## 209. பித்தம் கக்க

கடுக்காய்ப் பொடியும், சீனியும் கலந்து, வெந்நீரில் கலக்கிக் குடிக்கப் பித்தம் கழியும்!

## 210. எலிக்கடிக்கு

சிறுவிளா வேர் வடக்கே போன வேரை வெட்டி வந்து, பசுவின் பாலில், அத்தியிலைச் சாற்றில், பழந்தண்ணீரில் இவை கலந்து, அரைத்துக் கொடுக்கவும்!

அதன் பிறகு, இதற்கு எண்ணை

அரசம்பட்டையும், வேரும், வில்வவேர், அவுரி வேர், முருங்கை வேர், கருவேப்பம்வேர், குதிரைவாலிவேர், சாரணை வேர் இவை வகைக்குச் சமன்; உள்ளி, வசம்பு, கரும்சீரகம் சமன்கூட்டி இடித்து, நல்லெண்ணையில் காய்ச்சி, உள்ளுக்குக் கொடுக்கவும்.

எலிக்கடி விஷம் தீரும்! கைகண்டது.

## 211. வயிறு எரிவிற்கு

சீனி சிரங்கை
நெய் சிரங்கை
நற்சிரகம் சிரங்கை

இம்மூன்றும் கூட்டி, நறுக்கிக் கொஞ்சம் வேகவைத்துத் தின்னவும்.

வயிறு எரிவு தீரும்!

## 212. தலைமுடி கழிவதற்கும் புழுவெட்டிற்கும்

வேப்பழுத்து, சுரும்சிரகம், மிளகு சமன்கூட்டி, எண்ணையில் அரைத்துக் கலக்கித் தலை முழுகி வரவும். நன்று!

## 213. வீக்கத்திற்கு

உப்பைப் பழச்சாற்றி லரைத்துப் பூச மாறும்!

## 214. புண்களில் புழு விழ

சுருள்ளி சுட்டு, எண்ணையில் பிழிந்து, புண்ணிலிடவும்; தீரும்! புழுவிழும்!

(புழுவிழும் என்று உள்ளதால், 'தொப்' பென்று, புழுவானது கீழே விழும், நாம் பிடித்துக் கொள்ளலாம் என எண்ண வேண்டாம்! கிருமிகள் செத்துப் புண் ஆறும் என்பதே கருத்து)

## 215. கிருமிக்கும் வயிற்றுவலிக்கும்

கடுக்காய் பலம் 2, வேப்பிலை பலம் 10, பிரண்டைச் சாறு விட்டரைத்து, விளக்கெண்ணையில் சாரித்து விழுங்கப், பழ மலக் கட்டு விழும்!

கிருமி, வயிற்றுவலி தீரும்!

## 216. சிறுபிள்ளைகள் இருமலடைப்பிற்கு

தேத்தான் கொட்டை, கடுக்காய், மாசிக்காய், சீனிக்காரம் இவை சமன்கூட்டி, முலைப்பாலிலுரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

வெந்நீர் கொடுக்கவும் தீரும்!

பத்தியம்.

(மாசிக்காய், மாசக்காய் இரண்டும் ஒன்றே; மாயக்காயும் இதுவே)

## 217. எலிகடிக்கு

குறிஞ்சா இலைச்சாறும், பாலும் கூட்டிக் கொடுக்கவும்.

பத்தியம்.

## 218. வயிற்றுக் கடுப்பிற்கு

மாதுளம் தோல்

உளுவை

நற்சீரகம்

அசமதாகம்

நெற்பொரி

மாசிக்காய்

சுக்கு

இவையெல்லாம் சமன்கூட்டித். தயிராடையிலரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

## 219. பிள்ளைகள் வயிற்றுக் கடுப்பிற்கு, ரத்தம் சீதம் கண்டால் குளிகை

வில்வ வேர், நிலக்குமிள வேர், நற்சிரகம், நன்னாரி வேர் சமன்கொண்டு அரைத்து. முலைப் பாலிலரைத்து, உண்டை செய்து, பழந்தண்ணீரில் கொடுக்கவும்.

சொன்ன பிணி தீரும்!

கைகண்டது!

## 220. பல்லுறக்க மருந்து

சதுரக்கள்ளிப் பட்டையும், மகிழம் பட்டையும் சமனிடித்துச் சவைக்கப் பல்லுறுதியாகும்!

## 221. பல்லசைவிற்கு

நொச்சியிலையில் சுக்கரைத்துத் தெளித்து, நிழலிலுணர்த்தி, வாழையிலையில் சுருட்டி, அந்தி சந்தி புகை குடிக்கவும்.

பல்லசைவு நிற்கும்!

## 222. நடுக்கல் காய்ச்சலிற்கு

காய்ச்சலும் குளிரும் வந்த நேரம், கீழாநெல்லி இலையைப் பாக்களவு அரைத்து, இரண்டு பணவெடை வெங்காரம் பொரித்துச் கலந்து, வெற்றிலையில் வைத்துத்தின்னச் சுரம் மாறும்!

## 223. கண்நோவில் நெறி விழுந்தால்

சுத்தாமைச் சோற்றை ஏழுவிசை தண்ணீரில் கழுவிச், சீனிக் காரம் பொரித்து, நற்சீரகம் இது மூன்றும் சமன் சீலைத் துணியில் கூட்டி, முலைப்பாலில் துவைத்துக் கண்ணிலிடப் பூ மாறும்!

## 224. வயிற்றுக் கடுப்பிற்கு

சுக்குப் பொடி செய்து, வெருகடி எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுக்கவும்; பிடிக்கும்!

## 225. புண்ணிற்குப் புரையடங்க

புங்கம்பால் சிரங்கை 1, நல்லெண்ணை இருசிரங்கை, விட்டுக் காய்ச்சித், துருசு கழஞ்சு $\frac{1}{4}$ கூடப்போட்டுக் காய்ச்சி, மணல் பருவம் வருகிறபோது, இறக்கிவைத்துக் கொண்டு எந்தப் புண்ணிற்கும் சீலையிலூட்டிப் போடத் தீரும்!

இது கைகண்டது!

## 226. வயிற்று வலிக்கு

முருங்கைப்பட்டை
வெங்காயம்
முள்ளி
வசம்பு
சுக்கு
மிளகு

ஆழாக்குத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி, ஆழாக்காக வடித்துப் பெருங்காயம் கூட்டிக் கொடுக்கவும்! வயிற்றுவலி தீரும்!

## 227. சன்னிக்கு

முருங்கைப்பட்டைச் சாறும், தேனும் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும்.

நச்யம்:-

முருங்கைப்பட்டைச் சாறும், தும்பைச்சாறும், வேப்பம் பட்டைச் சாறும், குப்பைமேனிச் சாறும் மிளகும் சமனரைத்து, நச்யம் பண்ணச் சன்னி தீரும்!

## 228. கண்டமாலைக்கு

பச்சை நாவியை உறைத்து வீக்கத்தில் தடவவும்; நல்ல சதையில் படவொண்ணாது! இது மூன்று நாளைக்கு விதலிக்கும்; பின்னிடை விதனமடங்கும்!

ஆறுமளவும் அப்படியே பூசி வரவும்!

கைகண்டது!

## 229. எலிக்கடிக்கு

எலிபிழுக்கை கழஞ்சு 2, பசுவின் பாலில் குழப்பிக் கொடுக்கவும்!

பத்தியம் ஆறுநாளிருக்கவும். கை கண்டது!

எலிக்கடி நபள் சென்றால், ஊமத்தை இலைசாறும், நல்லெண்ணையும் சரியாக மர்த்தித்து, மூன்று காலமே, மூன்று காசு எடை கொடுக்கவும்.

உப்பு, புளி, தவிரவும்,

ஆறுநாள் பத்தியம்

மயக்கமானால், பச்சைத்தண்ணீர் வார்க்கவும்; அல்லாதிருந்தால், வெந்நீர் கூட்டவும்.

கைகண்டது!

## 230. எலி ஓட்ட!

குப்பைமேனிச் சாற்றில் சாதிலிங்கம் கரைத்து, ஒரு எலி பிடித்து, அதன்மேல் தடவிவிட சகல எலியும் வீட்டைவிட்டு ஓடிபோகும்!

## 231 ஒருதலை வலிக்கு

இலுப்பைக்கட்டி பாக்களவு ஊறப்போட்டுச் சீலையில் கட்டி நோகிற பிழியவும்.

பின்னும், பெருங்காயம், வெள்ளுள்ளித்தோல், மஞ்சள் இலுப்பைக்கட்டி வகைக்குக் கழஞ்சு 1, இவையரைத்துச் சீலையிலூட்டி, நாசியில் புகைபிடிக்கவும்!

பின்னும், ஒருதலைவலிக்கும், தலைவலிக்கும்—கிராம்பு, அபின், கழற்சிப்பருப்பு, வகைக்குக் கழஞ்சு 1 திரிசெய்து, நாசியில் புகை பிடிக்கவும்.

கைகண்டது!

(திரிசெய்து — திரித்து; மாவாக்கி)

## 232. கலங்கின கண்ணிற்கு

ஊமத்தை இலையைக் கலக்கி, மூன்று துளி கண்ணிவிட்டு, அந்த இலையும் மூன்று மிளகு மரைத்துக் கண்ணில் வைத்துக் கட்டவும்!

தீரும்!

### 233. காதில் புழுவிழ

பிரண்டைச் சாறும், எலுமிச்சம் பழச்சாறும் கூட்டிக், காதி விடவும்!

புழுச்சாகும்!

### 234. காதில் சீழ் விழுகிறதற்கு

தேங்காய் திருகி, சுண்ணாம்பு போட்டுக் காய்ச்சி, நெய் யாக்கிக் காதிலிடவும் தீரும்!

### 235. காய்ச்சல் குளிருக்குக் கேசரி உருண்டை

கௌரி, சாதிலிங்கம் இரண்டும் சரி எடை கொண்டு ஊமத்தம் சாறுவிட்டு, ஒரு நாளரைத்துச் சிறு பயறளவு உண்டை செய்து, வெந்நீரில் கொடுக்கவும்.

கைகண்டது!

காய்ச்சல் மறுபடி வந்தால், நொச்சி இலையும் மிளகும் நன்றாய் அவித்துக் கொடுக்கவும்.

### 236. காதில் தினவுப் பூச்சிக்கு

அருகம் புல்லை அரைத்து, நல்லெண்ணையில் கொதிப்பித்துத் தடவவும்.

வேறு:-

உத்தமதாளிச் சாறு பிழிந்து, காதில் இட, கூட்டோடு பூச்சி விழும்!

கைகண்டது!

## 237. காதில் சீ வடிகின்றதற்கு

புளியாரைக் கிழங்கு, வசம்பு, முத்தின புங்கம் பட்டையும், வெள்ளுள்ளியும் சமன்கூட்டிக் குழப்பி, நல்லெண்ணை கூட்டி, முருகக் காய்ச்சிக் காதில் பிழியவும்.

பின்னும், புங்கம் தோல் அரைத்து, எண்ணையில் காய்ச்சிக் காதில் பிழியவும் தீரும்!

கைகண்டது!

## 238. கிராணியில் பீக்கிராணிக்கு

கருங்கண் தேங்காய் ஒரு மூடி திருகி, வெந்நீர் தெளித்து, அரையுழக்குப் பாலெடுத்து அதில் குன்றியளவு அபின்கரைத்துக் கொடுக்கத் தீரும்!

இப்படிக்கு மூன்றுநாள் கொடுத்து, மூன்றுநாளைக்கு உப்பு, புளி தவிரவும்!

கைகண்டது!

## 239. க்ஷயம், ஈளை, இளைப்பிற்கு

அட்டைபிடித்துச் சட்டியிலிட்டுத் தண்ணீர் விட்டுச் சீனியும் கொஞ்சம் போட்டுக் காய்ச்சி, அதில் ½ படி தண்ணீர் எடுத்து, அட்டையை எடுத்து உலர்த்திப் பொடி செய்து, இரண்டு பங்கு சீனியும் போட்டுப் பொடியும் சேர்த்துக் குழப்பிக் கொடுக்கவும்; தீரும்!

கைகண்டது!

## 240. சன்னிக்குச் சந்திர பிரகாச உருண்டை

| | |
|---|---|
| கந்தகம் | பலம் 1 |
| பச்சை நாவி | பலம் 1 |

சாதிலிங்கம் பலம் $\frac{3}{4}$
கழற்சிப் பருப்பு பலம் $\frac{3}{4}$
நெல்லிப் பருப்பு பலம் $\frac{3}{4}$
திப்பிலி பலம் 3

இவையெல்லாம் இஞ்சிச் சாற்றில் ஒருசாமமரைத்து, குன்றியளவு உருட்டி, நிழலிலுணர்த்தி, இஞ்சிச் சாற்றில் ஒரு உருண்டை கொடுக்கவும்!

சன்னி விஷம் தீரும்!

கைகண்டது!

பத்தியம் - பாலும் சோறும்.

## 241. சிறுபிள்ளைகள் வாந்திக்கு

அதிமதுரம் பாலிலரைத்துப், பஞ்சில், வைத்துப் பிழியவும் நெல்பொரி பாலில் அரைத்துக் கொடுக்கவும்! நன்று!

## 242. சிறுபிள்ளைகள் சுரத்திற்கு

சுக்கு
வசம்பு
கொத்தமல்லி
வெள்ளுள்ளி
பற்பாடகம்
முத்தக்காசு

வகைக்கு கழஞ்சு 1 சேர்த்து, ஒருசட்டியில் போட்டு, ஒருபடி தண்ணீர்விட்டு, நாலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும் தீரும்!

## 243. தண்டுகட்டிற்கு

நிலப்பனைக் கிழங்கு பலம் $1\frac{1}{2}$ பொடி செய்து, சர்க்கரை பலம் $\frac{1}{2}$ கூட்டித் தின்னவும் நன்று!

## 244. தலைநோவிற்குச் சூடு போட

பெருவிரல் நரம்பு அசைவில் உன்னிப்பார்க்க, நோய் தோன்றும்!

அந்த நோயில் சூடுபோட நிற்கும்!

## 245. பல் வலிக்கு

கொருக்கிளா வேர் காய்ச்சிக் கொப்பளிக்கவும்; சீந்திக் கொழுந்தும், சுக்கு மரைத்துப் பூசவும்!

பல் வலி நிற்கும்!

## 246. பாம்பு விஷங்களுக்கு

சிறுகொம்மட்டி சமூலமுலர்த்திப் பொடி செய்து, வெருகடித் தூள் வெந்நீரில் போட்டுக் கொடுக்கவும்!

கைகண்டது!

## 247. நல்ல பாம்பிற்கு

மூக்கறை, சாரணைவேர் வில்லை வில்லையாய் நறுக்கி, நிழலிலுணர்த்தி, அதில் இரண்டு மூன்று கொடுத்து, வெந்நீர் கொடுக்கத் தீரும்! கைகண்டது!

## 248. பாம்பு சாக மருந்து

சுங்கான் களிம்பு உலர்த்திப் பொடி செய்து, பாம்பு முகத்தில் போடச் சாகும்!

ஈருள்ளி கசக்கி, நாசியில் பிழிய உயிர் வரும்!

## 249. பித்தத்திற்குப் பாடல்

பஞ்ச தாரை நாற்கழஞ்சி
பருத்த மதுரம் இருகழஞ்சு
இஞ்சி சுக்கு இருகழஞ்சு
ஏலம் தானும் ஒருகழஞ்சு
அஞ்சு மொன்றாய்த் தான்கூட்டி
ஆவின் பாலில் கொள்வீரால்
பிஞ்சு பயித்தியம் நாற்பதுவும்
விட்டே ஓடும் கண்டீரே!

## 250. பிள்ளையில்லாமல் மாதவிடாயில்லாமலிருப்பவருக்குப் பிள்ளை யுண்டாக

ஆண்பனைக் குருத்துச்சுட்டு, பாலில் கொடுக்க, விலக்கமாறி நின்றாலும் காணும்!

பிள்ளையுண்டாக:-

தேவாங்கின் முதுகெலும்பு, காராம் பசுவின் பாலில் அரைத்து, விலக்கமான மூன்று நாள் கொடுக்கவும்!

பிள்ளையுண்டாம்!

## 251. பிள்ளை பிறக்க

திப்பிலி காடியிலரைத்து, முதுகிலும் கீழ் வயிற்றிலும் தடவச் செத்தபிள்ளையானும் விழும்!

## 252. பிள்ளையுண்டாக

(1) விஷ்ணுகிராந்தியும், ஒரிதழ்த்தாமரையும் பாலிலரைத்து, மாதவிடாய் கண்ட விடியக்காலம் கொடுத்துப் புருஷன் சேரவும்!

(2) தண்ணீர் விடாத தேங்காய்ப் பால் இரண்டு சிரங்கை, திப்பிலிப் பொடி போட்டு, வெய்யிலிலே வைத்துக் கொடுக்கப் பிள்ளையுண்டாகும்!

நன்று!

## 253. புண் புரைக்கு நெய்

பசுவின் நெய் உரி, கொடிவேலிவேர் எலுமிச்சங்காயளவு, கருப்புக்கட்டி அந்தளவு கூட்டிக் காய்ச்சி, வெருகடி கொடுத்து, நெய்யும் தடவவும்! புரை ஆறும்! நன்று!

## 254. பேய்நாய்க் கடிக்கு

வேப்பெண்ணையில் நெல்லிக்காய் சுந்தகம் பொடியிட்டு, இருப்புக்கரண்டியில் நன்றாய் எரித்துக் கடிவாயில் எருமைச்சாணி வளைத்து, எண்ணைவிட்டுச் சாணியால் மூடவும். அழிஞ்சிபட்டை அரைத்துத், தேற்றாம் பழமளவு மூன்று மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்கவும்!

பத்தியம்; 1 2 நாளைக்குப் பிறகு ஒவ்வொன்றாய்க் கூட்டவும்.

புண் சுருக்கிலே ஆற்ற வேண்டாம்!

நன்று! கைகண்டது!

## 255. மஞ்சள் காமாலைக்கு

(1) கத்தாழை வேர்ச்சாறு படி $\frac{1}{4}$, பசுவின்பால் படி $\frac{1}{4}$ கொஞ்சம் சீனியும் கலந்து கொடுக்கவும்.

(2) தேங்காய்ப் பாலில் ஆவார வேர்த்தோல் எலுமிச்சங் காய் அளவரைத்து மூன்றுநாள் கொடுக்கவும்! தீரும்!

## 256. மண்டைநோவிற்கு

திரிகடுகு
வெள்ளுள்ளி
கடல்நுரை
இலுப்பைப் பருப்பு
இவை சமன் அரைத்துக் காய்ச்சி முழுகவும்.

## 257. மாலைக்கண்ணுக்கு

1. கழுதை எலும்பு, முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடவும்!

2. முருங்கை விரையைத் தண்ணீரிலுரைத்து, வாசற்படியில் கிடத்திக் கொண்டு, கண்ணிலிடவும் தீரும்!

## 258. முலைப்பால் சுரக்கின்றதற்கு

(1) கட்டுக்கொடிக் கிழங்கு, கறுத்தாட்டின் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

(2) ஆலம் விழுது, தயிரில் அரைத்து கொடுக்கவும்.

(3) கோழிமுட்டை வெள்ளைக் கருவில், சாதிப்பத்திரி பொடித்துக் கலந்து கொடுக்கவும்; பால் சுரக்கும்!

## 259. மூலக் கடுப்பில் ரத்தம் விழுகிறதற்கு

இளநீர் கண்திறந்து, சீனிபோட்டு விடியற்காலம் கொடுக்கவும் தீரும்!

## 260. மூட்டைப் பூச்சி போக

நாறு கரந்தை, புதுச்சட்டிக்குள் வைத்துப், பால் வார்த்து, நடுவீட்டில் வைக்க, மூட்டை சாகும்!

## 261. இரசக்குளிகை

கரு ஊமத்தைச் சாற்றில் ரசம் விட்டுச், செம்மணத்திக் கொம்பால் கடைய மணியாம்!

## 262. வங்க பஸ்பம்

வெள்ளீயம் கழஞ்சு 5, பால்கருடப் பச்சை கழஞ்சு 5, பொடி செய்து போட்டு வறுக்கவும், பற்பமாம்!

## 263. வயிற்றுக் கட்டிக்கு

காட்டாமணக்கிலையை வேக வைத்துத் தின்னவும்; கட்டி கரையும்!

கழிச்சல் அதிகமானால், மோரும் சோறும் கொடுக்கத் தீரும்

## 264. மூன்று சுரத்திற்கு உருண்டை

| | | |
|---|---|---|
| இலுப்பைப்பூ | பலம் | 1 |
| கடுகுரோகிணி | பலம் | 2 |
| வாளம் பூ | | 2 |

தண்ணீரில் அரைத்துக் குன்றியளவு உண்டை பண்ணி, நிழலி லுணர்த்தி வைத்துக்கொண்டு, வாதச் சுரத்திற்கு இஞ்சிச் சாற்றில் ஒரு உண்டை கொடுக்கவும்,

பித்தச் சுரத்திற்குச் சக்கரையிலிடுவது.

சிலேஷ்மச் சுரத்திற்குத் தேனிலிடுவது.

வாதச்சன்னிச் சுரத்திற்கு முலைப்பாலில் கொடுக்கத் தீரும்!

## 265. மூலம், கூட்டோடு விழ

(1) காட்டுக்கருணை

கறிக்கருணை

வெருகங் கிழங்கு

புளியரணைக் கிழங்கு

இவையெல்லா முலர்த்திப் பொடிசெய்து, பேய்ச் சுரைக் குடுக்கையி லடைத்து வைத்துக்கொண்டு, மூன்று நாளைக்கு, வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துத் தின்ன மூலம் கூட்டோடு விழும்!

(2) வெண்தோன்றிக் கிழங்கும், அரணைக்கிழங்கு வேலிப் பருத்தியு மிடித்துப் பானையிலே போட்டு, மிதக்கத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி, ஆடிபோன உரலில், பானை அடியில் வைத்து அவனை மேலிருத்திப், புகை காட்ட மூலம் விழும்!

## 266. இரத்தம் வாயாலே விழுந்தால்

கீழ்க்காய் நெல்லிவேர், சிறுகீரைவேர், சந்தனம் மூன்றும் சமன்கொண்டு, துவைத்துப் பிழிந்து மூன்றுநாள் பசுவின் பாலில் கொடுக்கவும் தீரும்!

## 267. வலங் கட்டினால்

கோழியின் கல்லீரல் வாங்கி, அதன் உள்ளே இருக்கிற கல்லை எடுத்துப் பசுவின் பாலிலரைத்துச், சீனி கூட்டிக் கொடுக்க வும்! வலம் விடும்!

கைகண்டது!

(வலம்-மலம்)

## 268. வயிற்றெரிவிற்கு

பருத்தி இலைச்சாறும், எண்ணையும் கூட்டிக் கொடுக்கவும்.

இந்த இலை பொடிசெய்து, நெய்யில் குழைத்து விழுங்கவும்; தீரும்!

## 269. வயிற்றுக் கடுப்பிற்கும், மூலக் கடுப்பிற்கும்

பருத்திப் பிஞ்சு பலம் 1, இலந்தை இலை பலம் 1, ஈருள்ளி பலம் 1 காடித் தெளிவில் அரைத்து, மூலத்திலணைத்துக் கட்டவும்; நன்று! கைகண்டது!

## 270. வயிற்றுக் கடுப்பிற்கு

குன்றியிலைச்சாறு மூன்று காசு எடை தேனில் கலந்து கொடுக்கவும்; தீரும்! கைகண்டது!

## 271. வயிற்று வலிக்கு

(1) நல்ல அரக்கு, வெள்ளுள்ளி சமன், அரிசி இரண்டு பங்கும் கூட்டி அரைத்துக் காய்ச்சிக், குழம்பானால் முள்ளிக்காயளவு தின்னவும்; வெப்பு, பூச்சிக்கு மாகும்!

(2) நெல்லிப்பிஞ்சு படி 1, பசுவின் கோமயம் படி ½ இதிலிட்டவித்துப் பத்துநாள் கறியாகச் சாப்பிடவும்; நன்று!

## 272. வயிற்றுக் கட்டிக்கு

காட்டாமணக்கு இலையை வேகவைத்து தின்னவும்; கட்டி கரையும்!

கழிச்சல் அதிகமானால், மோரும் சோறும் கொடுக்கவும் தீரும்!

## 273. வலம் விட

ஒரு பலம் கொத்தமல்லி, கிழிகட்டிப் பாலில் அவித்துக் கொடுக்கவும் வலம் விடும்!

## 274. வயிற்றுக் கடுப்பிற்கு

இலவங்கப்பட்டை பலம் 1, அரைத்து நாழித் தண்ணீரில் கலந்து, மூன்று கிராம்பு ஒரு துணியில் முடித்து போட்டு, நாலொன்றாய்க் காய்ச்சி, ஒரு கிராம்புங் கொஞ்சம் தண்ணீருமிப் படி மூன்று நாள் கொடுக்கவும் தீரும்!

## 275. வாயுவிற்குக் குளிகை

இரதம் பணவெடை 1
வெண்காரம் பணவெடை 1
நேர்வாளம் நஞ்சு
போக்கி பணவெடை 12
திப்பிலி பணவெடை 1

இவையெல்லாம் நொச்சிச் சாற்றில் அரைத்து, பிறகு முருங்கை இலைச்சாற்றில் அரைத்து, மஞ்சாடியளவு உருட்டி, நிழலி லுணர்த்திக் கொண்டு, சுக்குக் கஷாயத்தில் கொடுக்க, எல்லா வாயுவும் தீரும்!

வேறு

## 276. சகல வாயுவிற்குக் குடிநீர்

வேர்க்கொம்பு வெங்காயம், மிளகு, செம்பு சமன் கஷாயம் வைத்துக் கொடுக்கச் சகல வாயுவும் திரும்!

## 277. இருமலுக்குப் பாடல்

(1) நெல்லி திப்பிலி நெல்பொரி சர்க்கரை
நல்ல தேனில் நறுநெய்யில் தின்னிட
இல்லை இல்லை இருமலும் ஈளையும்!
தில்லையம் பலநாதர் தன் ஆணையே!

(2) நீடு மாதுளை நெல்பொரி சர்க்கரை
தேடும் திப்பிலி தேனில் குழைத்திடில்
பீடை ஈளையும் பெருவிக்கல் சத்தியும்
ஓடி ஓடி ஒளிந்திடும் உண்மையே!

(3) இருமலுக்கும் ஈளைக்கும்:-

ஏலம்
லவங்கம்
பச்சிலை
திரிகடுகு
கடுக்காய்
நெல்லி
தான்றி
வசம்பு
கடுகுரோகிணி
அதிவிடையம்
சேவியம்
விளாவரிசி
அத்தி
திப்பிலி
நிலவேம்பு
கூவளை வேர்
அசமதாகம்
பங்கம்பாளை வேர்
சிறுமூலகம்

இவை வகை பலம் 1 பொடி செய்து, சித்தாமணக் கெண்ணையில் குழைத்துத் தின்னத் தீரும் வியாதி:-

1. இருமல்
2. ஈளை
3. குடல்வாதம்

4. விக்கல்
5. மூலரோகம்
6. பீலிகை
7. காமாலை
8. பாண்டு
9. நெஞ்சு நோக்காடு
10. பல்லுளைவு

இவையெல்லாம் தீரும்!

### 4. ஈளை இருமலுக்கு முருங்கைத் தைலம்

முருங்கை விதையும் இலையும் வேருமரைததுக் கலயத்தில் அப்பி, வெய்யிலில் வைக்கத் தயிலம் விழும்! எடுத்து வெற்றிலை யில் தடவிக் கொடுக்க ஈளை, இருமல் தீரும்!

### (5) ஈளைக்கு நெய்

ஆடாதோடை இலையும் தூதுவளை சமூலமும், திப்பிலி, உள்ளி, கருஞ்சீரகம், இவை சமன்கூட்டிப், பசுவின் நெய்யில் வேகவைத்துக் கொடுக்க மாறும்!

### (6) ஈளைக்கு மிருமலுக்கும்

திப்பிலி வறுத்துப் பொடி செய்து, வெருகடித்தூளெடுத்து ரூபாய் எடைத்தேனில் குழைத்துத் தின்னவும்; ஈளை இருமல் தீரும்!

### (7) இருமலுக்கு

பொருதலை ஒரு பிடி, சுக்கு, மிளகு, திப்பிலி சமன்பொடி செய்து, தேனில் வெருகடித் தூளைக் குழைத்துத் தின்னவும் தீரும்

கைகண்டது.

## 278. இரத்தப் பித்தத்திற்கு

காரெள்ளு கழஞ்சு, வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கொடுத்தால் மாறும்!

கைகண்டது!

## 279. ஈளைக்கு

(1) உத்தமதாளிச் சமூல மிடித்துப் பொடி செய்து, வெருகடி நெய்யில் குழைத்து விழுங்கவும்.

(2) கரியுப்பை, எருக்கம்பாலில் எட்டுநாள் ஊறப்போட்டுப் பழம்புளி இரண்டு பாக்களவு தட்டி, வெந்நீரில் கொடுக்கத் தீரும்!

## 280. இருசிக்கு முலையெழும்ப, ருதுவாக மருந்து

குறுவை அரிசி மாவும், முத்தெருக்கஞ் செடி வேரும், ஒரு படி மாவுடன் இடித்துக், களி கிண்டி, நல்லெண்ணையோடு ஏழு நாள் தின்ன, முலை புறப்படும்!

நெல்லி முள்ளி உள்பருப்பு பலம் $1\frac{1}{3}$ பிங்கானில் போட்டுத் தண்ணீர் விட்டு வடித்து இறுத்து, நற்சீரகம் தூள் பண்ணி இட்டு, மிளகும் கூட இட்டு வெருகடிப் பிரமாணம் அரைப்படி பசுவின் தயிரில் கலந்து, காலமே இப்படி மூன்று நாள் கொடுக்கவும். வெந்நீர் பரிமாறவும் நன்று.

## 281. இருமலுக்கும் நெஞ்சுவலிக்கும்

பேராமுட்டி இலை, கருஞ்சீரகம் வராகனெடை 1, திப்பிலி வராகனெடை 1, மிளகு வராகனெடை $\frac{1}{2}$ இவையெல்லாம் யாங் காயளவு அரைத்துப், பனைவெல்லம் சமன் ரேகித்துப், பசுவின் நெய் படி $\frac{1}{4}$ வீதம் விட்டு, லேகியம் பண்ணித் தின்ன, எரிவு, இளைப்பு, இருமல் தீரும்!

(ரேகித்து - தேய்த்துக் கலந்து)

## 282. வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 20
முக்காவேளைவேர் பலம் 20

சங்கவேர் பலம் 20
சித்தாமுட்டி வேர் பலம் 10
சிற்றாமல்லி
பேராமல்லி
முள்ளிவேர்
கண்டங்கத்திரிவேர்
சாரணைவேர்
முதியார் கூந்தல்
விலாமிச்சவேர்
சீந்தில் தண்டு
கொடிவேலி வேர்
பொன்முசுட்டை வேர்
சிறுதேக்கு
நன்னாரி வேர்

இவை வகைக்குப் பலம் 5; இவையெல்லா மிடித்துப் பானையில் போட்டு, எட்டு மரக்கால் தண்ணீர்விட்டு, நாலிலொன்றாய்க் காய்ச்சி, கற்கம்

சர்க்கரை பலம் 30
லவங்கம் படலம் 1
நாகப்பூ
சீரகம்
திரிகடுகு
சேவியம்
சித்திரமூலம்
கருஞ்சீரகம்
இந்துப்பு
சாதிக்காய்
கொத்தமல்லி
கோஷ்டம்

தாளிசப்பத்திரி
அரத்தை
அசமதாகம்
கோரோசனை
அதிவிடையம்

வகைக்குப் பலம் $\frac{1}{5}$; தேன்படி $\frac{1}{4}$, அரப்பொடி பலம் 2, கிட்டம் பலம் 1 இவையெல்லாம் சூரணம் செய்து சர்க்கரையும் போட்டுச் சூரணமும் போட்டு மெழுகுப் பதத்தில் தேன்விட்டு, நெய்படி $\frac{1}{4}$ வீதம் விட்டுக் கிண்டி லேகியம் போல இறக்கிக் கொண்டு 15 நாள் தானியபுடம் வைத்தெடுத்து, அந்தி சந்தி புன்னைக் காயளவு தின்னுவரத், தீரும் வியாதி:-

1. பாண்டு
2. காமாலை
3. சூசிகாவாயு
4. வாந்தி
5. பித்தம்
6. மூலம்
7. நாசிகாபீச்டம்
8. நடுக்கல்
9. மேகம் 21
10. காமாலை
11. காசம்
12. இரத்தவாந்தி

இவையெல்லாம் தீரும்!

## 283. [வீரியம் உண்டாக]

(1) அயக்காந்தச் சிந்தூரம் கூட்டி, ஒரு மண்டலம் சாப்பிடவும்.

இச்சா பத்தியம்.

இதுவும், ரசம் வராகனெடை 2, கந்தகம் வராகனெடை 1, இருப்புச் சட்டி அடுப்பில் வைத்துச், சட்டி காய்ந்த பிறகு, அதில் கந்தகத்தைப் போட்டு, ஆலம் விழுது கொண்டு கடையச், சிவந்த பக்குவத்தில் ரசத்தைவிட்டுப் பிசறிச் சாறு ஆழாக்கு வைத்துக்கொண்டு, அது ஒளிய மட்டுந் தெளித்துத் தெளித்து, ஆலம் விழுதால் கடைந்து கலிப்பான போதிறக்கி, ஆறவிட்டுச சிமிழில் வைத்துக் கொண்டு, காலமே வராகனெடை $\frac{1}{4}$ சிந்தூரம் எடுத்து, வில்வாதியில் சேர்த்துக், கொஞ்சம் விளக்கெண்ணையும் சேர்த்துத் தின்றுவரச், சகல நோவும் தீரும்!

வீர்ய மிகுதியுண்டாகும்!

(வில்வாதி-வில்வாதிலேகியம்; முன் சொன்னது)

(2) லேகியமில்லாதபடிக்குச் சிந்தூரம் வராகனெடை $\frac{1}{4}$ விளக்கெண்ணையில் இழைத்துக் கொடுக்கவும்

இப்படி ஐந்து காலமே கொடுக்க, வீர்யமிகுதியாகும்.

(3) இதுவும், சாதிக்காய் 1, அபின் வராகனெடை $\frac{1}{2}$ இதை ஊமத்தங்காயில் வைத்து, ஏழு வரட்டியில் புடமிட்டு எடுத்துக் கழற்சிப் பிரமாண முண்டை செய்து, காலமே ஒரு மாத்திரை விழுங்கி, விளக்கு வைத்துபிறகு, ஒரு முருங்கைக் காயை விளக்கில் வெதுப்பித் தின்ன, வீரிய மிகுதியுண்டாகும்!

(4) இதுவும் வீரியத்திற்கும், வீரியமற்றவருக்கும்

வெப்பாலைப் பட்டை பலம் 10 பால்விட்டு அவித்துப் பட்டையை யுலர்த்திச் சூர்ணித்து சூரணம் பலம் $1\frac{1}{2}$ காலாழாக்குச் பசுவின் பாலிலிழைத்துச் சாப்பிட்டுச் சாயங்காலந் தேனிலாவது, சர்க்கரையிலாவது வராகனெடை $1\frac{1}{2}$ சூரணம் சாப்பிடவும்.

இப்படி, 8 நாள் சாப்பிட, விந்திறுகி, வீர்ய மிகுதியாகும்!

(5) இதுவும், குமரி கிழங்கு கொண்டு வந்து, காலமே ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்துப், பசுவின் வெண்ணை ஒரு கொட்டைப் பாக்களவு இரண்டு மிழைத்துக் கொடுக்கவும்.

இப்படி இரண்டு நேரமும் மூன்றுநாள், ஆறுபொழுது கொடுக்கப் பலன்மிகுந்து, விந்து இறுகி, வீர்ய மிகுதியுண்டாம்!

இவ்வகை மருந்துகளுக்குப் பசுவின் பால், சர்க்கரை பழ வகைகள், நெய், பருப்பு, கூட்டி வரவும்.

(6) திப்பிலி சேர் 1, பசுவின் பால் சேர் 4 சேர்த்துத் திப்பிலியைப் பாலில் போட்டுக் காய்ச்சிப், பால் சுண்டின பின் திப்பிலியை எடுத்து உலர்த்திச், சூர்ணித்துக், கற்கண்டு சேர் 1 இடித்து வேறு வைத்துகொண்டு, காலமே துட்டிடைச் சூரணமும், துட்டிடைக் கற்கண்டும் கலந்து, வாயில்போட்டுப், பசுவின்பாலாழாக்குக் காய்ச்சிச், சுடச்சுடக் கொப்பளித்து முழுங்கவும்.

இப்படி இரண்டு நேரமும் பத்து நாள் சாப்பிட வீர்ய மிகுதியாகும்!

(7) இதுவும், உள்ளிச் சேர் 1, ஆவின்பால் சேர் 2, இதைச் சேர்த்துக் காய்ச்சிக், வெல்லம் சேர் 1, நெய் சேர் 1 கூட்விட்டுக் காய்ச்சி ரேகிச்சபோது இறக்கி' இரண்டு நேரமும் கொட்டைப் பாக்களவு இருபது நாள் சாப்பிட வீரியமுண்டாகும்! விந்திறுகும்!

ஔஷதம் சாப்பிடும்போது, பகலுக்குக் கிச்சடி, நெய், ஆட்டுக்கறி கூட்டிச் சாப்பிட்டு, ராத்திரிக்கு மிளகுநீர் உண்டு மருந்து சாப்பிட மட்டும் ஸ்திரீமுகம் பாராமல் தலைமுழுகி, மறுநாள் போகிக்க, வெகு, பலனாயிருக்கும்!

## 284. நட்டுவாக்காலிக்கு

கத்தரிக்காயை வகிர்ந்து, கும்பி, நெருப்பில் வெதுப்பிக், கடிவாயில் கட்டவும்.

அந்தக் காயரைத்து, விழுதெடுத்து, எலுமிச்சங்காயளவு முழுங்க, நட்டுவாக்காலி விஷம் தீரும்!

## 285. சகல விடங்களுக்கும்

இதுவும்,

இரதம் கழஞ்சு 1

கந்தகம்

துருசு $\frac{1}{2}$

அரிதாரம்

நாவி-வகைக்குக் கழற்சி யரை

வெள்ளைப் பாஷாணம் $\frac{1}{4}$

கௌரி $\frac{1}{4}$

சுத்தித்த வாளம் கழஞ்சு 15

சாரணைக் கிழங்கு

திரிபுரத்தூள்

இவ்வகை தனிச்சாறுவிட்டு அரைத்துக் குன்றியளவு உருட்டி, நிழலிலுணர்த்தி, வெற்றிலைச் சாறாகிலும், எருக்கம் பாலாகிலும் இரண்டொன்றில் மர்த்தித்து நாவிலிட்டுக் கடிவாயிலும் தேய்த்திடச் செய்யான், பூரான், தேள், பாம்பு, விரியன் மூன்றும், சுண்டெலி பதினெட்டும் இவ்வகை விஷமெல்லாம் சிதறியே முறையிட்டோடும், பச்சைப்பயறு போட்ட கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

## 286. பேதி ஆனந்த வயிரவன் மாத்திரை

(1) வாளம் வராகனெடை 8

சுக்கு வராகனெடை $\frac{1}{2}$

மிளகு வராகனெடை 1

வெங்காரம் வராகனெடை 1

கந்தகம் வராகனெடை 1

இதை இளவெந்நீரில் ஒருசாம மரைத்துத் தேற்றான்விரை போலுருட்டி, நிழலிலுலர்த்தி, ஒரு குளிகை குளிர்ந்த தண்ணீரில் கொள்ள, பேதியாகும்!

மிளகு நீரும் சாதமும் சாப்பிடத் தீரும் வியாதி:-

1. வயிற்று நோவு
2. மகோதரம்
3. மலக்கட்டு

4. பழைய வாதம்
5. பலசுரங்கள்

தீரும்!

(2) இதுவும், முருங்கைக்காயிலைச் சாறு ஆழாக்கு, வெங்காயச் சாறு ஆழாக்கு ஆமணக்கெண்ணை அரைஆழாக்கு இவ்வகை சேர்த்து, வற்றக் காய்ச்சிக் குடிக்க வயிறு பேதிக்கும்!

இது சுகபேதி! சகலவாயுவுகளையும் அறுத்துத் தீபமுண்டாக்கும்!

(3) இதுவும் கடுக்காய் ஏழு கலிப்பாக்கு ஏழு, கொட்டைப் பாக்கு 7, கடுகு ரோகிணி வராகனெடை 1, சுக்கு வராகனெடை 2, கத்தாழஞ்சோறு எலுமிச்சங்காயளவு இதை நறுக்கிப்போட்டு அரைப்படி தண்ணீர்விட்டு, ஆழாக்கிருக்க இறக்கி, அரைத்துக் குழப்பி, எழுவடியிட்டுக் குடிக்கப் பேதியாம்!

இப்படி மூன்று நாளைக்கொரு தடவை மூன்று பேதி சாப்பிட உஷ்ண, மேக வாயு முதலானதும், வயிற்றுவலியும் தீரும்!

(4) இதுவும், கத்தாழஞ்சோறு எலுமிச்சங்காயளவு, பசுவின் பால் படி ½ இதைக் குறுகக் காய்ச்சிப் பிசைந்து குடிக்கப் பேதியாகும்!

இப்படி மூன்று நாளைக் கொருகால் மூன்றுதடவை கொடுக்கப் பசியற்ற வாயு மேகங்கள் தீரும்!

(5) இதுவும், இரண்டு குத்து நெல்லியிலை, கடுக்காய் 20 கறுக்கி, ஒருபடி தண்ணீர் விட்டுக் காய்ச்சி, ஆழாக்கிருக்க இறக்கிப் பிசைந்து வடித்து, ஒரு பெருங் கரண்டி விளக்கெண்ணை விட்டு மர்த்தித்துக் கொடுக்கப் பேதியாம்!

இப்படி மூன்றுமுறை கொடுக்க மேகங்கள், உஷ்ணங்கள் தீர்த்துப் பித்த மயக்கமும் தீரும்!

(6) இதுவும், சியக்காய் இரண்டு பாக்களவு அரைத்து, எருமைத்தயிரில் குழப்பிக் கொடுக்கப் பேதியாம்!

இப்படி மூன்றுவிசை கொடுக்கப் பித்த, குன்ம, வயிற்றுவலி தீரும்!

இதற்கெல்லாம் மிளகு நீரும் சாதமும் சாப்பிடவும்; பத்திய மில்லை!

(7) நேர்வாளம், சுத்திபண்ணின பருப்பு 20, எலுமிச்ச இலை 5-இதை அரைத்துச் சிற்றாமணக் கெண்ணையில் குழப்பி நாவியில் தடவப் பேதியாகும்!

போதுமானால், மருந்தைக் கழுவிப்போட்டு மிளகு நீரும் சாதமும் சாப்பிடத் தீரும்! பேதி நிற்கும்!

(8) சுத்தி பண்ணின வாளம் வராகனெடை 6, லிங்கம் வராகனெடை 2, இதைக் கருசலாங்கண்ணிச் சாறுவிட் டொரு சாமமரைத்துப்பாக இலைச் சாற்றில் ஒருசாம மரைத்து முருங்கை யிலைச் சாற்றில் ஒருசாமமரைத்துக் குன்றியளவு, மாத்திரை திரட்டி, உலர்த்தி, ஒரு குளிகை பசுவின் வெண்ணையிலாவது, குளிர்ந்த தண்ணீரிலாவது கொடுக்க பேதியாம்!

வாயு, வயிற்றுவலி, உப்புசமும் தீரும்!

இப்படி ஐந்துநாள் கொடுக்கவும்.

(9) இதுவும், சிவதைவேர்ச் சூரணம்;

சிவதைவேர் பாலிலூறவைத்து, உலர்த்தி இடித்துச் சூரணம் பலம் 11, நெல்லிப் பருப்பு, வாயுவிளங்கம், ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி கடுக்காய், கடுகுரோகிணி - வகைக்குப் பலம் $\frac{1}{2}$ இதையெல்லாம் சூர்ணித்துக் கலந்து, ஒருபாதைக்குச் சூர்ணம் பலம் $\frac{1}{4}$, சர்க்கரை பலம் $\frac{1}{4}$ கூட்டிச் சாப்பிட்டு வெந்நீர் குடிக்கப் பேதியாம்.

பேதி அதிகம் வேண்டுமானால் சுக்குத்தூள் பலம் $\frac{1}{4}$ கூட்டி, எலுமிச்சம் பழச் சாற்றிலிழைத்துக் கொடுக்கப் பித்தநீரை வாங்கிச் சீதங்களும், செரியாக்குணம், அசீரணம், பித்தவாதங்கள் தீரும்!

(10) இதுவும், இரசம், வெங்காரம், கந்தகம், மிளகு, சுக்கு, சுத்திபண்ணின வாளம் இது சமனாக, இஞ்சிச்சாறுவிட்டு, நாலு சாமமரைத்துக் குன்றியளவு குளிகை யுருட்டி, நிழலிலுணர்த்தி, ஒரு குளிகைத் தேங்காய்ப் பாலில் கொடுக்கச் சுகபேதியாகும்!

பேதி மிஞ்சினால், அவுரிவேர் பாக்களவு அரைத்து, வெந்நீரில் கொடுக்கப் பேதி நிற்கும்!

வயிற்றுவலி, குன்மவலி, வாயு தீரும்!

இப்படி ஐந்துமுறை கொடுக்கவும்.

மிளகுநீரும், சோறும் கொடுக்கவும்.

(11) இதுவும் ஓமம்பலம் 1, சதிரக்கள்ளிப் பால் வராகனெடை $1\frac{1}{2}$ ஓமத்தில் விட்டுப் பிசறி உலர்த்தி, ஆள்பலனறிந்து, கால்பல ஓமமும், மிளகு பத்தும் கூடவிட்டுப் பிசறி அரைத்து, முழுங்கி, வெந்நீர் குடிக்கவும் பேதியாகும்!

மாற்று: மோரும் சோறு சாப்பிடவும் நிற்கும்!

சகலவயிற்றுவலி குன்மங்கள் இப்படி மூன்றுநாள், மூன்று தடவை கொடுக்கவும்.

(12) இதுவும், புளிபலம் 1, கள்ளிப்பால் வராகனெடை $1\frac{1}{2}$ விட்டுப் புளியைப் பிசைந்து வைத்து, வேண்டினபோது ஒரு வராகனெடை சாப்பிடப், பேதியாம்!

பேதி மிகுதியானால், மாற்று மோரும் சாதமும் சாப்பிட நிற்கும்!

(13) இதுவும், சாலப்பு பலம் 1, கிரமண்டாட்டம் பலம் 1, சிவகைவேர் பலம் 1, சுக்குப் பலம் $\frac{1}{2}$, சோம்பு பலம் $\frac{1}{4}$, காக்கிட்டான் விரை பலம் $\frac{1}{2}$, சூரத்தா விரை பலம் $\frac{1}{2}$ இதைச், சூர்ணித்து, ஒரு பேதிக்குச் சூர்ணம் பலம் $\frac{1}{4}$ சாப்பிட்டு, வெந்நீர் கொப்பளித்து முழுங்கிப் பேதியாம்!

ஆட்டுக் கறியாகிலும், கோழிக்கறியாகிலும் விறாத்துப் (?) பண்ணிக்கொண்டு சாப்பிடவும்.

சாயங்காலம் சுக்குத்தண்ணீர் குடிக்கவும்.

(14) இதுவும், சுகபேதி மாத்திரை ஐவன் விரை யரைத்த விழுது எலுமிச்சங்காய் அளவு, வெண்ணை அதற்குச் சரியாகக் கூட்டி இழைத்துக் கலயத்தில் போட்டு, வெயிலில் வைத்துப் பார்க்கத் தைலமிறங்கும்!

இந்தத் தைலத்தைச் சிறு பொட்டியி லடைத்துக்கொண்டு விரேசனம் வேண்டுமென்ற பெயருக்குத் தொப்புளைத் துவக்கி இரண்டு விரற்கடை யகலற்திற்குச் சுத்தித் தடவி, வெயிலில் திரியப் பேதியாம்!

போதுமானால், குளிர்ந்த தண்ணீரில் மருந்தைக் கழுவிக், கால் கை சுத்தி பண்ணி, மிளகு நீரும் சாதமும் சாப்பிட பேதி நிற்கும்!

## 287. தைல வகுப்பு

(1) தைலம்;-

நொச்சிச்சாறு
பனம்பட்டைச்சாறு
ஊசிமல்லிகை
முருங்கை இலை
பச்சை மஞ்சள்
தும்புராஷ்டம்
மருளக்கிழங்கு
துளசி
தாழம் விழுது
இஞ்சிப்பாக இலை
வெற்றிலை

இவைகள் வகைக்குச் சாறு படி $\frac{1}{4}$, நல்லெண்ணை படி $1\frac{1}{4}$, பசுவின் பால் படி $1\frac{1}{4}$. இதைச் சட்டியிலிட்டுக் கற்கம், சித்தரத்தை, வாயு விளங்கம், தேவதாரம், மஞ்சள், அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், கொடிவேலி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆம்பல், வசம்பு, பெருங்காயம், கடுகு வகைக்குப் பலம் $\frac{1}{2}$ இதைச் சூர்ணித்து,

முன் எண்ணெயில் போட்டுக், காய்ச்சிப் பதமாக இறுத்து, வேறே வாய்கட்டித், தாலியப்புடத்தில் 15 நாள் வைத்து, இந்தத் தைலம் மூன்று காசு எடை காதிற்கு விட்டு, மேலேறாமல் பிடிபிடிக்கவும்!

மூன்று நாளைக் கொரு முழுக்குத் தலைக்கிட்டு முழுகிவரத், தீரும் வியாதி:-

1. செவிடு 25 வகை
2. தலையில் பிறக்கிற வியாதி 32
3. பீசை வகை 7

எல்லாம் சரீரத்தில் பற்றின வாத ரோகமும் தீரும்!

இச்சா பத்தியம்.

(2) இது தைலத்திற்கு;-

இலுப்பைக் கட்டி அரப்பிட்டு முழுகவும்.

நொச்சி இலை
எருக்கம்பழுப்பு
கையாந்தகரை
வாழைப்பூ
பருத்தி இலை
முருங்கைஇலை
இஞ்சி
பாகைச்சாறு

வகைக்குச் சாறு படி ½, நல்லெண்ணைபடி 1, எல்லாம் சட்டியி விட்டுக் காய்ச்சித் தைலப்பக்குவத்தில் இறக்கி, இந்தத் தைலம் காதிற்கு இரண்டுதுளிவிட்டு, மேலுக்கும் துவளையிட்டு, மூன்று நாளைக்கு ஒரு முழுக்கு முழுகி வரவும்.

(அ) கன்னகுலை
(ஆ) ஒரு பாரிசத் தலைவலி
(இ) காதடைப்பு
(ஈ) சன்னி...

(உ) சிராத்தலைப்பாரம் திரும்!

இச்சாபத்தியம்

(3) வெள்ளாட்டுக்கோமயம் ஆழாக்கு
சயிந்தவ லவணம் பலம் ¼

இதை அரைத்துச் சூரியப்புடத்தில் வைத்து, அரைவாசி சுண்டிய பின், காதில் இரண்டுதுளி விட்டுப் பஞ்சடைக்கக், காதடைப்பு, காதில் சீய்ப்பாச்சல், ரணங்களும் திரும்!

இச்சாபத்தியம்.

## 288. இரத்த மூலத்திற்கு

(1) பசுவின் நெய் படி ½
முருங்கைவேர்,
பட்டைச்சாறு ஆழாக்கு
வெங்காயச்சாறு ஆழாக்கு

சட்டியிலிட்டுக் காய்ச்சிச், சீரகத்தூள் பலம் 1½ காய்கின்ற நெய்யில் போட்டுப், பக்குவத்திலிறக்கி, அந்தி சந்தி, வேளைக்கொரு கரண்டி கொடுத்துவர, ரத்த மூலம் திரும்!

இச்சாபத்தியம்.

(2) இதுவும், பசுவின் நெய் படி ½ சட்டியிலிட்டு, மருளக் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு, புளிக்கருணைக்கிழங்கு, பிரண்டைக் கிழங்கு, கொடிவேலி வேர்-வகைக்குப் பலம் ¼; இதைப் பஞ்சுபோல் நறுக்கி, நெய்யுடன் போட்டுக் காய்ச்சிப், பதத்தி லிறக்கி, வடித்து, அந்தி சந்தி வேளைக்கொரு கரண்டி பத்துநாள் கொடுக்க, ரத்தமூலம், மேகத்தால் எழுந்த மூலம், அக்கினி மந்தம், மூலவாயு திரும்!

இச்சாபத்தியம்.

## 289. சகல மூலத்திற்கும் லேகியம்

(1) வில்வவேர் பலம் 10
சித்தாமுட்டி பலம் 25
சிறுகாஞ்சிர வேர் பலம் 15

இதைச் சூர்ணித்து, ஆறுபடி தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி, ஒரு படி யிருக்கச்சே, சர்க்கரை வராகனெடை 1 போட்டுக் கிளறி, கற்கம், திப்பிலி பலம் 1, தாளிசப் பத்திரி பலம் 2, கற்கச்சிங்கி பலம் 1 - இதைச் சூர்ணித்துக் காய்கிற பாகில் தூவிக் கிண்டிப் பக்குவத்தில் வழித்துவைத்து, வேடுகட்டித், தானியப்புடத்தில் 30 நாள் வைத்தெடுத்து, அந்திசந்தி நேரத்திற்குப் பலம் ½ வீதம் பத்துநாள் கொடுக்கப் 12 வகை மூலமும் வாங்கி உப்புச மிளைப்பு, அக்கினி மந்தம், சுரங்களும் தீரும்!

(2) இதுவும்,
கருஞ்சீரகம்
கோஷ்டம்
கொடிசைப்பாலை
பாலைப்பட்டை
சதகுப்பை
ஆனைத் திப்பிலி
லவங்கம்
நாகப்பூ - வகைககுப பலம 2

இதைச் சூர்ணித்து, இதற்குச் சமன் செவதைவேர்ச் சூரணம் கூட்டிச் சர்க்கரை பலம் 20, தேன்படி ¼ எல்லாம் கூட்டி இழைத்து, லேகியமாக்கி வைத்து, அந்தி சந்தி வேளைக்கு வராகனெடை 1½ வீதம் பத்துநாள் கொடுக்கவும்.

(அ) 12 வகை மூலம்
(ஆ) பித்தவாயு
(இ) அக்கினி மந்தம்

(ஈ) அசிரணவாயு

(உ) சுரங்கள்

முதலானதும் திரும்!

இச்சாபத்தியம்

(கொடிசைபாலையே, குடசப்பாலை எனப்படுவது போலும்)

(3) இதுவும்

கருணைக் கிழங்கு பலம் 5, மேல் புறணி சீவிக் கல்லுரலிலிட்டிடித்து, நல்ல வெல்லம் பலம் 5 கூடப்போட் டிடித்து, லேகியமான போதெடுத்து, அந்திசந்தி வேளைக்கு நெல்லிக்காயளவு பத்துநாள், கொள்ள, மூலந்தீர்ந்து, மூலச்சூடு தணிந்துவிடும்!

(4) இதுவும்,

கருணைக்கிழங்கு

காட்டுக் கருணைக்கிழங்கு

புளிக்கருணைக்கிழங்கு

பிரண்டைவேர்

மிளகுக்கருணைப் வேர்ப்பட்டை

வகைக்குப் பலம் 1 கலுவத்திலிட்டு, ஒருசாமமரைத்துச், சுண்டைக்காயளவு மாத்திரை திரட்டி, அந்தி சந்தி, நேரத்திற்கு ஒரு மாத்திரை தேனில் பத்து நாளைக்குக் கொடுக்க, முளை, மூல முதலான சகலமும் திரும்!

## 290. வீரியத் தைலம்

வெள்ளைக் குண்டுமணிப் பருப்பு உதவினமட்டும் சட்டியிவிட்டு, அதற்குச் சமன் வெள்ளாட்டுப்பால் விட்டுப் பிசறிச், சூரியப் புடம் வைத்துக் காய்ந்த பிறகு, இப்படி ஏழுதடவை செய்து பருப்பை நன்றாய் உலர்த்தி, ஒரு குடத்திலிட்டு, முடுக்குத்தைலமிறக்கி, இந்தத் தைலத்தைச் சிறு புட்டியில் அடைத்துவைத்துக் காசெடை வெற்றிலையில் தடவி, மூன்றுநாள் இரண்டு வேளையும் சாப்பிட்டு, சுவிச்சு, புளிப்புத் தவிரவும்.

மகாவீரிய விருத்தி யுண்டாகும்!

## 291. ஸ்தம்பனம்

(1) ஊமத்தை விரை உதவினமட்டுமுலர்த்திச், சிறு குடத்திலிட்டு முடுக்கத் தைலமிறக்கி, பாக்கை வெட்டி ஒரு பீங்கானிலிட்டு இந்தத்தைலம் விட்டுப்பிசறி, மூன்றுநாள் ஊறினபின், உலர்த்தி வைத்துக்கொண்டு, வேண்டியபோது சாயங்காலம் மூன்று பாக்குச் சரியான பாக்கை வாயில் போட்டுக்கொண்டு, அதற்குத் தக்கது வெற்றிலையில் சுண்ணாம்பு தடவித் தின்று முழுங்கவும்.

சாமத்துற்குப் பிறகு, பாலும் சாதமும் சாப்பிட்டுப் போகிக்க விந்து விழாது!

போதுமானால், ஒரு எலுமிச்சம் பழம் சாப்பிட விந்து கழிந்து விடும்!

(2) இதுவும்;

சாதிக்காய் 1 அதைக் குடைந்து அதற்குள் அபின் வராகனெடை 1 அடைத்து, அதன்மேல் சாதிக்காய்த் தூளால் அடைத்து, எள்ளிலைச்சாறு பிழிந்து, அந்தச் சாற்றில் சீலையைப் புரட்டிச் சாதிக்காய் மேலே ஒரு முறை சுத்தி அதன்மேல் களிமண்ணால் மூடி, கும்பி நெருப்பில் புடம் போடவும்.

இப்படி, இரண்டு புடம் போட்டுப் பின்பு காயை எடுத்துக் கலுவத்திலிட்டுத் தேன்விட்டரைத்து; வேண்டியபோது சாயங் காலம் ஒரு மாத்திரை முழுங்கிச் சாமத்திற்குப் பிறகு, பாலும் சாதமும் சாப்பிட்டுப் போகிக்க விந்து கழலாது!

போதுமானால், பழம்புளியும், சுக்கும், பழச்சாறு விட்டரைத்துக் கொட்டைப் பாக்களவு முழுங்க! விந்து கழிந்துவிடும்!

(3) இதுவும்;

கவி

செந்நா யுருவி சிறுபூளை

தேவதாரம்

தின்னற் கரிய கற்பூரம்
தேனில் இழைத்து மேற்பூசி
மின்னெரி இடையாள் தனைச்சேர
வேண்டும் இதயம் தான்தருவாள்
முன்னே அவள்தான் மூடுவலெனப்
பின்னே திரிவாள் கண்டீரே!

(1) இதுவும்;

சுத்தி பண்ணின கந்தகம் பலம் 10
கடுக்காய்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
வாய்விளங்கம்
சுக்கு
திப்பிலி
ஏலம்
லவங்கம்
சந்தனம்
கடலைப்பருப்பு
சிகடிக்கொட்டை
சித்திரமூலம்
வகைக்குப் பலம் 1

இதைச் சூர்ணித்து, இதற்குச் சரியெடை சர்க்கரை கூட்டி, அந்தி சந்தி வேளைக்கு வராகனெடை 1 தேனிலாவது, பசுவின் நெய்யிலாவது குழைத்துப் பத்துநாள் சாப்பிடவும்

ஆயுசு வர்த்திக்கும்
அதிகப் பலனுண்டாகும்
பகலில் நக்ஷத்திரம் தெரியும்!

அவன் சிறுநீரில் செம்பை ஊறவைக்கப் பொன்னிறமா யிருக்கும்!

(அ) குஷ்டம் 18
(ஆ) கிராணி 4
(இ) மூலம் 6
(ஈ) வாதம் 84
(உ) நாள்பட்ட விஷப்பாகம்
(ஊ) சுவாசம்
(எ) சுவாசம்
(ஏ) விக்கல்
(ஐ) தலைவலி
(ஒ) வயிற்றுவலி
(ஓ) முத்திரக் கிரிச்சி
(ஔ) பறத்திரச் சிலந்தி
(ஃ) யோனிக் கவுசை

இது முதலான வியாதி தீரும்!

பசுவின் பால் மோர், தயிர், நெய், எண்ணை, வாழைப்பழம் கூட்டி வரவும்; வறுத்த உப்புக் கூட்டவும்.

## 293. சகல விஷத்திற்கு

பேய்ப் பீர்க்கஞ் செடி காய்ந்திருக்கையில், அந்தக் காயில் சிறு துவாரம் பண்ணி, அரைவராகனெடை ரசத்தைக் காய்க்குள் விட்டுத் துவாரத்தைக் களிமண்ணாலடைத்துச், செடி காயுமட்டும் பத்திரமாய்ப் பார்த்திருந்து எடுத்து அந்தக் காயை உடைத்துக் கொட்ட தூள் விழும்!

அந்தத் தூளைச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு, சகல விஷத்திற்கும் பணவெடை தூள் நாசியிலுரிஞ்ச, விஷங்களெல்லாம் முறிந்துபோம்!

## 294. தேள்விஷமிறங்க மூலிகை

(1) புற்றுமேலிருக்கிற காஞ்சோறி வேரைக் குளிசமாடி வைத்துக்கொண்டு சதகமிழுக்க விஷமிறங்கும்!

(2) இதுவும்;

கோழியெச்சம், புளியங்கொட்டையளவு வெற்றிலையில் சுருட்டி மென்று விழுங்கத் தேள் விஷ மிறங்கும்!

(3) இதுவும்;

ஆகாசக் கருடன் கிழங்கு கொட்டைப்பாக்களவு மென்று விழுங்க தேள்விஷமிறங்கும்!

(4) இதுவும்;

வெள்ளெருக்கம் பாலில் துணியை நனைத்து, அதை மயிலிற கின்மேல் சுற்றி, அதன்மேல் கோழி எச்சந் தடவிக் காயவைத்து அதைக் கொளுத்திப் புகை காட்டத், தேள் விஷமிறங்கும்!

## 295. வீரியம்

சடைக்கஞ்சா பலம் 5

முருங்கைப் பூ 20

முருங்கைப் பிசின் பலம் 20

இதை ஒருபடி ஆவின் பாலிலிட்டுக் காயும்போது,

சாதிக்காய்

சாதிபத்திரி

ஏலம்

நீர்முள்ளி விரை

வகைக்குப் பலம் 2

சூர்ணித்துக், காயிற பாலில் தூவிக் கிண்டிப் பிசின்போல் வரும் போதிறக்கி, அந்த நேரம் வராகனெடை லேகியம் சாப்பிட்டுச் சாமத்திற்குப் பிறகு, பாலும் சாதமும் சாப்பிட்டு நித்திரை செய்வது; இப்படி ஆறுநாள் சாப்பிட்டுவர, இரத்த புஷ்டியாய் வாயுவு அதமாய், அக்கினி முற்றித் தீவனம் அதிகமாய் வாங்கும்! சரீரம் இறுகும்!

மருந்து சாப்பிடும்போது, ஸ்திரீமுகம் பாராமல் கெட்டியா யிருந்து, 16 நாள் தலைமுழுகி, 17 நாள் போகிக்க, அதிகப் பலன் செய்யும்!

இச்சா பத்தியம்.

## 296. சங்கன் வேர்த் தைலம்

சங்கன் வேர் வராகனெடை 2 இடித்துப், 12படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி, மூன்றுபடி தண்ணீர் இருக்கையில் வடித்து நல்லெண்ணெ படி 1, கஷாயத்தில் விட்டு, மிளகு பலம் 1 அரைத்துப் போட்டு, மெழுகுப் பதத்தில் வடித்து, நாளு நாளைக் கொரு முழுக்கு முழுகிவரக் குஷ்டம், கிரந்தி, சூலைரோகம், சொறிசிரங்கு, கரப்பான், வண்டுக்கடி, க்ஷயம், இருமல் தீரும்!

இச்சா பத்தியம்.

## 297. வெட்டிவேர்த் தைலம்

வெட்டிவேர் பலம் 10, ஆறுபடி தண்ணீர்விட்டுக் காய்ச்சி, ஒருபடி இருக்க வடித்து, நல்லெண்ணை படி 1/2 கூட இட்டு, அதிமதுரம், பலம் 1 கிஷாயம் விட்டரைத்துக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் வடித்து, ஐந்து நாளைக் கொருமுறை முழுகிவர,

(i) மண்டைச்சூலை
(ii) குஷ்டம்
(iii) நீர்க்கோவை
(iv) மயக்கம்

(v) கண்புகைச்சல்
(vi) காது மந்தம்
(vii) இரைப்பு
(viii) இளைப்பு
(ix) சரீரக் கடுப்பு

இதுகள் தீரும்!

இச்சா பத்தியம்.

## 298. வில்வத் தைலம்

வில்வ வேர் பலம் 10, ஆறுபடி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி, ஒரு படி இருக்க வடித்து, நாள்கு நாளைக்கு ஒருமுறை முழுகிவர,

(i) மேகம்
(ii) பித்தம்
(iii) சரீர எரிவு
(iv) காந்தல்

தீரும்!

கண்ணொளி தரும்!

இச்சா பத்தியம்.

## 299. கரிசலாங்கண்ணித் தைலம்

கரிசலாங்கண்ணிச் சாறு
கற்றாழைச் சாறு
நெல்லிக்காய்ச் சாறு
நல்லெண்ணை

இவை வகைக்குப் படி 1; சாதிக்காய் பலம் 1 அரைத்து, எல்லாம் கூட்டிக் காய்ச்சி, மெழுகுப் பதத்தின்போது வடித்து, ஐந்து நாளைக்கொரு முழுக்கு முழுகிவரக், கண்ணில் தொண்ணூற்றாறு வியாதியும், தலைவலி, செவிநோய், பித்தம், உஷ்ணம், பீனசம் முதலியவை தீரும்!

## 300. பொன்னாங்கண்ணிக் கிருதம்

பொன்னாங்காணி வேர்
வெட்டி வேர்
விலாமிச்ச வேர்
ஓரிலைத் தாமரை வேர்
சிறுகீரை வேர்
வகைக்குப் பலம் 1

எல்லாம் பசுவின் பால் விட்டரைத்து, ஒரு படி பசுவின் நெய்யில் கரைத்துச் சாதிக்காய் பலம் ¼, மதுரம் பலம் ¼, மாசிக்காய் பலம் ¼, இவற்றையு மரைத்துப் போட்டுக் காய்ச்சிப், பதமானபோதிறக்கி, அந்திசந்தி வேளைக்கொரு கரண்டி நெய் பத்து நாள் சாப்பிட,

(i) மேகம்
(ii) கண் ரோகங்கள்
(iii) உஷ்ணம்
(iv) உள்சுரம்
(v) சிரங்கு
(vi) வறட்சி
(vii) அக்கரம்

இவைகள் தீரும்!

இச்சாபத்தியம்.

## 301. தூதுவளைக் கிருதம்

தூதுவளை
துளசி
கண்டங்கத்திரி
ஆடாதோடை
விஷ்ணுக்கிரந்தி
பிரமியிலை

வகைக்குப் பலம் 10; எல்லாமிடித்து, 2 படி தண்ணீரில் போட்டு, ஒண்ணரைப்படி இருக்க, வடித்து,

| | |
|---|---|
| நல்லெண்ணை படி | 1 |
| நெய் படி | 1 |
| திப்பிலி பலம் | 1 |
| சித்தரத்தை பலம் | 1 |

இதை வறுத்து, மெல்லிதா யரைத்து, எல்லாம்மான்றுகூட்டிக் காய்ச்சி, மெழுகுப் பதமான போதிறக்கி, அந்திசந்தி வேளைக் கொரு கரண்டி கொடுத்துவர,

(i) ஈளை
(ii) இருமல்
(iii) உள்சுரம்
(iv) அதிர்ப்புக்காய்ச்சல்
(v) வாயு
(vi) கபக்கட்டு
(vii) க்ஷயரோகம்

தீரும்!

இந்தக் கிருதம் சாப்பிடச்சே, மத்தியானத்திற்கு, திரிகடுகு, நெற்பொரி, வஸ்திரகாயம் பண்ணிவைத்துக் கால்பலம் சூர்ணம் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

இது சாந்தி யென்றறியவும்.

(கிருதம் - மணப்பாகு எனப்படும்; நெய்போன்ற கொட்டியான திரவவடிவ மருந்து)

## 302. அக்கினி குமாரச் சூர்ணம்

குப்பைமேனி சமூலம் பலம் 10 சூர்ணித்துச் சீரகம் பலம் 5 இதையும் சூர்ணித்து, இரண்டும் கலந்து, அந்தி சந்தி வேளைக்குச் சூர்ணம் பலம் ¼, 40 நாள் சாப்பிட,

(i) வாயுமந்தம்
(ii) உஷ்ணம்
(iii) சிலவிஷங்கள்

திரும்!

தீவனம் வாங்கும்; பசியுண்டாம்.
இச்சா பத்தியம்
(தீவனம் - உணவு)

## 303. சுராங்குச மாத்திரை

இரதம்
சுந்தகம்
அரிதாரம்
வெண்காரம்
நெல்லி
முள்ளி
கடுக்காய்
தான்றிக்காய்
கரந்தம்
வேர்க்கொம்பு
மிளகு
திப்பிலி

வகைக்கு வராகனெடை 1

சுத்தி பண்ணின வாளம் வராகனெடை 10

சுத்தி பண்ணி, ஒரு நாளைக்கொரு சாமமாக நாலு நாளரைத்து, மிளகுப் பிரமாணம் மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, சுரங்களுக்கெல்லாம் இஞ்சி, ஓமம், சீரகம் இவைகளில் ஒரு மாத்திரை கொடுக்கச், சகல சுரங்களும் திரும்!

புளி தள்ளவும்.

(வேர்க்கொம்பு - சுக்கு அல்லது அதிமதுரம்; இரதம்-பாதரசம்)

### 304. சுரத்திற்கு மத்தியானக் குளிகை

இரதம்
லிங்கம்
கௌரிப்பாஷாணம்
தொட்டிப்பாஷாணம்
துத்தம்
துருசு
வகைக்கு வராகனெடை 1
கந்தகம் வராகனெடை 3

இவை சுத்திபண்ணிக், கையாந்தகரைச் சாற்றால், இரண்டுசாமமரைத்துப், பயறளவு மாத்திரை திரட்டி. நிழலிலுர்த்தி, ஒரு மாத்திரை முலைப்பாலிலாவது, சுக்குக் கஷாயத்திலாவது உரைத்துக் கொடுக்க, மத்தியானத்தில் சுரம் விடும்!

புளி, புகையிலை தள்ளவும்.
ஒரு மாதம் மட்டும் நல்லெண்ணை ஆகாது!
விளக்கெண்ணை முழுகவும்.
கைகண்டது.

### 305. சன்னி ஆனந்த வயிரவன் மாத்திரை

கௌரிப் பாஷாணம்
லிங்கம்
துருசு
வகைக்கு வராகனெடை 1

முலைப்பாலில் ஒருசாம மரைத்துப் பச்சைப் பயறளவு மாத்திரை திரட்டி, நிழலிலுர்த்தித், தேனிலாவது முலைப்பாலிலாவது ஒரு மாத்திரை கொடுத்துவரச், சன்னிசுரங்களும் தீரும்!

சரீரத்தில் வீக்கம் கண்டால், சிறுகீரையாகுதல், பருத்தி வேராகுதல் அவித்த தண்ணீர் கொடுத்துவர, வீக்கம் வற்றும்.

வாய் வெந்தால், மிளகவித்த தண்ணீர் கொடுக்கக் குணமாம்

## 306. ஆனந்த வயிரவன் மாத்திரை

நாவி

லிங்கம்

கந்தகம்

வெங்காரம்

மிளகு

இது சமனாகப், பழச்சாறு விட்டு ஒரு சாமமரைத்துக், குன்றியளவு மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி, ஒரு மாத்திரை பித்தச் சுரத்திற்குச் சீரகக் கஷாயத்திலும், வாதசுரத்திற்குச் சுக்குக் கஷாயத்திலிடவும்.

சிலேஷ்ம சுரத்திற்குக் கடுகு ரோகிணிக் கஷாயத்திலுமிடவும் தீரும்!

## 307. சுராங்குச மாத்திரை

மனோசிலை

அரிதாரம்

இரதம்

முத்தக்காசு

இது சமனாகச் சிறுபாகைச் சாறுவிட்டொரு சாமம்ரைத்துப், பயறளவு மாத்திரை திரட்டி, நிழலிலுர்த்தி, வைத்துக்கொண்டு சுரங்களுக்கெல்லாம் தேனிலொருமாத்திரை கொடுத்துவரவும்.

அனுபானக் கிஷாயங்களில் கொடுக்கத்தீரும்!

(அனுபானம் - மருந்தைக் கலந்து கொடுக்கப் பயன்படும் துணைப் பொருள்; கிஷாயம் - கஷாயம்)

## 308. கட்டுவாதி மாத்திரை

அபின்

அதிவிடையம்

கோரோசனை
ஓமம்
சாதிக்காய்
லவங்கம்
இலவம்பிசின்

இது சமனாகக் கூட்டிக், குப்பைமேனிச் சாற்றில் ஒருசாம மரைத்துக் குன்றியளவு மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு வட்டத்திருப்பிக் கிஷாயத்தில் இரண்டு மாத்திரை கொடுத்துவர கழிச்சலென்னப்பட்ட அதிசாரம் தீரும்!

வாழைக்கச்சல், அரைக்கீரை, அத்திப்பிஞ்சு கூட்டவும்.

## 309. சுராங்குசம்

(1) சுக்கு
மிளகு
திப்பிலி
கிராம்பு
கருஞ்சீரகம்
சாதிக்காய்
ஏலம்
சாதிப்பத்திரி
வாளம்
லிங்கம்
வகைக்கு வராகனெடை

இதைப் பழச்சாற்றில் ஒரு சாமமரைத்துப் பயறளவு மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, இரண்டு மாத்திரை சுக்கு, கோரோசனை கூட்டிக், கஷாயமிட்டுக் கொடுத்துவரச் சன்னிச்சுரங்கள் தீரும்!

பிள்ளைகளுக்கு ஒரு மாத்திரை

(2) சீரகம், கொத்தமல்லி, தான்றிக்காய், கஷாயத்திலிட்டுவரப் பிள்ளைகள் கணை தீரும்!

(3) ஓமப்பாலில் ஒரு மாத்திரை கொடுக்க, மாந்த சுரங்கள் தீரும்!

புளி தள்ளவும்.

## 310. பாலசஞ்சீவி மாத்திரை

காந்தம்
சீனிக்காரம்
துருசு
வெங்காரம்
கந்தகம்
இரசம்
துத்தம்
வகைக்கு வராகனெடை 2

இதைக் கல்வத்திலிட்டு நெக அரைத்து, அதில் பாதித்தூளை ஒரு சிறு சட்டியிலிட்டுப் பரப்பிக், கையாந்தகரைச் சாறு ஆழாக்கு, பழச்சாறு ஆழாக்கு மருந்தின் மேல்விட்டு மேலோடு மூடி, வேடுகட்டி, நெல்லுப் பானையில் ஏழுநாள் புதைத்துப் பின்பெடுக்க, நீறானமாயிருக்கும்; அதைச் சூரியப் புடத்தில் வைக்க இறுகும்!

அதைக் கலுவத்திலிட்டு வாழைப் பூச்சாற்றில் இரண்டு சாம மரைத்துப் பணவெடை ப்ரமாண மாத்திரை திரட்டி, நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு, தேனில் ஒரு மாத்திரை கொடுத்து வர அஷ்ட குன்மம்·

சுக்குத்தூளில் ஒரு மாத்திரை கொடுத்துவரச், சோகை பாண்டு, 60 ரோக முதலானதும் தீரும்!

இந்த மாத்திரை இரண்டு நேரமும், மிருபது நாள் கொடுத்து வரவும்.

இச்சாபத்தியம்.

வெந்நீர் பரிமாறவும்.

(நெக அரைத்து-மிகவும் நுணுங்க அரைத்து)

## 311. அதிசாரக் கிராணிக்கு மாத்திரை

சாதிக்காய்
அதிவிடையம்
கிராம்பு
சாதிப்பத்திரி
தாளிசப்பத்திரி
இலவங்கப்பத்திரி
இலவங்கப்பட்டை

இது சமனாகக் கொண்டு, பொன்னிறமாய் வறுத்துப், பொடி செய்து, பரும் மாதுளம்பழம் கொண்டு வந்து உள்விரையெடுத்துப் போட்டு, இந்தப் பொடியை, அந்தப் பெட்டியிலடைத்து, மற்ற ஓட்டில் மேல்மூடிச் சீலைமண் செய்து, கொஞ்சப்புடம் போட்டு, மேல்தோல் கருகப் பார்த்து எடுத்துக், கஞ்சா இலைச்சாறு விட்டரைத்துத், தூதுவிளங்காய்ப் பிரமாண மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, ஒரு மாத்திரை பசுவின் தயிராவது, வெந்தயக் கஷாயமாவது, இதுகளில் கொடுக்கவும்.

அதிசாரக் கிராணி என்னப்பட்டது தீரும்!

இச்சா பத்தியம்

வெந்நீர் பரிமாறவும்.

## 312. மகாகோடாசுளி மாத்திரை

இரவி
நாவி

கந்தகம்
இரசம்
பொன்னரிதாரம்
கடுக்காய்த்தோல்
நெல்லி
முள்ளி
தான்றிக்காய்
சுக்கு
மிளகு
திப்பிலி
வெங்காரம்-இவை

வகைக்கு வராகனெடை 1; வாளம் சுத்தியானது வராகனெடை $\frac{1}{2}$ இவற்றைக் கலுவத்திலிட்டுக், கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்துப், பழச்சாறுவிட் டொருநாள் அரைத்து, உளுந்துப் பிரமாணமாய் மாத்திரை திரட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு, ஆறு மாத்திரை விளக்கெண்ணையில் கொடுக்கச் சுகபேதியாம்!

பசுவின் நெய்யில் கொடுக்கக் கிராணி தீரும்!

பாம்பின் கடிவாயிலுறைத்துத் தடவிகட்ட விஷம் தீரும்!

இஞ்சிச் சாற்றில் உறைத்துக் கொட்டினவாயில் தடவ தேள் விஷ மிறங்கும்!

நெய்யில் கொடுக்கப், பொருமல் தீரும்!

கஞ்சாச் சாற்றில் கொடுக்கக், கைகால் ஒச்சல் தீரும்!

நொச்சிச் சாற்றில் உறைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசிக், கண்ணிலும் கலிக்கமிட வீக்கம் தீரும்!

நெல்லிக்காய்ச் சாற்றில் கொடுக்க, சுரம் தீரும்!

நொச்சிச் சாற்றில் கொடுக்கப் பிரமேகம் தீரும்!

வெள்ளாட்டுப் பாலில் கொடுக்க, இரத்தப்பிரமேகம் தீரும்!

வெல்லத்தில் கொடுக்கச் செவ்வட்டைக் கடி தீரும்!

தகர இலைச் சாற்றில் கொடுக்க, செரியாக்குணம் தீரும்!

கரந்தை இலைச்சாற்றில் கொடுக்க, தீபன முண்டாகும்! சுவாசம் தீரும்!

புளியங்கொட்டை ஊறின தண்ணீரில் கொடுக்க உஷ்ணம் தீரும்!

திரிபாலைக் கஷாயத்தில் கொடுக்க, மேலரிவு தீரும்!

பாக்கு வெற்றிலையுடன் கொள்ள முகவசீகரம்!

தேனில் கொடுக்க, வயிறு உப்புசம் தீரும்! நீர் இறங்கும்!

கொட்டைப்பாசிச் சாற்றில் கொடுக்கச், செம்பட்டைமயிர் கறுக்கும்!

முத்தக்காசுக் கஷாயத்தில் கொடுக்கக் கழிச்சல் தீரும்!

முருங்கைப்பட்டைச் சாற்றிலும் நெய்யிலும் கலந்து கொடுக்கச் சூலைக்கட்டு தீரும்!

கழுநீரில் கொடுக்க வாயு தீரும்!

பிரமியிலைச் சாற்றில் கொடுக்க, மாந்தம் தீரும்!

சாதிக்காய்த் தூளில் கொடுக்க, யோசனை யுண்டாகும்!

நொச்சிசாற்றில் கொடுக்க இருமல் தீரும்!

வெள்ளாட்டுப் பாலில் கொடுக்க, க்ஷயங்கள், இருமல் தீரும்!

நெல்லிக்காய்ச் சாற்றில் கொடுக்க, மாரெரிவு தீரும்!

நல்ல வெல்லத்தில் கொடுக்க, மலக்கட்டு தீரும்!

ஊமத்தை இலைச் சாற்றில் கொடுக்கச் சன்னி தீரும்!

கோமயத்தில் கொடுக்கச் சகல விஷங்களும் தீரும்!

தண்ணீரில் கொடுக்கப் பத்தியத்தழுவணை தீரும்!

முள்ளங்கிச் சாற்றில் கொடுக்க, மூலம் தீரும்!

இலவம் விரையரைத்து, அதில் வைத்துக் கொடுக்கப் பிள்ளை உண்டாகும்!

சர்க்கரையில் கொடுக்கப், பயித்தியம் தீரும்!

தண்ணீர்விட்டான் கிழங்கு, நன்னாரிவேர், கஷாயமிட்டு அதில் கொடுக்க, நீரழிவு தீரும்!

நொச்சிச் சாற்றில் கொடுக்க வாதச்சுரம் தீரும்!

சுக்குக் கஷாயத்தில் கொடுக்கப் பித்தச்சுரம் தீரும்!

திரிகடுகுத் தூளிலும், இஞ்சி ரசத்திலும் கொடுக்கச் சிலேஷ்மச் சுரம் தீரும்!

அசமதாகப் பொடியில் கொடுக்க, மறால் தீரும்!

கொத்தமல்லிக் கஷாயத்தில் கொடுக்கப் பழஞ்சுரம் தீரும்!

நெய்யிவிடச் சீதச்சுரம் தீரும்!

இஞ்சிச் சாற்றில் கொடுக்க, விஷச்சுரம் தீரும்!

சித்தாமுட்டிக் கஷாயத்தில் கொடுக்க, வாதச்சுரம் தீரும்!

மோரில் கொடுக்கக் குளிர்காச்சல் தீரும்!

பசுவின் வெண்ணையில் கொடுக்க, மாரிளைப்பு தீரும்!

தண்ணீரிலுரைத்துக் கண்ணிலிடத், தலைப்பாரம் தீரும்!

கோவைச்சாற்றில் கொடுக்கத் தாதுவிருத்தி யாகும்!

வசம்புத் தூளில் கொடுக்கச், சகல கடிவிஷங்களும் தீரும்!

சீரகத்தூளில் கொடுக்கத், தாகம் தீரும்!

குளிமீட்டானாகிய நாய்த்துளசிச் சாற்றில் கொடுக்கச், சுரோணிதவாதம் தீரும்!

சாதிக்காய்த்தூளில் கொடுக்க, இரத்தக்கழிச்சல் தீரும்!

இலவம்பிசின் ஊறின நீரில் கொடுக்க, வீக்கம் தீரும்!

தயிரில் கொடுக்கச் செரியாக்குணம் தீரும்!

சீரகத் தூளிலும், சர்க்கரையிலும் கொடுக்க, உஷ்ணம் தீரும்!

இந்த மாத்திரை அனுபானமறிந்து கொடுக்கச் சகல வியாதியும் தீரும!

இச்சா பத்தியம்.

மிளகு நீரும் சாதமும் சாப்பிடவும்.

வெந்நீர் பரிமாறவும்

வேங்கடாசலபதி திருவருளால் துணையுண்டாக வேண்டும்.

(தீபனம் - பசி; மாறல் - மயக்கம்; மகாகோடா சுளி என்று இருப்பது, மகாகோடா சூரி என்று இருக்கவேண்டும். மகாகோடா சூரி என்றே, சட்டைமுனி வாதகாவியம் 1000 என்ற நூலில் உள்ளது.)

நூல் முற்றும்

# பின்னிணைப்பு

1. 1 பலம் — 35 கிராம்
2. துருசு — மயில்துத்தம்
3. வெங்காரம் — Borax
4. நவச்சாரம் — Ammonium chloride
5. இரசம் — Mercury
6. அசமதாகம் — ஓமம்
7. வள்ளம் — 2 அல்லது 4 படி
8. அன்னபேதி — Green Vitriol
9. வாயுவிளங்கம் — Small elliptic-cuspidate leaved wind berry
10. மயில்துத்தம் — Blue Vitriol
11. அரப்பொடி — இரும்புத்தூள்
12. மனோசிலை — Arsenicum rubum
13. குன்மம் — Ulcer
14. 1 யாமம் — 3 மணி நேரம்
15. 1 சாமம் — 3 மணி நேரம்
16. பூரகம் — Red species of little millet; Panicum egyptiacum
17. சாதிலிங்கம் — Vermilion; Red sulphate of mercury
18. தாளிசப்பத்திரி — Wild-Cinnamon
19. சாதிப்பத்திரி — Mace
20. சாதிக்காய் — Nutmeg
21. பூலாங்கிழங்கு — Root of long Zedoary
22. சவ்வாது — Secretion of civet cat
23. புனுகு — Civet

24. நீலாஞ்சனக்கல் — Sulphide of Autimony

25. வெடியுப்பு — Saltpetre

26. பச்சைக் கற்பூரம் — Medicated Camphor

27. கோஷ்டம் — Costus Shrub; Saussurea lappa

28. கோரோசனை — Bezoar taken from the stomach of cows

29. *1 வராகன் எடை — 4 கிராம்*

30. 1 பண எடை — *488 மில்லிகிராம்*

31. வெருகடி — கண்டுவிரல் நீங்கலாக, ஏனைய 4 விரல்களைச் சேர்த்து, ஒரு பொருளை எடுத்தால், எவ்வளவு எடுக்க இயலுமோ, அந்த அளவு.

32. தும்பை — Leucas Aspera

---